# கல்கி




KALKI ஜூன் 29, 1952 4 அணா

# "லக்ஸ் டாய்லட் சோப்

என்
சருமத்திற்கு
விசேஷ
நன்மையளி-
க்கிறது"

என்று சொல்கிறார்

**பி.எஸ்.ஸரோஜா**




இனிய மணத்துடன் கூடிய
இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான
சோப் உங்கள் சருமத்தை
வசீகரமாகச் செய்யும்!

ஸினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 324-X30 TM

# கல்கி பொருளடக்கம்


மலர் 11
இதழ் 48

1952 ஜூன் 29

நந்தன ஆனி 16


| | | | |
|---|---|---|---|
| அமெரிக்கா கண்டறியாத அரசியல் குழ்நி! | (தலையங்கம்) | ... | 3 |
| ஒரே பாய்ச்சல்! | (கார்ட்டூன்) | ... | 4 |
| ஆங்கிலேயரும் அதிசயித்தனர்! | ... | ... | 5 |
| அட்டைப்பட விளக்கம் | ... | ... | 5 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 9 |
| திருநெல்வேலித் திருவிழா | ரா. கி. | ... | 13 |
| தமிழ்க் களஞ்சியம் | டி. கே. சி. | ... | 19 |
| சொல்ல வந்தான்! | வி. எஸ். ஆர். | ... | 23 |
| மூன்று ராஜகுமாரர்கள் (பாப்பா மலர்) | சீதா | ... | 29 |
| சுந்தரியின் கண்ணீர் | பிருந்தா | ... | 33 |
| அருவிக்கரை ஆசிரமம் | சுதர்சன்—ரா. வீ. | ... | 39 |
| வழக்கும் தீர்ப்பும் | வேம்பு | ... | 47 |
| குரங்கு ஆட்டம்! | ரகு | ... | 50 |
| ஆரோக்கிய ரகசியம் | வி. என். குமாரசாமி | ... | 53 |
| காதல் பாதை | கே. எஸ். எஸ். ராகவன் | ... | 56 |
| நீ தெய்வம் | எஸ். வி. நாதன் | ... | 59 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


விற்பனையாளர்கள்:

கமானி என்ஜினீயரிங் கார்ப்பொரேஷன் லிமிடெட்
நெ. 2, ஜோன்ஸ் தெரு, பிராட்வே, மதராஸ்-1

ஸ்டாக்கிஸ்டுகள்: காமினேனி பார்மிங் கார்ப்பொரேஷன், வராகப்பட்டணம் & குடிவாடா; S. பாபண்ணா ஷெட்டி, ஜானஸ்பெட்; சுந்தரம் சன்ஸ், 42, கிருஷ்ணராயன் குளத் தெரு, மதுரை; பார்மிங் மிஷினரி & ஸர்விஸஸ், பெஸண்ட் ரோடு, பக்கிங்ஹாம்பேட் போஸ்ட், விஜயவாடா.

ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (சௌத் இந்தியா) லிமிடெட்
கோயமுத்தூர் - கோழிக்கோடு - உதகமண்டலம் - திருவனந்தபுரம்

வெப்ஸ் பார்ம் மெகானிஸேஷன், 30, மகாத்மா காந்தி ரோடு, பெங்களூர் & மைசூர்
அருண் ஆடோமோபைல்ஸ், 103, அலெக்ஸாண்ட்ரா ரோடு, செகந்திராபாத்



ஜுலை 11ம் முதல் தமிழ்நாடெங்கும்
வெளிவருகிறது
மூன்று
பிள்ளைகள்
ஜெமினி சித்திரம்...

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 48

# அமெரிக்கா கண்டறியாத அரசியல் குஸ்தி!

அமெரிக்க ஜனாதிபதி ஹாரி ட்ரூமன் போட்ட முதலாவது அணுகுண்டு ஹிரோஷிமா நகரை முற்றிலும் நாசம் செய்தது. அவர் எறிந்த இரண்டாவது அணு குண்டு நாகசாகி நகரை மாத்திரம் நாசம் செய்தது.

சில தினங்களுக்கு முன் ட்ரூமன் வீசிய அரசியல் அணு குண்டோவெனில், அமெரிக்கா தேசம் முழுவதையும் கலக்கி விட்டது.

"நான் மறுபடியும் ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை" என்று ட்ரூமன் கூறியது அமெரிக்க மக்களைத் திகைக்கச் செய்துவிட்டது.

சென்ற தடவை ஜனாதிபதி தேர்தலுக்கு ட்ரூமன் நின்றபோது அவர் தோல்வி அடைவது நிச்சயம் என்று அரசியல் ஜோசியர்கள் சத்தியம் செய்தனர்; அமெரிக்கப் பத்திரிகைகளும் வோட்டுக் கணக்கெடுத்து ட்ரூமன் வெற்றி பெற மாட்டார் என்று நிச்சயமாக உலகத்துக்கு அறிவித்தன.

ஆனால், ஏழை விவசாயியின் குடும்பத்தில் பிறந்து, பத்திரிகாலயத்தில் பத்திரிகை மடிப்பவராகவும் குமாஸ்தாவாகவும் வாழ்க்கையை ஆரம்பித்த ட்ரூமன் எல்லோரையும் ஏமாற்றி விட்டு, ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார்.

அதன் காரணமாக ட்ரூமனின் செல்வாக்கு உச்ச நிலையை அடைந்தது. பிரசாரத்திறமையினால் எத்தகைய எதிர்ப்பையும் தகர்த்து எறிந்து விடலாம் என்பதை ட்ரூமன் நிரூபித்துக் காட்டினார்.

எனவே, ட்ரூமன் இருக்கும் வரையில் ஜனாதிபதித் தேர்தல் விஷயமாகக் கவலைப் படவேண்டாம் என்று எண்ணிக் கொண்டிருந்த ஜனநாயகக் கட்சியினர் (Democratic party) இப்போது ட்ரூமனின் தீர்மானத்தைக் கேட்டதும் திடுக்கிட்டு விட்டார்கள்.

ட்ரூமனின் எதிரிகளான குடியரசுக் கட்சியினரும் (Republican party) அவரது அறிவிப்பைக் கேட்டுத் திகைத்துப் போயினர். ஏனெனில், ட்ரூமனைக் குறியாக வைத்துக் குடியரசுக் கட்சியினர் தயாரித்திருந்த பிரசார பீரங்கிகள் எல்லாம் அவர்களுக்கு உதவாமல் வியர்த்தமாகி விட்டன அல்லவா?

இவ்வாறாக, ட்ரூமன் சென்ற தடவை தேர்தலில் வெற்றி பெற்று எல்லாரையும் ஏமாற்றினார்; இப்போதோ தாம் தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை என்று திடீரென்று அறிவித்து எல்லாரையும் ஏமாற்றி விட்டார்!

* * *


இன்று அமெரிக்கா செல்வத்திலும் பலத்திலும் இணையற்று விளங்குவதால், உலகம் முழுதும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் சிரத்தை காட்டுவது இயல்பே ஆகும். ஏனெனில் உலக சமாதானமோ அல்லது உலக யுத்தமோ அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு யார் வருகிறார் என்பதையே பெரிதும் பொறுத்திருக்கிறது.

நாலு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நவம்பர் மாதத்திலே அமெரிக்க ஜனாதிபதி பதவிக்குத் தேர்தல் நடைபெறுவது வழக்கம்.

ட்ரூமன் இரண்டாவது தடவையாக அப் பதவிக்கு வந்து அடுத்த நவம்பர் மாதத்துடன் நாலு வருஷங்கள் பூர்த்தியாகின்றன.

எனவே, அமெரிக்காவில் உள்ள ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி என்ற இரண்டு மாபெரும் கட்சிகளும் தேர்தல் போரை இப்போது வெகு தீவிரமாகத் தொடங்கியிருக்கின்றன.

# ஒரே பாய்ச்சல்!




**உணவுக் கண்ட்ரோலை நீக்கிய பிறகு சென்னை மாகாண மெங்கும் உணவு தானியங்களின் விற்பனை சீராக நடந்து வருகிறது.**

---

சென்ற இருபது ஆண்டுகளாக ஜனநாயகக் கட்சி அபேட்சகர்களே ஜனாதிபதியாக இருந்து வந்திருப்பதால், மேற்படி பதவியை இம்முறையும் கைநழுவ விடக் கூடாது என்பதில் அவர்கள் மிகுந்த பிடிவாதம் காட்டி வருகிறார்கள்.

ஜனாதிபதி பதவியை இந்தத் தடவையும்

இவ்விருவரும் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டு, கண்ணியமற்ற முறையில் ஒருவரை ஒருவர் தாக்க முற்பட்டிருப்பதாயும், இது அமெரிக்கா கண்டறியாத ஓர் அரசியல் குஸ்தியாகக் கருதப் படுகிறது என்றும் பத்திரிகைச் செய்திகள் வர்ணிக்கத் தொடங்கி யிருக்கின்றன.



**உணவுக் கண்ட்ரோலை நீக்கிய பிறகு சென்னை மாகாண மெங்கும் உணவு தானியங்களின் விற்பனை சீராக நடந்து வருகிறது.**

சென்ற இருபது ஆண்டுகளாக ஜனநாயகக் கட்சி அபேட்சகர்களே ஜனாதிபதியாக இருந்து வந்திருப்பதால், மேற்படி பதவியை இம்முறையும் கைநழுவ விடக் கூடாது என்பதில் அவர்கள் மிகுந்த பிடிவாதம் காட்டி வருகிறார்கள்.

ஜனாதிபதி பதவியை இந்தத் தடவையும்

இவ்விருவரும் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டு, கண்ணியமற்ற முறையில் ஒருவரை ஒருவர் தாக்க முற்பட்டிருப்பதாயும், இது அமெரிக்கா கண்டறியாத ஓர் அரசியல் குஸ்தியாகக் கருதப் படுகிறது என்றும் பத்திரிகைச் செய்திகள் வர்ணிக்கத் தொடங்கி யிருக்கின்றன.

இவ்விதமே ஜனநாயகக் கட்சியினரும் தாங்கள் சாதிக்கப் போகும் காரியங்களைப் பிரமாதமாக விளம்பரப் படுத்தி வருகிறார்கள்.

அடுத்த மாதம் நடக்கப்போகும் குடியரசுக் கட்சி மகாசபை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவதற்காக அந்தக் கட்சியைச் சேர்ந்த ஓர் அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும். அது போலவே ஜனநாயகக் கட்சி மகா சபையும் ஓர் அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும்.

அப்போதுதான் தற்போதையக் குழப்பம் தணிந்து அமெரிக்க அரசியல் அரங்கத்தில் இரண்டே அபேட்சகர்கள் நிற்பார்கள். அவர்களில் ஒருவரை ஜனநாயகக் கட்சியினரும் மற்றொருவரைக் குடியரசுக் கட்சியினரும் ஆதரித்துப் பிரசாரம் செய்வார்கள்.

அதுவரையில் அமெரிக்க அரசியல் கட்சிகளின் நிலைமை மிகவும் குழப்பமாகவும் கொந்தளிப்பாகவும்தான் இருந்து வரும்.

# ஆங்கிலேயரும் அதிசயித்தனர்!

கிரிக்கெட் பந்து விளையாட்டுத்தான் 'விளையாட்டுகளுக்கு எல்லாம் ராஜா' என்று கூறப்படுகிறது. விருப்பு வெறுப்பு அற்ற நேர்மைக்கும் ஏகபாவத்துக்கும் கூட கிரிக்கெட்டை எடுத்துக் காட்டாகப் பிரிட்டிஷார் கூறுவது உண்டு. மேற்படி பந்தாட்டத்தில் வெற்றி தோல்வியைக் காட்டிலும் ஆடும் வழியே முக்கியமானது என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம். அதாவது சிறந்த வழியைப் பின்பற்றி, கிரிக்கெட் 'சாஸ்திர'ப்படி விளையாடுவதுதான் முக்கியமே ஒழிய, வெற்றி தோல்வியை அவ்வளவு முக்கியமாகக் கருதுவதற்கில்லை.

ஏற்கெனவே இங்கிலாந்து கோஷ்டிக்கும் இந்தியா கோஷ்டிக்கும் இந்தியாவில் நடந்த கிரிக்கெட் பந்தய விளையாட்டுகளில் இந்தியா கோஷ்டியினர் தங்களுடைய அபாரமான திறமையைக் காட்டியதுடன், அமோக வெற்றியும் பெற்றனர்.

ஆனால் சில தினங்களுக்கு முன் இங்கிலாந்தில் நடந்த இரண்டு பந்தயங்களிலும் இந்தியா கோஷ்டி வெற்றி பெறவில்லை என்பதற்காக, கிரிக்கெட் பிரியர்களோ ரசிகர்களோ மனச் சோர்வு அடைய வேண்டியதில்லை.

இங்கிலாந்தின் குழுவிலே, ஸ்டேதாம், ட்ரூமன் முதலியவர்களை உத்தேசிக்கும்போது இந்தியா கோஷ்டியினர் இரண்டாவது 'டெஸ்ட்' விளையாட்டில் இன்னிங்ஸ் தோல்வி ஏற்படாமல் தங்களுடைய கௌரவத்தைப் பாதுகாத்துக் கொண்டது பாராட்டத்தக்கது. அதற்கு முக்கிய காரணஸ்தராய மன்காடை இந்தியர்கள் வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். மன்காட் 184 ரன்கள் எடுத்து இந்தியர்களிடையே ஒரு புதிய ரெகார்டை ஸ்தாபித்து விட்டார். அவருடைய ஆட்டத் திறமையை ராணி எலிஸபெத்தும் இதர பிரிட்டிஷ் பிரமுகர்களும் பாராட்டியுள்ளனர்.

இங்கிலாந்துக்கு உரிய விளையாட்டான கிரிக்கெட்டில் ஆங்கிலேயரும் அதிசயிக்கும்படி மன்காட் ஆடியது இந்தியர்கள் பெருமைப்படக் கூடிய விஷயம் அல்லவா!

★ ★ ★

<u>அட்டைப்பட விளக்கம்</u>

"பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்"

என்ற கவிமணியின் பாடலைப் படிக்கும் பிள்ளைகள் பலர், அந்த அருமையான வரிகளுடன்,

"சோலைகளில் மாங்கனிகள் தூங்க வேண்டும்
சொகுஸாக அவை பறித்துத் தின்ன வேண்டும்!"

என்று சுய கவனம் செய்து சேர்த்துக் கொள்ள விரும்புவதில் வியப்பு ஒன்றுமில்லை.

பள்ளிக் கூடங்கள் கோடை விடுமுறைக்கு மூடும் விஷயம் இந்த மாமரங்களுக்கும் எப்படியோ தெரிந்து போய் விடுகின்றன. அந்தச் சமயம் பார்த்துத்தான் மாமரங்கள் குலை குலையாகக் காய்த்துத் தொங்குகின்றன. சிறுவர்களின் கண்ணையும் மனசையும் அவை ஒருங்கே கவர்கின்றன.

மாந்தோட்டங்களுக்குள் புகுவதிலும், மரத்தின்மேல் ஏறுவதிலும், கிளைகளிலே உல்லாசமாக உட்கார்ந்து ஊஞ்சல் ஆடுவதிலும் பிள்ளைகளுக்குத் தனிப்பட்ட உற்சாகம் ஏற்படுகிறது.

கிளைகள் ஊஞ்சலைப் போல் ஆடினாலும் ஆடாவிட்டாலும் பாதகமில்லை. கால்களையாவது தாராளமாக ஆட்டலாம் அல்லவா!

அது போலவே, மாமரத்தில் காய்த்துத் தொங்குவது கனியா, காயா என்றும் கவலைப்பட வேண்டியதில்லை. கையை நீட்டிப் பறித்துத் தின்னும் வசதியிருந்தால், அது காயாயிருந்தாலும் தேவாமிருதந்தான்!

புளிப்பா! யார் சொன்னது! கன்றால் ருத்திரத்தையும் அக்ஷர கணிதத்தையும் விடவா மாங்காய் புளிக்கப் போகிறது! இல்லவே இல்லை!

அடடா! அவ்வளவு உல்லாஸமான விடுமுறைக் காலம் முடிந்து விட்டது. பள்ளிக்கூடம் திறந்து விட்டது. பிள்ளைகளே! மா மரக் கிளைகளிலிருந்து தயவு செய்து கீழே இறங்குங்கள். அவரவர்களுடைய பள்ளிக்கூடத்தை நோக்கி வேகமாக நடையைக் கட்டுங்கள்.




## அத்தியாயம் 35

## “வேளை நெருங்கி விட்டது!”

**நூ**று வருஷங்களுக்கு முன்பு கட்டப்பட்டு, இப்போது பாழடைந்து காடு அடர்ந்திருந்த பள்ளிப் படைக் கோவிலை முன்னொரு தடவை நாம் பார்த்திருக்கிறோம். ஆழ்வார்க்கடியான் இங்கே ஒளிந்திருந்து தான் ரவிதாஸன் முதலியவர்களின் சதியைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டான். அதே இடத்துக்கு இப்போது வந்தியத்தேவனும் மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

பாழடைந்த பள்ளிப் படையின் ஒரு பக்கத்துச் சுவர் ஓரமாக வந்தியத் தேவனையும் அவன் குதிரையையும் அழைத்து வந்தார்கள்.

“அப்பனே! சற்று நீ இங்கேயே இரு! உன்னைக் கூப்பிட வேண்டிய சமயத்தில் கூப்பிடுகிறோம். தப்பித்துச் செல்லலாம் என்று கனவு காணாதே! பழக்கப்பட்டவர்களைத் தவிர வேறு யாரும் இக் காட்டுக்குள் வரவும் முடியாது; வெளியேறவும் முடியாது. அப்படி வெளியேற முயன்றால், நிச்சயம் உயிரை இழப்பாய்!” என்றான் ரவிதாஸன்.

“அப்படி நான் வழி கண்டு பிடித்துப் போகப் பார்த்தால் நீ மந்திரம் போட்டுக் கொன்று விடுவாய்! இல்லையா, மந்திரவாதி!” என்று கூறி வந்தியத் தேவன் நகைத்தான்.

“சிரி, சிரி! நன்றாய்ச் சிரி!” என்று சொல்லி, ரவிதாஸனும் சிரித்தான்.

அச் சமயம் பார்த்து எங்கேயோ தூரத்தில் நரி ஒன்று ஊளையிடத் தொடங்கியது. அதைக் கேட்டுப் பக்கத்தில் எங்கேயோ கோட்டான் ஒன்று முனகியது.

வந்தியத் தேவனுடைய உடல் சிலிர்த்தது. குளிரினால் அல்ல. அடர்ந்த அந்தக் காட்டின் மத்தியில் வாடைக் காற்றுப் பிரவேசிக்கவும் பயந்ததாகக் காணப்பட்டது. ஏன்? அங்கே மழைகூட அவ்வளவாகப் பெய்ததாகத் தெரியவில்லை. தரையில் சில இடங்களில் மட்டும் மழைத் துளிகள் சொட்டி ஈரமாயிருந்தது. காற்று இல்லாதபடியால் இறுக்கமாக இருந்தது. அங்கே வந்து சேர்வதற்குள் வந்தியத் தேவனுடைய அரைத் துணி உலர்ந்து போயிருந்தது. சுற்றிக் கட்டியிருந்த துணிச் சுருள் மட்டும் ஈரமாயிருந்தது. அதை எடுத்து விரித்துப் பக்கத்தில் கிடந்த பாறாங் கல்லின் மீது உலர்த்தினான். அதே கல்லின் ஒரு மூலையில் வந்தியத் தேவன் உட்கார்ந்து பள்ளிப் படைச் சுவரின் மீது சாய்ந்து கொண்டான். அவனுக்குக் காவலாக அருகில் ஒருவன் மட்டும் இருந்தான்.

**ச**ற்றுத் தூரத்தில் காட்டின் மத்தியில் ஏற்பட்டிருந்த இடைவெளியில் அவனுடன் வந்தவர்களில் மற்றவர்கள் வட்ட வடிவமாக உட்கார்ந்தார்கள். பள்ளிப் படைக்கு உள்ளேயிருந்து ஒருவன் பழைய சிம்மாதனம் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து போட்டான். அதில், ‘சக்கரவர்த்தி’ என்று அழைக்கப்பட்ட சிறுவனை உட்காரச்

கல்கி

செய்தார்கள். தீவர்த்திகளில் இரண்டை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவற்றை அணைத்து விட்டார்கள். அவ்விதம் தீவர்த்திகளை அணைத்தபோது எழுந்த புகை நாலாபுறமும் சூழ்ந்தது.

"ராணி இன்னும் வரவில்லையே?" என்றான் ஒருவன்.

"சமயம் பார்த்துத்தானே வர வேண்டும்? இரண்டாவது ஜாமத்திலேதான் நானும் வரச் சொல்லியிருக்கிறேன். அதுவரையில் வழுதி குலத்துப் புகழ் மாலையை யாராவது பாடுங்கள்!" என்றான் சோமன் சாம்பவன்.

இடும்பன்காரி உடுக்கு ஒன்றை எடுத்து இலேசாக அதைத் தட்டினான். தேவராளன் ஏதோ ஒரு பாட்டுப் பாடத் தொடங்கினான்.

**வ**ந்தியத் தேவன் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான்; கேட்டுக் கொண்டுமிருந்தான். 'வழுதி குலம்' என்பது பாண்டிய குலம் என்று அவன் அறிந்திருந்தான். பாடல் ஏதோ ஒரு சோகப் பிரலாபமாக அவன் காதில் தொனித்தது. உடுக்கின் நாதமும் சோகப் பாடலின் இசையும் அவன் உள்ளத்தில் ஒரு நெகிழ்ச்சியை உண்டாக்கின. பாடலில் சிற்சில வார்த்தைகள் அவன் காதில் விழுந்தன. அவற்றிலிருந்து அந்த இடத்தில் நூறு வருஷங்களுக்கு முன்னால் நடந்த மாபெரும் போரைப் பற்றிய வரலாறு அவன் நினைவுக்கு வந்தது.

ஆம்; அங்கேதான் வரகுண பாண்டியனுக்கும் அபராஜித பல்லவனுக்கும் மூன்று நாட்கள் கொடிய யுத்தம் நடந்தது. பல்லவனுக்குத் துணையாகக் கங்க மன்னன் பிருதிவிபதி வந்தான். அப்போரில் மாண்ட லட்சக்கணக்கான வீரர்களைப் போல் அம் மகா வீரனும் இறந்து விழுந்தான். அவனுடைய ஞாபகமாகக் கட்டிய பள்ளிப்படைக் கோவில்தான் இப்போது சதிகாரர்கள் கூடும் இடமாக அமைந்திருந்தது.

கங்க மன்னன் இறந்ததும் பல்லவர் படைகள் சிதறி ஓடத் தொடங்கின. பாண்டிய சைன்யத்தின் வெற்றி நிச்சயம் என்று தோன்றியது. இச்சமயத்தில் சோழர் படைகள் பல்லவர்களின் உதவிக்கு வந்தன. அப்படைக்குத் தலைமை வகித்துத் திருமேனியில் தொண்ணூற்றாறு புண் சுமந்த விஜயாலய சோழன் வந்தான். இரண்டு கால்களையும் முன்னமே இழந்திருந்த அவ்வீரப் பெருங் கிழவனை நாலுபேர் தூக்கிக் கொண்டு வந்தார்கள். இரண்டு கைகளிலும் இரண்டு நெடிய வாள்களை ஏந்திக் கொண்டு அவன் பாண்டியர் சைன்யத்தில் புகுந்தான். இரண்டு வாள்களையும் சக்கராகாரமாகச் சுழற்றிக் கொண்டே போனான். அவன் சென்ற இடங்களிலெல்லாம் இருபுறமும் பாண்டிய வீரர்களின் உயிரற்ற உடல்கள் மலை மலையாகக் குவிந்தன.

சிதறி ஓடிய பல்லவ சேனை வீரர்கள் திரும்பி வரத் தொடங்கினார்கள்.

ஜண ஜண ஜண ஜணார்!—பதினாயிரம் வாள்கள் மாலைச் சூரியனின் மஞ்சள் வெய்யிலில் மின்னிக் கொண்டு வந்தன!

டண டண டண டணார்!—பதினாயிரம் வேல்கள் இன்னொரு பக்கமிருந்து ஒளி வீசிப் பாய்ந்து வந்தன!

வாள்களும் வேல்களும் மோதின!

ஆயிரம் பதினாயிரம் தலைகள் நாலாபுறமும் உருண்டன.

ஆயிரம் பதினாயிரம் உயிரற்ற உடல்கள் விழுந்தன!

ஈ ஈ ஈ ஈ!—குதிரைகள் கனைத்துக் கொண்டே செத்து விழுந்தன!

ப்ளீ ளீ ளீ ளீ!—யானைகள் பிளிறிக் கொண்டே மாண்டு விழுந்தன!

இரத்த வெள்ளத்தில் செத்த மனிதர்கள் — மிருகங்களின் உடல்கள் மிதந்தன!

இருபதினாயிரம் கொட்டைப் பருந்துகள் வட்டமிட்டுப் பறந்து வானத்தை மூடி மறைத்தன!

முப்பதினாயிரம் நரிகள் ஊளையிட்டுக் கொண்டு ஓடி வந்து போர்க்களத்தைச் சூழ்ந்து கொண்டன!

"ஐயோ ஓ ஓ ஓ!" என்ற ஐம்பதினாயிரம் ஓலக் குரல்கள் ஒன்றாகச் சேர்ந்து எழுந்தன!

"விடாதே! பிடி! துரத்து! வெட்டு! குத்து!"

இவ்விதம் நூறு ஆயிரம் குரல்கள் முழங்கின.

பதினாயிரம் ஜயபேரிகைகள் "அதம்! அதம்! அதம்!" என்று சப்தித்தன.

இருபதினாயிரம் வெற்றிச் சங்கங்கள் "பூம்! பூம்! பூம்!" என்று ஒலித்தன.

"ஹா! ஹா! ஹா!! ஹா!!" என்று அறுபதினாயிரம் பேய்கள் சிரித்தன.

• • •

**வ**ந்தியத்தேவன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். நாலாபுறமும் பார்த்து விழித்தான். பள்ளிப்படைச் சுவரில்



சாய்ந்தபடியே சிறிது நேரம் தான் கண்ணயர்ந்து விட்டதாக அறிந்து கொண்டான். அந்த அரைத் தூக்கத்தில் கண்ட பயங்கரமான கனவை மறுபடி நினைத்துப் பார்த்தான். கனவுதானா அது? இல்லை! உடுக்கின் முழக்கத்துக்கு இணங்கத் தேவராளன் பாடிய பாடலில் போர்க்களத்தைப் பற்றிச் செய்த வர்ணனை தான் அப்படி அவன் மனக்கண் முன் தோன்றச் செய்திருக்க வேண்டும்.

அச் சமயம் தேவராளன் பாண்டியர் படைக்கு முன்னால் பல்லவரும் கங்கரும் தோற்று ஓடியதைப் பற்றிப் பாடிக் கொண்டிருந்தான். அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் சிரித்த களிச் சிரிப்புத் தான் அப்படி அநேகாயிரம் பேய்களின் சிரிப்பைப் போல் ஒலித்து வந்தியத் தேவனைத் திடுக்கிட்டுக் கண் விழிக்கச் செய்திருக்க வேண்டும்.

உடுக்கு முழக்கம் திடீர் என்று நின்றது. தேவராளனும் பாட்டை உடனே நிறுத்தினான்.

சற்றுத் தூரத்தில் ஒரு தீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. அது நெருங்கி நெருங்கி வந்தது. தீவர்த்தி வெளிச்சத்தைத் தொடர்ந்து ஒரு பல்லக்கு வந்தது. பல்லக்கைச் சுமந்து வந்தவர்கள் அதைக் கீழே இறக்கி வைத்தார்கள். பல்லக்கின் திரைகள் விலகின. உள்ளேயிருந்து ஒரு ஸ்திரீ வெளியில் வந்தாள். ஆம்; அவள் பழுவூர் ராணி நந்தினிதான். ஆனால் முன் தடவைகளில் வந்தியத்தேவன் பார்த்தபோது அவள் சர்வாலங்கார பூஷிதையான மோகினியாக விளங்கினாள். இப்போது தலைவிரி கோலமான உக்கிர துர்க்கா தேவியாகக் காட்சி தந்தாள்.

அவளை இந்தத் தோற்றத்தில் பார்த்த வந்தியத் தேவனுடைய உள்ளத்தில் ஒரு திகில் தோன்றியது; அவன் உடம்பில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

* * *

நந்தினி பல்லக்கிலிருந்து இறங்கியதும் சிம்மாதனத்தில் வீற்றிருந்த சிறுவனைப் பார்த்தாள். அவனையே பார்த்த வண்ணம் நடந்து வந்தாள்.

வைத்தார்கள். பல்லக்கின் திரைகள் விலகின. உள்ளேயிருந்து ஒரு ஸ்திரீ வெளியில் வந்தாள். ஆம்; அவள் பழுவூர் ராணி நந்தினிதான். ஆனால் முன் தடவைகளில் வந்தியத்தேவன் பார்த்தபோது அவள் சர்வாலங்கார பூஷிதையான மோகினியாக விளங்கினாள். இப்போது தலைவிரி கோலமான உக்கிர துர்க்கா தேவியாகக் காட்சி தந்தாள்.

அவளை இந்தத் தோற்றத்தில் பார்த்த வந்தியத் தேவனுடைய உள்ளத்தில் ஒரு திகில் தோன்றியது; அவன் உடம்பில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

* * *

நந்தினி பல்லக்கிலிருந்து இறங்கியதும் சிம்மாதனத்தில் வீற்றிருந்த சிறுவனைப் பார்த்தாள். அவனையே பார்த்த வண்ணம் நடந்து வந்தாள்.

சிறுவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். மற்ற அனைவரும் அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அவள் உன்னை வளர்த்த தாய்!"

"நீ ஏன் என்னை வளர்க்கவில்லை? ஏன் உன்னுடன் என்னை வைத்துக் கொள்ளவில்லை? இவன் எதற்காக என்னை எங்கேயோ மலைக் குகையில் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறான்?"

"கண்மணி! உன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத்தான். உன் தந்தையைக் கொன்றவர்களைப் பழிக்குப் பழி வாங்குவதற்காகத்தான்!"

"ஆமாம்; அது எனக்குத் தெரியும்!" என்று சிறுவன் எழுந்து நந்தினியை அணுகினான்.

நந்தினி அவனைத் தன் இரு கரங்களாலும் அணைத்துக் கொண்டாள். உச்சி முகர்ந்தாள். சிறுவனும் அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கட்டிக் கொண்டான். மறுபடியும் அவள் தன்னை விட்டுப் போகாமலிருக்கும் பொருட்டு அவன் அப்படிப் பிடித்துக் கொண்டான் போலும்.

ஆயினும் இந்தக் காட்சி நீடித்திருக்கவில்லை. அவனுடைய குஞ்சுக் கரங்களை நந்தினி பலவந்தமாக எடுத்துத் தன்னை விடுவித்துக் கொண்டாள். சிறுவனைச் சிம்மாதனத்தில் உட்கார வைத்தாள். மீண்டும் பல்லக்கின் அருகில் சென்றாள். அதனுள்ளிருந்து நாம் முன் பார்த்திருக்கும் வாளை எடுத்துக் கொண்



டான். பல்லக்குத் தூக்கி வந்தவர்களைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்தான். அவர்கள் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு சற்றுத் தூரத்தில் போய் மறைவாக உட்கார்ந்து கொண்டார்கள்.

நந்தினி மீண்டும் சிம்மாதனத்தின் அருகில் வந்தாள். கத்தியை அச் சிம்மாசனத்தின்மீது குறுக்காக வைத்தாள்.

சிறுவன் அதை அடங்கா ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டே "நான் இதைக் கையில் எடுக்கலாமா?" என்று கேட்டான்.

"சற்றுப் பொறு, என் கண்மணி!" என்றாள் நந்தினி.

பிறகு, ரவிதாஸன் முதலியவர்களையும் வரிசைக் கிரமமாக உற்றுப் பார்த்தாள்.

"சபதம் எடுத்துக் கொண்டவர்களைத் தவிர இங்கு வேறு யாரும் இல்லையே?" என்று கேட்டாள்.

"இல்லை, தேவி!" என்றான் சோமன் சாம்பவன்.

ரவிதாஸனைப் பார்த்து நந்தினி "சேனாபதி!......" என்று ஆரம்பித்தாள்.

ரவிதாஸன் சிரித்தான்.

"இன்றைக்கு உமக்குச் சிரிப்பாயிருக்கிறது. அடுத்த மாதம் இந்த நாளில் எப்படியிருக்குமோ, யார் கண்டது!"

"தேவி! அந்த நல்ல நாள் எப்போது வரப் போகிறது என்று எத்தனையோ காலமாக நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்."

"ஐயா! நாமோ ஒரு சிலர். நம் சக்கரவர்த்தி சின்னஞ் சிறு குழந்தை. சோழ ராஜ்யம் மகத்தானது. சோழர்களின் சேனாபலம் அளவற்றது. நாம் அவசரப் பட்டிருந்தோமானால் அடியோடு காரியம் கெட்டுப் போயிருக்கும். பொறுமையாக இருந்ததினால் இப்போது காரியசித்தி அடையும் வேளை நெருங்கி யிருக்கிறது. ரவிதாஸரே! நீர் ஏதாவது சொல்ல வேண்டிய இருக்கிறதா? இங்குள்ள வேறு யாரேனும் ஏதாவது சொல்ல வேண்டியதிருக்கிறதா!"

ரவிதாஸன் அங்கே இருந்தவர்களின் முகங்களை வரிசையாகப் பார்த்துக் கொண்டு வந்தான். அனைவரும் மோன விரதம் கொண்டவர்களாய்க் காணப் பட்டார்கள்.

"தேவி! நாங்கள் சொல்ல வேண்டியது எதுவும் இல்லை. தாங்கள்தான் சொல்ல வேண்டும். சபதம் நிறைவேறும் வேளை நெருங்கி விட்டது என்றீர்கள். எங்கே, எப்படி, யார் மூலமாக நிறைவேறப் போகிறது என்று சொல்லி அருள வேண்டும்" என்றான்.

"ஆகட்டும்; அதைச் சொல்வதற்காகவே இங்கு வந்தேன். அதற்காகவே உங்கள் எல்லாரையும் இங்கே தவறாமல் வரச் சொன்னேன். நம்முடைய சக்கரவர்த்தியையும் அழைத்து வரச் செய்தேன்" என்றாள் நந்தினி.

சிம்மாதனத்தில் வீற்றிருந்த சிறுவன் உள்பட அனைவரும் நந்தினியின் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். அவள் மேலும் கூறினாள்:

"உங்களில் சிலர் அவசரப் பட்டீர்கள். நாம் எடுத்துக் கொண்ட சபதத்தை மறந்து விட்டேனோ என்றும் சிலர் சந்தேகப் பட்டீர்கள். அந்தச் சந்தேகம் அடாதது. மறவாமல் நினைவு வைத்துக் கொள்ள உங்கள் எல்லோரைக் காட்டிலும் எனக்குத்தான் காரணம் அதிகம் உண்டு. இல்லை; நான் மறக்கவில்லை. சென்ற மூன்று ஆண்டுகளாக அல்லும் பகலும் அனவரதமும் நான் வேறு எதைப் பற்றியும் சிந்தித்ததில்லை. நாம் எடுத்துக் கொண்ட சபதத்தின்படி பழி வாங்குவதற்குச் சமய சந்தர்ப்பங்களையும் தந்திர உபாயங்களையும் தவிர வேறு எதையும் பற்றி நான் எண்ணியதில்லை. எங்கே சென்றாலும், என்ன காரியம் செய்தாலும், யாரிடம் பேசினாலும், நமது நோக்கம் நிறைவேறுவதற்கு அதனால் உபயோகம் உண்டா என்பதைத் தவிர வேறு நினைவு எனக்கில்லை. சமய சந்தர்ப்பங்கள் இப்போது கூடி யிருக்கின்றன. சோழ நாட்டுச் சிற்றரசர்களும் பெருந்தர அதிகாரிகளும் இரு பிரிவாகப் பிரிந்திருக்கிறார்கள். பழுவேட்டரையர், சம்புவரையர் முதலானோர் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட முடிவு செய்து விட்டார்கள். கொடும்பாளூர் பூதி விக்கிரம கேசரியும் திருக்கோவலூர் மலையமானும் அதற்கு விரோதமா யிருக்கிறார்கள். பூதிவிக்கிரம கேசரி தென்திசைச் சைன்யத்துடன் தஞ்சை நோக்கி வருவதாகக் கேள்விப் படுகிறேன். திருக்கோவலூர் மலையமான் படை திரட்டி வருவதாகவும் அறிகிறேன். இரு தரப்பாருக்கும் எந்த நிமிஷமும் யுத்தம் மூளலாம்......"

"தேவி! அப்படி யுத்தம் மூளாதிருப்பதற்குத் தாங்கள் பெருமுயற்சி செய்து வருவதாகக் கேள்வியுறுகிறோம். கடம்பூர்

சம்புவரையன் மாளிகையில் சமரசப் பேச்சு நடக்கப்போவதாக அறிகிறோம்."

"ஆமாம்; அந்த ஏற்பாடு செய்திருப்பது நானேதான். ஆனால் என்ன காரணத்திற்காக என்று உங்களால் ஊகிக்க முடியவில்லையா?"

"முடியவில்லை, ராணி! ஒரு பெண் உள்ளத்தின் ஆழத்தைக் கண்டு பிடிக்கச் சர்வேசுவரனால் கூட முடியாது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்களால் எப்படி முடியும்?"

"அது உங்களால் முடியாத காரியந்தான். நான் சொல்கிறேன்; தெரிந்து கொள்ளுங்கள். நம்முடைய சபதம் நிறைவேறுவதற்கு முன்னால் சோழ ராஜ்யத்தில் இந்த உள்நாட்டுச் சண்டை மூண்டால், அதன் விளைவு என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. சுந்தர சோழன் இன்னும் உயிரோடிருக்கிறான்; அன்பில் பிரம்மராயன் ஒருவனும் இருக்கிறான். இவர்கள் தலையிட்டு இரு கட்சிக்காரர்களையும் அடக்கி விடுவார்கள். அல்லது ஒரு கட்சி தோற்று இன்னொரு கட்சி வலுத்து விட்டாலும் நம்முடைய நோக்கம் நிறைவேறுவது அசாத்தியமாகி விடும். அதற்காகவே இந்தச் சமாதானப் பேச்சை இப்போது தொடங்கியிருக்கிறேன். சண்டை உண்மையாக மூளுவதற்குள்ளே நம் நோக்கத்தை நிறைவேற்றி விட வேண்டும். அப்படி நிறைவேறிய பிறகு சோழ ராஜ்யத்துச் சிற்றரசர்களுக்குள் மூளும் சண்டைக்கு முடிவே யிராது. இரு கட்சியாரும் சர்வநாசம் அடையும் வரையில் சண்டை நடந்து கொண்டேயிருக்கும். இப்போது தெரிகிறதா?...சமாதானப் பேச்சு தொடங்கியதின் காரணம்?"

இதைக் கேட்டதும் அங்கே சூழ்ந்து நின்றவர்கள் எல்லாருடைய முகங்களிலும் வியப்புக்கும் உற்சாகத்துக்கும் அறிகுறிகள் காணப்பட்டன. பழுவூர் இளைய ராணியின் மதி நுட்பத்தை வியந்து அவர்கள் ஒருவருக்கொருவர் மெல்லிய குரலில் பேசிக் கொண்டார்கள். ரவிதாஸனும்கூட ஆச்சரியப்படாமலிருக்க முடியவில்லை.

"தேவி! தங்களுடைய அபூர்வமான முன் யோசனைத் திறனை வியக்கிறோம். சமாதானப் பேச்சின் கருத்தை அறிந்து கொண்டோம். ஆனால் சபதம் நிறைவேறும் நாள் நெருங்கி விட்டது என்றீர்கள். அதை நடத்துவது யார்? எப்படி? எப்போது?" என்றான்.

"அதற்கும் சேர்த்துத்தான் இந்த யுக்தி செய்திருக்கிறேன். சமாதானப் பேச்சு என்ற வியாஜத்தின்பேரில் நமது முதற் பகைவனைக் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு வரும்படி அழைப்பு அனுப்பியிருக்கிறது. அவன் அங்கே கட்டாயம் வந்து சேருவான். நம்முடைய சபதத்தை அங்கே தான் நிறைவேற்றியாக வேண்டும். வீர பாண்டிய சக்கரவர்த்தியின் ஆபத்துதவிகளே! உங்களுடைய பழி தீரும் வேளை நெருங்கி விட்டது. இன்றைக்குச் சனிக்கிழமையல்லவா? அடுத்த சனிக்கிழமைக்குள் நம்முடைய சபதம் நிறைவேறி விடும்!..."

அங்கே இருந்த இருபது பேர்களும் ஏக காலத்தில் 'ஆஹா' காரம் செய்தார்கள்.

சிலர் துள்ளிக் குதித்தார்கள்.

உடுக்கு வைத்திருந்தவன் உற்சாக மிகுதியினால் அதை இரண்டு தடவை தட்டினான்.

மரக்கிளைகளில் தூங்கிக் கொண்டிருந்த ஆந்தைகள் விழித்து உறுமிக் கொண்டு வேறு கிளைகளுக்குத் தாவின.

வௌவால்கள் சடசட வென்று சிறகுகளை அடித்துக் கொண்டு ஓடின.

வந்தியத்தேவனுடைய குதிரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டது.

வந்தியத் தேவனும் நிமிர்ந்து பார்த்தான். நந்தினி தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் ஏதோ பரபரப்புத் தரும் விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள் என்பது மட்டுந்தான் தெரிந்தது. அவளுடைய பேச்சு ஒன்றும் அவன் காதில் விழவில்லை.

ரவிதாஸன் மற்றவர்களுடைய உற்சாகத்தைக் கையமர்த்தி அடக்கினான்.

"தேவி! தங்களுடைய கடைசி வார்த்தை எங்களுக்கு அளவிலாத குதூகலத்தை அளித்திருக்கிறது. நமது முதற் பகைவனைக் கொன்று பழி முடிக்கும் காலம் இவ்வளவு அண்மையில் வந்திருப்பதை எண்ணிக் களிக்கிறோம்! ஆனால், பழி முடிக்கும் பாக்கியம் யாருக்கு?" என்று கேட்டான்.

"அதற்கு நமக்குள் போட்டி ஏற்படுவது இயற்கைதான். அதை யாருக்கும் மனத் தாங்கல் இல்லாத முறையில் முடிவு செய்வதற்காகவே வீர பாண்டியரின் திருக் குமார சக்கரவர்த்தியை இங்கு அழைத்து வரச் செய்தேன். வீர பாண்டியாரின் கத்தியும் இதோ இருக்

கிறது. இந்தச் சின்னஞ் சிறு குழந்தை தந்தையின் கத்தியைத் தொட்டு நம்மில் எவர் கையில் கொடுக்கிறதோ, அவர் பழி முடிக்க வேண்டும். மற்றவர்கள் அக்கம் பக்கத்தில் உதவிக்குச் சித்தமாக நிற்க வேண்டும். ஏற்றுக் கொண்டவர் தவறி விட்டால் மற்றவர்கள் முன் வந்து முடிக்க வேண்டும். கடம்பூர் மாளிகைக்குள்ளேயே நான் இருப்பேன். இடும்பன் காரி கோட்டைக் காவலர்களில் ஒருவனாக இருப்பான். பழி முடிக்கும் பொறுப்பு ஏற்றுக் கொண்டவர் மாளிகைக்குள் பிரவேசிப்பதற்கு நாங்கள் உதவி செய்வோம். இந்த ஏற்பாடு உங்களுக்கெல்லாம் சம்மதந்தானே?''

ஆபத்துதவிகள் ஒருவரை யொருவர் ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டார்கள். எல்லாருக்கும் அந்த ஏற்பாடு சம்மதமாகவே தோன்றியது.

ரவிதாஸன் கூறினான்:— ''தாங்கள் சொன்னது சரியான ஏற்பாடுதான். அதற்கு நாங்கள் எல்லாரும் சம்மதிக்கிறோம். ஆனால் இன்னும் ஒரு விஷயம். பழி முடிக்கும் பொறுப்பு யாருக்குக் கிடைக்கிறதோ, அவர் சொல்கிறபடி மற்றவர்கள் கண்டிப்பாகக் கேட்கிறதென்று வைத்துக் கொள்ள வேண்டும். சக்கரவர்த்திக்குப் பிராயம் வருகிற வரையில் பழி முடித்தவன் இட்டதே சட்டமென்று மற்ற அனைவரும் நடந்து கொள்ள வேண்டும்.''

இதைக் கேட்ட நந்தினியின் முகத்தில் புன்னகை அரும்பியது.

''என்னையும் உட்படுத்தித் தானே சொல்கிறீர்?'' என்று கேட்டாள்.

''ஆம், தேவி! விதிவிலக்குச் செய்ய முடியாது!'' என்றான் ரவிதாஸன்.

''சந்தோஷம். இப்போது ரவிதாஸர் கூறியதும் உங்கள் எல்லாருக்கும் சம்மதந்தானே?'' என்று நந்தினி மற்றவர்களை நோக்கி வினவினாள்.

எல்லாரும் ஒருவரை யொருவர் பார்த்தார்கள். மறுமொழி சொல்வதற்குத் தயங்கினார்கள். சிலருக்கு அந்த ஏற்பாடு சம்மதமில்லையென்று தோன்றியது.

சோமன் சாம்பவன், ''அது எப்படி நியாயமாகும்? நமக்கு எல்லா உதவியும் அளித்து வரும் தேவியை எப்படிப் பொது விதிக்கு உட்படுத்த முடியும்?'' என்று கேட்டான்.

''என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். நான் உயிர் வாழ்ந்திருப்பதே வீரபாண்டிய சக்கரவர்த்தியின் கொடூரக் கொலைக்குப் பழி வாங்குவதற்காகத்தான். அந்தப் பழியை முடித்துக் கொடுக்கிறவர் யாரா யிருந்தாலும், அவருக்கு நான் என்றென்றும் அடிமையாக இருக்கச் சித்தம்!'' என்றாள் நந்தினி.

பின்னர், இந்தப் பேச்சுக்களை யெல்லாம் புரிந்தும் புரியாமலும் கேட்டுக் கொண்டிருந்த சிறுவனை நந்தினி தேவி பார்த்து ''என் கண்மணி! இந்த வீரவாள் உன் தந்தையினுடையது. இதை உன் குஞ்சுக் கையினால் எடுத்து இங்கே உள்ளவர்களில் உனக்கு யாரை அதிகமாய்ப் பிடித்திருக்கிறதோ, அவரிடம் கொடு!'' என்றாள்.

ரவிதாஸன் சற்று அருகில் வந்து ''சக்கரவர்த்தி! எங்களை யெல்லாம் நன்றாய்ப் பாருங்கள்! எங்களில் யார் வீரன் என்றும், தைரியசாலி என்றும் தங்களுக்குத் தோன்றுகிறதோ, அவனிடம் இந்தப் பாண்டிய குலத்து வீரவாளைத் தொட்டுக் கொடுங்கள்!'' என்றான்.

சிம்மாசனத்தில் வீற்றிருந்த சிசு சக்கரவர்த்தி சுற்று முற்றும் பார்த்தார்.

எல்லாரும் அடங்காத ஆவலுடனும் பரபரப்புடனும் சக்கரவர்த்தியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவருடைய கண்களும் ''என்னிடம் கொடுங்கள்! என்னிடம் கொடுங்கள்!'' என்று கெஞ்சும் பாவத்தைக் காட்டின.

ரவிதாஸனுடைய முகமும் கண்களும் மட்டும் ''என்னிடம் கொடுங்கள்!'' என்று அதிகார பூர்வமாகப் பயமுறுத்திக் கட்டளையிட்டன.

சிறுவன் இரண்டு மூன்று தடவை எல்லாரையும் திருப்பித் திருப்பிப் பார்த்த பின்னர், கத்தியைக் கையில் எடுத்தான். அதைத் தூக்க முடியாமல் தூக்கினான்.

அனைவருடைய பரபரப்பும் சிகரத்தை அடைந்தது.

சிறுவன் பளிச்சென்று நந்தினி நின்ற பக்கம் திரும்பினான். ''அம்மா! எனக்கு உன்னைத்தான் எல்லாரைக் காட்டிலும் அதிகமாகப் பிடித்திருக்கிறது. நான் பெரியவனாகும் வரையில் நீதான் எனக்காக இராஜ்யத்தை ஆள வேண்டும்!'' என்று சொல்லிக் கொண்டே வாளை அவளிடம் கொடுத்தான். (தொடரும்)



# திருநெல்வேலித் திருவிழா

ரா.கி.

ராஜாஜியின் திருநெல்வேலி விஜயத்தின் போது அந்நகரின் சாலைகள் இவ்வாறு திருவிழாக் கோலம் கொண்டிருந்தன.

திருநெல்வேலிக்காரர்கள் பலே கெட்டிக்காரர்கள்! இது சென்ற வாரத்தில் மிகத் தெளிவாக வெளியாயிற்று.

எல்லாம் அறிந்தவர் என்று நாம் நினைத்துக் கொண்டிருந்த முதன் மந்திரி ராஜாஜி அவர்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்று இருந்தது! அதை அவர் தெரிந்து கொள்ளும்படி திருநெல்வேலிக்காரர்கள் செய்து விட்டார்கள்!

இப்போதெல்லாம் ராஜாஜி எந்தச் சந்தர்ப்பத்தில் எந்தக் கூட்டத்தில் பேசினாலும் ஆண்டவனைப் பற்றியே அதிகம் பேசுகிறார் அல்லவா? "கடவுளைப் பிரார்த்தியுங்கள்! மழை பெய்யும்!" என்கிறார். "உணவுக் கன்ட்ரோலை எடுத்ததற்காக என்னை எதற்காக வாழ்த்துகிறீர்கள்! அந்த புத்தியை எனக்குக் கொடுத்தது ஆண்டவன் அல்லவா! ஆகையால் ஆண்டவனை வாழ்த்துங்கள்!" என்கிறார். இவ்விதம் ராஜாஜி அரசியல் மேடையை ஆஸ்திகப் பிரசார மேடையாகச் செய்து கொண்டு போவது பற்றி திரு ஈ. வெ. ரா.வுக்குக் கோபம் கோபமாக வருகிறது. ஆனால் ராஜாஜியின் ஆஸ்திகப் பிரசாரத்தைப் பற்றி நமக்குக் கோபமும் இல்லை; அதில் நமக்கு வியப்பும் கிடையாது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரையோ, ரமண ரிஷிகளையோ பலவந்தமாகப் பிடித்துக் கொண்டு வந்து இராஜரீக பீடத்தில் உட்கார வைத்திருந்தால் அவர்கள் என்ன செய்திருப்பார்கள்? ஆத்மானுபூதி அடையும் மார்க்கத்தைத்தான் போதித்திருப்பார்கள்.

அதுபோல் ராஜாஜியும் அரசியல் உலகத்தை அடியோடு மறந்து ஆத்ம வித்தையில் அறிவைச் செலுத்தத் தீர்மானித்திருந்தார். அவரை வற்புறுத்தி அழைத்துக் கொண்டு வந்து சென்னை ராஜ்ய முதன் மந்திரி யாக்கிவிட்டோம். அவர் பொதுக் கூட்டங்களில் ஆண்டவனைப் பற்றிப் பேசாமல் வேறு எதைப் பற்றிப் பேச முடியும்?

ஆயினும் இப்படி ஆஸ்திகப் பிரசாரம் செய்து மக்களின் உள்ளத்தில் தெய்வ பக்தியை வளர்ப்பதற்குச் செய்யும் முயற்சியினால் கடவுளுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களைப் பற்றி ராஜாஜி சிறிது கூடச் சிந்தித்துப் பார்க்கவில்லை. அதைப்பற்றிச் சிந்திக்கும்படியாகத் திருநெல்வேலிக்காரர்கள் செய்துவிட்டார்கள்! அவர்கள் கெட்டிக்காரர்கள் என்பதில் சந்தேகம் என்ன?

* * *

ராஜாஜியின் திருநெல்வேலி விஜயத்தில் கடைசி நிகழ்ச்சி, காங்கிரஸ் ஊழியர்களின் கூட்டம். ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் தலைவரான ஸ்ரீ எஸ். எஸ். கரையாளரின் தலைமையின் கீழ் இந்த ஊழியர் கூட்டம் நடைபெற்றது. கொட்டகை நிறைந்து, வெளியிலும் ஜனக் கூட்டம் ததும்பி நின்ற அந்தக் கூட்டத்தில், ஜில்லாவின் பற்பல பகுதிகளிலிருந்தும் வந்தவர்கள், பற்பல ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், வரிசைக் கிரமமாக மேடைக்கு வந்து, இன்னின்ன ஸ்தாபனத்தின் சார்பாக என்பதைச் சொல்லிவிட்டு, ராஜாஜிக்கு மாலை சூட்டிவிட்டுச் சென்றார்கள். இந்த மாலை சூட்டும் வைபவத்துக்கு முடிவே கிடையாதோ என்று தோன்றி விட்டது. பூ மாலைகள் மேலும் மேலும் சேர்ந்து மேடை மீது பூ மலையாகக் குவிந்து விட்டன!

இம்மாதிரி சந்தர்ப்பங்களில் ராஜாஜி பொறுமை இழந்து விடுவது வழக்கம். இன்று இவ்வளவு பொறுமையுடன் இவர் இருக்கிறாரே என்று வியந்து கொண்டிருந்தோம். ராஜாஜி அவ்விதம் பொறுமையுடன் இருந்ததின் காரணம், அவர் உள்ளம் ஒரு புதிய துறையில் சிந்தனை செய்யத் தொடங்கி யிருந்ததினால்தான் என்று தெரிந்தது.

"உலகத்தில் தெய்வ பக்தி அதிகமானதினால் கடவுளுக்கு எவ்வளவு கஷ்டம்

அதிகரிக்கக் கூடும் என்பதை இன்றைக்குத் தெரிந்து கொண்டேன். கடவுளிடம் பக்தி செலுத்தாதவர்கள் கடவுளுக்குக் கஷ்டம் கொடுக்காமலிருக்கிறார்கள். உங்களுடைய அன்பினால் எனக்கு இப்போது ஏற்பட்ட கஷ்டத்திலிருந்து கடவுளுடைய கஷ்டங்களைப் பற்றியும் நினைக்கும்படி நேர்ந்தது. இந்தக் கூட்டத்தில் உள்ளவர்களில் எனக்கு மாலை போடாதவர்களுக்கெல்லாம் நன்றி செலுத்துகிறேன்!''

இவ்வாறு ராஜாஜி கூறியதும் அக் கூட்டத்திலிருந்தவர்களில் மாலை போட்டவர்கள், மாலை போடாதவர்கள் எல்லாருமே பிரமாதமான குதூகல ஆரவாரம் செய்தார்கள். அவர்களுடைய குதூகலத்தைப் பார்த்து ராஜாஜியின் முகமும் மலர்ந்தது. அவரும் வெகு குதூகலத்துடன் சுமார் அரை மணி நேரத்துக்கு மேல் தேசத் தொண்டர்களின் கடமைகளை எடுத்துரைத்தார்.

இதையெல்லாம் பார்த்த எனக்கும் ஒரு தைரியம் உண்டாயிற்று. பக்தர்கள் தங்கள் பக்தி காரணமாகக் கடவுளுக்கு எவ்வளவு கஷ்டத்துக்கு மேல்

ஆனால் அவர் கூறிய விஷயங்கள் அவ்வளவு இனிப்பானவை என்று சொல்ல முடியாது.

"நீங்கள் எல்லாரும் காந்திஜியின் வானர சைன்யங்களாயிருந்தீர்கள்'' என்று ஆரம்பித்தார். இதற்காகவே ஊழியர்கள் கோபித்துக் கொண்டிருக்கலாம். "நாங்கள் வானரங்களா!'' என்று கேட்டிருக்கலாம்.

பிறகு ராஜாஜி இன்னும் ஒரு படி மேலே போனார். "உங்கள் தியாகத்தினாலும் முயற்சியினாலும் தேசம் சுதந்திரம் அடைந்து விட்டது. இது காரணமாக அகம்பாவம் என்னும் வால் உங்களுக்கு நீள ஆரம்பித்து விட்டது. அதை நீட்டி விடக்கூடாது; சுருட்டி வைத்துக் கொள்ள வேண்டும்'' என்றதும் மறுபடியும் எல்லாரும் சிரித்தும் கைதட்டியும் சந்தோஷப் பட்டார்களே தவிர, யாரும் 'வாக் அவுட்' செய்யவில்லை!!

"சுதந்திரம் கிடைத்த பிறகு, உங்களிடையே தியாக உணர்ச்சி குன்றி விட்டது. தியாகத்தை விலைப்படுத்த ஆரம்பித்து விட்டீர்கள். கலகமும் போட்டியும் பொறாமையும் உங்களிடையே புகுந்து விட்டன. அதன் பலனாகவே சென்ற தேர்தலில் காங்கிரஸ் தோற்றது.

வேண்டும். பதவியும் பொறுப்பும் உங்களைத் தேடி வந்தால் ஏற்றுக் கொள்ள வேண்டும். நீங்கள் அவற்றைத் தேடிப் போகக் கூடாது......"

இம்மாதிரி விஷயங்களைப் பற்றியே அரை மணி நேரமும் பேசினார். கூடியிருந்த நூற்றுக் கணக்கான ஊழியர்கள் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். மகிழ்ச்சியை அடிக்கடி வெளியிட்டுக் கொண்டுமிருந்தார்கள். இவ்வளவு கசப்பான போதனைகளை அவர்கள் எப்படிக் கேட்டுச் சந்தோஷப்பட்டார்கள் என்பது வியப்பளிக்கக் கூடியதுதான். அதற்கு அடிப்படையான காரணம் ஒன்று உண்டு. ராஜாஜி தம் உள்ளத்தில் குடி கொண்டிருந்த அன்பின் காரணமாகவே அவ்விதம் பட்டவர்த்தனமாகப் பேசினார். அந்த உண்மை, கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கும் தெரிந்திருந்தது. அன்பு காரணமாகச் செய்த போதனையான படியால் கோபங் கொள்ளாமல் கேட்டார்கள்; மகிழ்ச்சியும் காட்டினார்கள். கூட்டம் முடிந்த போது, "ராஜாஜி வாழ்க!" என்னும் வாழ்த் தொலிகள் வானை அளாவின. இக் கூட்டத்தை நடத்துவதில் முக்கிய பங்கு கொண்ட ஸ்ரீ கரையாளர், ஸ்ரீ ராஜகோபாலன், ஸ்ரீ மந்திரம் ஆகியவர்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி யிருந்தார்கள்.

*  *  *

திருநெல்வேலி காங்கிரஸ் ஊழியர்கள் ராஜாஜியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு அவ்வளவு சந்தோஷமா யிருந்ததற்கு இன்னொரு காரணமும் கூறலாம். அவர்களில் பெரும்பாலோர் "ராஜாஜி! தங்களுடைய போதனைகளின்படி ஏறக்குறைய நாங்கள் நடந்து வந்திருக்கிறோம். இல்லாவிட்டால் எங்கள் ஜில்லாவில் காங்கிரஸ் பெருமிதமான வெற்றி அடைந்திருக்குமா!" என்று சொல்லக் கூடியவர்களா யிருக்கலாம்.

ஆம்; திருநெல்வேலி ஜில்லா ஊழியர்களும் சரி, அந்த ஜில்லா பொது மக்களும் சரி, இது விஷயமாகப் பெருமை கொள்வதற்கு இடம் இருக்கத்தான் செய்கிறது. மாகாண சட்ட சபைக்கும் பார்லிமெண்டுக்குமாக, இருபது ஸ்தானங்களுக்கு அந்த ஜில்லாவில் போட்டி நடந்தது. பதினேழு ஸ்தானங்களைக் காங்கிரஸ் அபேட்சகர்கள் கைப்பற்றினார்கள். மற்றும் பல ஜில்லாக்களைப்போல் திருநெல்வேலி ஜில்லாவும் கோட்டை விட்டிருந்தால், சென்னைச் சட்ட சபையில் காங்கிரஸுக்கு 152 ஸ்தானங்கள் கூடக் கிடைத்திராது. இன்னும் பத்து ஸ்தானங்கள் குறைந்து போயிருக்கலாம். அப்போது ராஜாஜி மந்திரி சபையும் ஏற்பட்டிருக்க முடியாது அல்லவா!

"ராஜாஜி மந்திரிசபை ஏற்பட்டதற்கும் அதன் பலனாக உணவுக் கண்ட்ரோல் ஒழிந்ததற்கும் நாங்களே காரணம்!" என்று திருநெல்வேலிக் காரர்கள் பெருமையுடன் சொல்லிக் கொண்டால், அதை மற்ற ஜில்லாக்காரர்கள் எப்படி மறுத்துரைக்க முடியும்! முடியாதுதான்!

*  *  *

உணவுக் கண்ட்ரோல் எவ்வளவு தூரம் மக்களை உபத்திரவப் படுத்தி வந்தது என்பதை அது ஒழிந்த பிறகு தான் எல்லாரும் நன்கு அறியக் கூடியதா யிருக்கிறது. 'எல்லாரும்' என்பதில், என்னையும் சேர்த்துக் கொண்டுதான் சொல்கிறேன். ஐந்து வருஷங்களுக்கு முன்னால் நம் நாடு சுதந்திரம் அடைந்தது. எத்தனையோ வருஷங்கள் சுதந்திரப் போராட்டம் நடத்திய பிறகு அன்னியர் ஆதிக்கம் நீங்கித் தேசம் விடுதலை பெற்றது. அப்போது



கோவில்பட்டிப் பொதுக் கூட்டத்தில் ராஜாஜி பேசுகிறார். அண்ணாந்து பார்ப்பவர் கோவில்பட்டியின் பிரதிநிதி ஸ்ரீ கே. ராமசாமி நாயுடு எம். எல். ஏ.

காட்டில் நடைபெற்ற மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களையும் பார்த்தோம். "தேசம் சுதந்திரம் பெற்ற வைபவத்தைக் கொண்டாடியே தீரவேண்டும்" என்பதற்காக ஜனங்கள் அப்போது கொண்டாட்டம் நடத்தியதாகவே தோன்றியது. சென்ற வாரத்தில் ராஜாஜியின் திருநெல்வேலி ஜில்லா விஜயத்தின் போதுதான் உண்மையான பொது ஜனக் கொண்டாட்டம் என்றால் என்னவென்பதை நான் தெரிந்துகொள்ள முடிந்தது. மக்களுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கித் ததும்பியதை அவர்களுடைய முகமலர்ச்சியின் மூலம் கண்டறிய முடிந்தது. 'குதூகலம்' 'கோலாகலம்' என்ற வார்த்தைகள் முன்னெல்லாம் விக்கியாசமாக உபயோகிக்கும் 'சவடால்' வார்த்தைகளாகவே இருந்தன. அவற்றின் உண்மைப் பொருளை இப்போதுதான் தெரிந்து கொள்ள முடிந்தது. சென்னையில் உணவுக் கண்ட்ரோலை எடுத்தது பற்றி இன்னமும் அரை குறை உற்சாகத்துடனே பேசி வரும் ஜவாஹர்லால்ஜியும், கித்வாய்ஜியும் இங்கே வந்து இந்தப் பொதுஜன குதூகலப் பிரளயத்தைப் பார்த்து விட்டுப் போகக்கூடாதா என்று அடிக்கடி தோன்றியது.

ஏன்! ராஜாஜியின் மனதிலேகூட, எங்கேனும் ஒரு மூலையில், "உணவுக் கண்ட்ரோலை எடுத்தது சரியா?" என்ற சந்தேகம் அணுவளவேனும் இருந்திருக்கும் பட்சத்தில், அது திருநெல்வேலி விஜயத்தின் மூலம் தீர்ந்து போயிருக்கும். உணவுக் கண்ட்ரோல் ஜனங்களை எவ்வளவு தூரம் கஷ்டப்படுத்திக் கொண்டிருந்தது என்பதையும், அதை எடுத்ததினால் ஜனங்கள் எவ்வளவு குதூகலம் அடைந்திருக்கிறார்கள் என்பதையும் ராஜாஜி மனோதர்மத்தினாலும் ஊகத்தினாலும் மட்டும் அன்றி, நேரில் பிரத்யட்சமாகக் காண முடிந்தது.

இதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்த பெருமை திருநெல்வேலி நகர சபைக்கு உரியது. திருநெல்வேலி நகரசபையார் சென்ற இரண்டு ஆண்டுகளாக வெற்றிகரமாய்ப் பொருட் காட்சி நடத்தியவர்கள். இந்த வருஷம் இன்னும் வெற்றிகரமாய் நடத்துவது என்று நிர்மானித்து, பொருட் காட்சியைத் திறந்து வைப்பதற்கு ராஜாஜியை அழைத்தார்கள். பொருட் காட்சித் திறப்பு என்ற வியாஜமாகத்தான் ராஜாஜி திருநெல்வேலி சென்றார். அந்த வைபவமும் அமோகமாக நடந்தது. ஆனால், திருநெல்வேலி மகாஜனங்கள் தாங்களாகவே ஒரு தனித் திட்டம் போட்டு, ராஜாஜியின் விஜயத்தை உணவுக் கண்ட்ரோல் ஒழிப்புத் திருவிழாவாக நடத்தி வைத்தார்கள்.

* * *

திருநெல்வேலித் திருவிழா உண்மையில் திருமங்கலத்தில் ஆரம்பமாயிற்று என்று சொல்ல வேண்டும். திருமங்கலம் ரயில் நிலையம் கண்ணுக் கெட்டிய தூரம் தலைகளின் நிலையமாகக் காட்சி அளித்தது. பிளாட்பாரத்திலும் மேற்பாலத்தின் மச்சுப் படிகளிலும் அக்கம்பக்கத்து மரங்களின் மேலுங்கூட மக்கள் நின்றார்கள். சாத்தூரிலும் விருதுநகரிலும் இதே மாதிரிதான். பழைய நாட்களில் காந்திஜியின் சுற்றுப் பிரயாணத்தின் போது ரயில்வே நிலையங்களில் கண்ட காட்சி நினைவுக்கு வந்தன. அப்போதெல்லாம் "வந்தே மாதரம்" "மகாத்மா காந்திக்கு ஜே!" என்ற கோஷங்கள் எழுவது வழக்கம். இப்போதோ "முதன் மந்திரி ராஜாஜி வாழ்க!" "உணவுக் கண்ட்ரோலை ஒழித்த ராஜாஜி வாழ்க!" "ரேஷன் அரக்கனை ஒழித்த ராஜாஜி வாழ்க!" என்று இத்தகைய கோஷங்கள் அபரிமிதமாக இருந்தன. "உணவுப் பஞ்சத்தை ஒழித்த ராஜாஜி வாழ்க!", என்ற குரல்களையும் அடிக்கடி கேட்டேன். உணவுப் பஞ்சம் நம் நாட்டிலிருந்து ஒழிந்துவிட்டதாகச் சொல்ல முடியாதுதான். ஆனால் உணவுக் கண்ட்ரோலினாலேயே உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருந்ததாகப் பலர் எண்ணியிருந்த படியால்தான் அத்தகைய கோஷங்கள் கிளம்பி யிருக்கவேண்டும்! மக்களின் உணர்ச்சி ததும்பிய உள்ளங்களிலிருந்து வந்த அத்தகைய கோஷங்கள் விரைவிலேயே உண்மையாகட்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டேன். உணவுக் கண்ட்ரோல் நீங்கிய முகூர்த்தம் காரணமாக, உணவுப் பஞ்சமே இந்த மாகாணத்திலிருந்து ஒழிந்து போகலாம் என்பதற்கு அறிகுறிகளை இதற்குள்ளேயே காண்கிறோமல்லவா!

* * *

கோவில்பட்டி ரயில் நிலையத்தில் ராஜாஜி ரயிலை விட்டு இறங்கினார். பிளாட்பாரத்தில் அரசாங்கத்தின் பிரதிநிதியான ஜில்லா கலெக்டரும் மக்களின் பிரதிநிதியான ஸ்ரீ சோமயாஜுலுவும் தயாராகக் காத்திருந்து ராஜாஜியை அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். ரயில் நிலையத்துக்கு வெளியே கூடியிருந்த ஜனக் கூட்டத்தைப் பார்த்தபோது அவர்கள் ஏற்றுக் கொண்டது மிகவும் கடினமான பொறுப்பு என்றே தோன்றியது.

கோவில்பட்டியைச் சாதாரணமாக அவ்வளவு தேசிய உற்சாகம் கொண்ட ஊர் என்று சொல்ல முடியாது. பிற்போக்கு இயக்கங்களுக்கு அந்த ஊரில் ஆதரவு அதிகம் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் அன்றைக்கு நான் பார்த்த கோவில்பட்டி, பழைய கோவில்பட்டி அன்று. கடை வீதியில் கண்ணுக் கெட்டிய தூரம் கமான் வளைவுகளும் அவற்றில் விதவிதமான வரவேற்புரைகளுமாகக் காட்சி தந்த கோவில்பட்டி. வீதியின் இருபுறங்களிலும் வரிசை வரிசையாக நின்று வாழ்த்தொலிகளைக் கிளப்பிய மக்களின் முகங்களில்தான் என்ன மலர்ச்சி! எத்தனை மகிழ்ச்சி! ஊருக்கு வெளியே சுமார் ஒரு மைல் தூரத்தில் முற்பகல் 11 மணிக்குப் பொதுக் கூட்டம்; அதற்கு வந்திருந்தவர்கள் பல்லாயிரம் பேர்!— என்றால், கோவில்பட்டி வாசிகளின் குதூகலத்தை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

கோவில் பட்டியிலிருந்து திருநெல்வேலி வரையில் சுமார் 36 மைல் தூரம் ராஜாஜி காரில் அழைத்துச் செல்லப்பட்டார். இரண்டு அணா அதிக வரி செலுத்தி வாங்கிய பெட்ரோலைச் செலவழித்துக் கொண்டு கார்கள் பறந்தன. ஆனால் ஒரே மூச்சாகப் பறக்க முடியவில்லை. வழியில் வீடுகள் எங்கெங்கே காணப்பட்டனவோ, அங்கெல்லாம் சாலைகளில் வரவேற்பு வளைவுகள்; ஜனங்களின் கூட்டம்; பிள்ளைகளின் ஆரவாரம்; மாலைகள் மரியாதைகள். அங்கங்கே அரை நிமிஷம் அல்லது ஒரு நிமிஷத்துக்கு மேல் கார்கள் நிற்க முடியவில்லை. அந்தச் சிறிய நேரத்திலேயே ஜனங்கள் தங்கள் அன்பையும் உற்சாகத்தையும் காட்டித் திருப்தி அடைந்தார்கள்.

மத்தியானம் ஒரு மணிக்கு ராஜாஜியின் வண்டி திருநெல்வேலியை அடைந்தது. அந்த நேரத்தில் திருநெல்வேலி நகரத்தின் வீதிகளில் அவ்வளவு ஜனங்கள் வரிசை வரிசையாகவும் ஒழுங்காகவும் நெருக்கி யடித்துக் கொண்டு நிற்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அந்த ஜில்லாவின் அதிகாரிகளும் தொண்டர்களும் அவ்விதம் எதிர்பார்த்து அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)



கேச விருத்திக்கும்
PERFUMED CASTOR OIL
முக மலர்ச்சிக்கும்
ஸ்வஸ்திக்
வாஸனை
கேஸ்டர் ஆயில்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், வடாலா, பம்பாய்


அறிவாளி!
ஸெவன் ஓ'கிளாக்
ஸ்லாட்டெட்
பிளேடுகளினால்
தினசரி முகத்தை
க்ஷவரம் செய்து
கொள்கிறார்.
ஸெவன் ஓ'கிளாக்
ஸ்லாட்டெட் பிளேடுகள்
7 o'clock
ஸெவன் ஓ'கிளாக் ஸ்லாட்டெட் பிளேடுகள்
10 ப்ளேடுகள் கொண்ட
பாக்கெட் ரூ. 1

# தமிழ்க் களஞ்சியம்

டி.கே.சி

## 3. நானுக்கும் பெற்றேன்!

தொண்டை நாடு என்பது சோழ நாட்டுக்கு வடக்கே உள்ளது. பல சந்தர்ப்பங்களில் சோழ நாட்டோடு ஒன்றாய் இருந்ததுண்டு. வேறுபட்டுத் தனித்திருந்ததும் உண்டு. சோழனது உறவினர்களே தொண்டை நாட்டை ஆண்டு வந்தார்கள், காஞ்சிபுரம் அவர்களுக்குத் தலைநகரமாய் இருந்து வந்தது.

தொண்டை நாட்டு அரசரில் ஒருவன் **கடுமான் திரையன்.** அவனைப் பற்றி ஒரு கதை:—புராணக் கதை.

சோழ மன்னன் ஒருவன் கிழக்கேயுள்ள ஏதோ ஒரு தீவின் மேல் படை எடுத்தான். அங்கே சில காலம் தங்க நேர்ந்தது. அங்குள்ள ஒரு பெண்ணை மணந்தான். அவள் கர்ப்பவதியாய் இருக்கும்போது மன்னன் தன் நாட்டுக்குப் போக வேண்டிய அவசியம் நேர்ந்தது. அவனும் புறப்பட்டு விட்டான்.

புறப்படும்போது தீவகத்து மனையாளிடம்,—"குழந்தை பிறந்ததும் ஆண் குழந்தையாக இருந்தால் குழந்தையைப் படகில் வைத்து என்னிடம் அனுப்பிவிடு. நம்முடைய குழந்தை என்று இனங்கண்டு கொள்ளுவதற்காகத் தொண்டை மாலையைக் கழுத்தில் அணிந்து அனுப்ப வேண்டும்" என்று சொல்லிப் படகில் ஏறிப் போய் விட்டான்.

* * *

குழந்தை பிறந்தது. அதுவும் ஆண் குழந்தையாய் இருந்தது. அரசன் சொன்னபடி தொண்டை மாலையைக் கழுத்தில் அணிந்து ஒரு பொன் மயமான படகில் வைத்துக் குழந்தையை அனுப்பி விட்டாள் தாய்.

படகு சோழ நாட்டின் கடற்கரைப் பக்கமாக மிதந்து வந்து ஒரு மரத்தின் நிழலில் நின்றது.

இப்படி வந்து நின்ற விவரம் சோழனுக்குத் தெரிய வந்தது. விஷயம் தெரிந்து விட்டது. கடற்கரைக்கு வந்து தொண்டை மாலை அணிந்திருந்த குழந்தையைப் படகிலிருந்து மெள்ளக் கையால் அணைத்தெடுத்து அரண்மனைக்குக் கொண்டு போனான். செல்வமாக வளர்த்து வந்தான் குழந்தையை.

குழந்தை காளைப் பருவம் அடைந்ததும் அரசன் தன்னுடைய ராஜ்யத்தின் வட பகுதியைத் தொண்டைநாடு என்று பெயரிட்டு, அதற்கு அந்த மகனை அரசனாக்கினான். அவனுக்குத் தொண்டைமான் என்னும் பட்டமும் அளித்தான்.

அந்தத் தொண்டைமான் வழியில் வந்தவன் திரையன். திரையன் என்றால் கடல் அலையில் இருந்து வந்தவன் என்பது பொருள்.

இனி கவிக்கு வரலாம்:

இரவும் பகலும் சமுத்திரமானது எப்படி யெல்லாமோ கும்மாளி போட்டுக் கோஷித்துக் கொண்டிருக்கிறது. அலைகள் உயர்கின்றன, சுழல்கின்றன. இப்படியும் அப்படியுமாகக் குதிக்கின்றன. பார்த்தால் ஒரே ஆனந்தத்தில் அல்லவா கும்மாளி போடுகிறது கடல் என்று சொல்லத் தோன்றும்.

கடலுக்கு அந்த ஆனந்தம் எப்படி வந்தது?

**கங்குலும் நண்பகலும்**
**துஞ்சா இயல்பிற்றாய்**

**மங்குல்சூழ் மாக்கடல்**
**ஆர்ப்பதூஉம்,—வெஞ்சினவேல்**

**கான்பயந்த கண்ணிக்**
**கடுமான் திரையனை**

**யான்பயந்தேன் என்னும்**
**செருக்கு.**

[கங்குலும் நண்பகலும்: இரவானாலும் சரி, மத்தியானம் பன்னிரண்டு மணியானாலும் சரி: துஞ்சா இயல்பிற்றாய்: தூங்குதல் என்பதே இல்லாமல்; மங்குல் சூழ் மாக்கடல் ஆர்ப்பதூஉம்: சதா வான வட்டத்தோடு ஒட்டிக் கிடக்கும் மேகங்கள் சூழ்ந்த சமுத்திரம் ஆரவாரிப்பதின் காரணம் எல்லாம் ;—

வெஞ்சின வேல்: கொடிய கோப பாவம் கொண்ட வேலேந்திய ; கான் பயந்த கண்ணி: தொண்டைச் செடியில் இருந்து வந்த தொண்டைப் பூவினால் கட்டப்பட்ட மாலையைத் தலைக்கு அணிந்த; கடுமான் திரையனை: கடுமான் திரையன் என்ற பெயர் கொண்ட சக்கர வர்த்தியை; யான் பயந்தேன் என்னும் செருக்கு: நானுக்கும் பெற்றேன் என்னும் எக்களிப்புத்தான், மாக்கடல் ஆர்ப்பதற்குக் காரணம்.]



கவிஞர் திரையனது முன்னோர்களைப் பற்றிய கதையையும் அனுபவித் திருக்கிறார். கடலலைகளின் கும்மாளியையும் அனுபவித்திருக்கிறார். அதன் பயனாக அழகான கவி பிறந்தது.

• •
•

திரையனைப் பற்றியே இன்னொரு கவி. செவிலித் தாய் ஒருத்தி திரையனிடம் வந்து சொல்லுகிறாள்:

"நான் அருமையாய் வளர்த்து எடுத்த பெண், மிக்க துன்பத்துக்கு உள்ளாகியிருக்கிறாள். அதற்கு நீதான் காரணம். சதா உன்னையே நினைத்துக்கொண் டிருக்கிறாள். மனசு புண்பட்ட நிலையில் இருக்கிறது. ஒரு வகையாய்ப் பகல் நேரம் கழிந்து விடுகிறது. எப்படி என்று கேளும். தனக்கு முன்னால் மணலைச் சமமாகப் பரப்பிக் கொள்ளுகிறது. கண்ணை மூடிக்கொண்டு ஆள்காட்டி விரலினால் வட்ட வட்டமாகச் சுற்றி வரும்படி போட்டுக் கொண்டே இருக்கிறது. முதல் வட்டம் கடைசி வட்டத்தோடு பொருந்தி விட்டால் நீ அவளை வந்து அணைவாய் என்பது குறிப்பு. அல்லாத பட்சம் ஏமாற்றம். இந்த மாதிரி குறி பார்க்கிற ஜோலியில் (ஆழி இழைத்தல்) பகல் நேரம் ஒரு வகையாய்க் கழிந்து விடுகிறது.

"இரவு நேரமும் ஒரு வகையாய்க் கழிந்து விடுகிறது என்று சொல்லலாம். பக்கத்து வீட்டுத் தோழி வந்து துணையாய்ப் படுத்துக் கொள்ளுவாள். அவளிடம் என்ன எல்லாமோ பேசிக்கொண் டிருப்பாள். உன்னைப் பற்றியும் உன்னுடைய வீரத்தைப் பற்றியும் அழகைப் பற்றியும் அனேகமாய்ப் பேச்சு இருக்கும். இந்த விதமாக இரவு கழியும். விடிந்தும் விடும்.

ஆழி இழைப்பப்
    பகல்போம், இரவுவரின்

தோழி துணையாத்
    துயர்தீரும்; — வாழி

நறுமாலை தாராய்!
    திரையவோ என்னும், —

சிறுமாலை சென்றடையும்
    போழ்து


[ஆழி இழைப்பப் பகல் போம்: கடல் இழைத்துக் குறி பார்ப்பதில் பகல் போய் விடும்; வாழி நறு மாலை தாராய்: தினம் தினமும் என்றென்றும் நல்ல வாசனையோடு கூடிய மாலையை அணிகிறவன் அல்லவா நீ! அந்த மாலையில் அவளுக்கு நினைவு போய் ஏக்கம் உண்டாகி "மாலையைத் தர மாட்டாயா திரையனே!" என்று பைத்தியம் கொண்டவளாய்க் கதறுகிறாள்:

எப்போது—சிறுமாலை சென்றடையும் போழ்து: அந்தி நேரம் வந்து விட்டால்.

அந்தி நேரம் வந்துவிட்டால் காதலனோடு கூடிக் குலவி இருக்கிற நேரம் வந்து விட்டது என்ற ஏக்கந்தான் விஷயம்.]

கவிகளில் ஏதாவது ஒரு பாவம் வந்து ஒலிக்க வேண்டும். 'கன்றுகளும் நண்பகலும்' என்ற பாட்டில் "நான் பயந்தேன்" என்னும் எக்களிப்பு பாவம் ஒலிக்கிறது.

'ஆழி இழைப்ப' என்னும் பாட்டில் சோக பாவம் நிறைந்து ஒலிக்கிறது. அது வெளிப்படை.



*Setting a Style with Binnys*

ஆடவர்களின் ஆடைகள் நாளுக்கு
நாள் நாகரீகத்தில் முன்னேறி வருவது
அவர்கள் காலத்திற்கும், தோற்றத்திற்
கும் ஏற்ற ஆடைகளை கவனித்து வாங்கு
வதே. இந்தியாவில் அக் கனவான்கள்
எப்பொழுதும் விரும்பி வாங்குவது,
தினம் தினம் புதிய புதிய டிஸைன்களி
லும் கண்ணைக் கவரும் கலர்களிலும்
தயாரிக்கப்படும் B & C மில் துணிகளே.

**VENKATESH VASTRALAYA**

**CITY DISTRIBUTORS:**

**RETAIL SHOWROOM:** **'Phone: 4688**

**2, THAMBU CHETTI STREET, MADRAS-1**



ஜூன் 28உ முதல்
தமிழ் நாடெங்கும்
ராகினியின்
தர்ம தேவதா
டைரக்ஷன்
P. புல்லையா, B.A.
சாந்தகுமாரி..லலிதா..கிரிஜா
லக்ஷ்மிபிரபா..லிங்கமூர்த்தி...
மூக்காமலா..ரேலங்கி..கௌசிக்
நாராயணன் கம்பெனி ரிலீஸ்

# சொல்ல வந்தாள்!

வி.எஸ்.ஆர்

என் தகப்பனார் ஆரம்ப பாடசாலை உபாத்தியாயர். எங்கள் குடும்ப நிலையை ஊகித்துக் கொள்வதற்கு மேற்சொன்ன தகவல் ஒன்றே போதாதா? வீட்டில் அம்மா, அப்பா, பாட்டி, என் அக்கா சுசிலா, கடைக்குட்டிப் பெண் கமலாவாகிய நான்—ஐந்து பேர் கொண்ட எங்கள் குடும்பம் எப்படிக் காலம் தள்ளி வந்தோம் என்பதே உலக அதிசயங்களில் ஒன்றாகத் தோன்றியது. ஒரு சின்னஞ்சிறு அதிசயம் எங்கோ ஒரு மூலையில் நடந்தால் பத்திரிகையில் பிரமாதப் படுகிறது. ஆனால் அறுபது ரூபாய்ச் சம்பளத்தில் இத்தனை பேர் உயிர் வாழும் இந்த அதிசயத்தை எந்தப் பத்திரிகையும் வெளியிடவில்லை!

அம்மா ரொம்பவும் சாமர்த்தியசாலி. வீட்டில் வரவு செலவு எல்லாம் அம்மாதான். சொற்ப சம்பளத்தில், ஆனால் கௌரவமாக நாங்கள் வாழ்வதற்கு அம்மாவின் சீரும் சிக்கனமும்தான் காரணம். விவரம் தெரியாத இளம் பருவத்தில் நானோ அக்காவோ 'அது வேண்டும்' 'இது வேண்டும்' என்று பிடிவாதம் பிடித்து அழும்பு செய்வோம். அப்போது அம்மா கண்டிப்பாகத்தான் இருப்பாள். அம்மாவிடம் எப்பொழுதும் எங்களுக்குப் பயந்தான். வெட்டு ஒன்று, துண்டு இரண்டுமாகப் பேசும் சுபாவம். தாமரை இலை நீர் போல் வேதாந்தியாக உள்ள மனிதரைக் கணவனாகப் பெற்ற அம்மா அப்படி யெல்லாம் இல்லாவிட்டால் குடும்பத்தை நிர்வகித்திருக்க முடியுமா?

அக்காவும் நானும் பளிச்சென்று பாவாடையும் சட்டையும் அணிந்து வெளியில் செல்லும்போது அக்கம் பக்கத்தவர் வியப்புடன் எங்களைப் பார்ப்பதை நாங்கள் அறியாமல் இல்லை. "நாமகிரியின் சமர்த்தே சமர்த்து!" என்று அம்மாவைப் புகழ்வார்கள். "ஏழை வாத்தியார் பெண்களாகத் தோன்றுகிறதா, பார்! பெரிய சம்பளக்காரன் பெண்கள் மாதிரி யல்லவா இருக்கிறார்கள்!" என்பார்கள். என் தமக்கையும் நானும் 'மூக்கும் முழியுமா' அழகா யிருப்பதாகப் பலர் அப்பொழுதே சொல்லக் கேட்டிருக்கிறேன். சாதாரணக் கிழிசல் சட்டையைத் தைத்துப் போட்டுக் கொண்டால் கூட எங்களுக்கு எடுப்பாகத்தா னிருக்கும்.

ஆனால், சுசிலாவின் அழகின் முன் நான் எம்மாத்திரம்? அவள் எலுமிச்சம் பழ நிறம். படிப்படியான கடல் அலை போன்ற கூந்தல். கோவைப் பழம் போன்ற உதடுகள். வயதாக ஆக, மெருகிட்டுக் கொண்டிருந்த அவளது அழகைப் பார்த்து நான் பிரமித்தேன். அடிக்கடி நான் கண்ணாடியைக் கையில் ஏந்தி என் அழகை ஒப்பிட்டுப் பார்ப்பேன். அவ்வப்பொழுது என் உள்ளத்தே பொறாமை ஏற்படத்தான் செய்தது.

ஆனால் அந்தப் பொறாமை அக்காவை வெறுக்கும் அளவுக்கு வளர்ந்து விடுமா? அன்றியும் இந்த உலகத்தில் யார்தான் அக்காவை வெறுக்க முடியும்! தந்தப் பதுமை போன்ற அவள் உடல் தங்கமான இதயத்தையும் தன்னுள் கொண்டிருந்தது. கோபம் என்பதை அறியாதவள் சுசிலா. உரக்கப் பேசி அறியாதவள் சுசிலா.

அக்காவிடம் பெற்றோர்கள் உயிராக இருந்ததில் என்ன ஆச்சரியம்? அம்மாவுக்கு சுசிலா என்றால் விசேஷப் பிரியம். "சுசிலா! அறுவான் மணையில் கையை நறுக்கிக் கொள்ளப் போகிறாய்!" என்றெல்லாம் அம்மா அவளைக் காரியமே செய்ய விடாமல் இருப்பது எனக்குக் கோபத்தை உண்டாக்கும். இந்த வீட்டில் சுசிலா மட்டும் மகாராணியாக அலங்காரப் பொம்மையாக இருக்க வேண்டும், நான் மட்டும் உழைக்க வேண்டுமாக்கும் என்று பொருமுவேன். ஆனால் அம்மாவின் கட்டளையை எதிர்த்துப் பேச எனக்குத் தைரியம் இல்லை.

அவளது கல்யாணத்தைச் சீக்கிரத்தில் முடித்து விடப் பெற்றோர்கள் துடிதுடித்தனர். நிறைய ஜாதகங்களும் குவிந்தன. ஒரு ஜாதகம் ரொம்பவும் நன்றாகப் பொருந்தியிருப்பதாக அப்பா சொன்னார். அந்த ஜாதகன் சென்னைப் பட்டணத்தில் ஒரு மோட்டார் தொழிற்சாலையில் மானேஜராக இருப்பதாகவும் முந்நூறு ரூபாய் சம்பளக்காரரென்றும் சில தினங்களில் பெண்ணைப் பார்க்க வரப் போவதாகவும் அப்பா ஒரு நாள் சொன்னார். அவ்வளவு பெரிய வரன் எங்களுக்குக் கிடைக்குமோ என்று சந்தேகப் பட்டோம். சுந்தரேசன் என்ற வாலிபரும் அக்காவைப் பார்த்தார். என்ன நடந்ததென்று சொல்லவும் வேண்டுமா? அவள் அழகில் சொக்கிப்போன அவர் உடனேயே கல்யாணத்தை வைத்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டார். எங்கள் குதூகலத்தை அளவிட முடியாது.

கல்யாணச் செலவுக்கு என்ன செய்வது என்பதைப் பற்றி ஒரு சிறு புயலே எங்கள் வீட்டில் அடித்தது. "கையில் ஆயிரம் ரூபாய் கொடுத்தால் போதும்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார் சுந்தரேசன். இதைத் தவிரக் கல்யாணத்துக்குக் குறைந்தது ஆயிரம் ஆகும். இந்த இரண்டாயிரத்துக்கு எங்கே போவது? வந்திருக்கும் வரன் நல்ல வரன். சம்பளத்தைத் தவிரப் பெரியோர்கள் வைத்துப் போன சொத்தும் ஏராளமாக இருந்ததென்று கேள்வி. இவ்வளவு நல்ல வரனை நாங்கள் கற்பனை கூடச் செய்ய முடியுமா?

பூர்விக சொத்தாக இருந்த எங்கள் வீட்டை விற்று அக்காவின் கல்யாணத்தை நடத்த முடிவு செய்தாள் அம்மா. இந்தச் சமயத்தில் அப்பாவும் பாட்டியும் என் கட்சியைப் பேச முன் வந்தார்கள். "வீட்டை இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்கலாம். அதைக் கொண்டு சுசீலா கல்யாணத்தைச் செய்து விட்டால் கமலாவின் கதி? அவள் ஒருத்தி இருக்கிறாள் என்ற நினைவே உனக்கு இல்லையே!" என்று அவர்கள் அம்மாவைக் கடிந்து கொண்டார்கள். ஆனால் அம்மாவோ, "இவ்வளவு நல்ல வரனை நாம் எப்படி நழுவவிட முடியும்? நாளைக்குச் சுசீலாவுக்குக் கல்யாணமாகி அவள் பணக்காரியாகி விட்டால் அவள் நம்மை மறந்துவிடப் போகிறாளா? தங்கையின் கல்யாணத்தை நடத்தி வைப்பதில் அவளுக்கு அக்கறை இல்லையா?" என்றாள் அம்மா.

சுசீலாவின் போக்கு எனக்குத் திகைப்பையும் கோபத்தையும் உண்டாக்கியது.

'இவ்வளவு பணக்கார வரன் எனக்கு வேண்டியதில்லை. வீட்டையே விற்று எனக்குத் தடபுடல் கல்யாணம் வேண்டாம். ஒரு ஏழை வரனாகவே எனக்குப் பாருங்கள். வீட்டை விற்கும் அவசியம் ஏற்படாமலிருக்கட்டும்!' என்று சுசீலாவே சொல்லுவாள் என்று நான் எதிர்பார்த்தேன். ஒன்றும் சொல்லாமல் கல்லுப் பிள்ளையார் மாதிரி இருந்த சுசீலாவைப் பார்த்து எனக்குக் கோபம் வரத்தான் செய்தது.

சில வாரங்களுக்கெல்லாம் வீடு விற்கப்பட்டு, சுசீலாவின் கல்யாணமும் நடந்து முடிந்தது. மாப்பிள்ளை சுந்தரேசனைப் பார்த்துப் பூரித்துப் போனாள் அம்மா. "சுசீலாவின் அதிர்ஷ்டம் யாருக்கு வரும்?" என்று பெருமையுடன் கூறினாள். அக்காவின் பெருமையையும் சந்தோஷத்தையும் பற்றிக் கூறவும் வேண்டுமா?

சுந்தரேசன் குறுகுறுப்பான பார்வையும் சுறு சுறுப்பான சுபாவமும் உள்ளவராக இருந்தார். எங்களுடன் சகஜமாகவும் பிரியமாகவும் பழகினார். சுசீலாவுடன் முகூர்த்த தினத்தன்றே கொஞ்சிக் குலாவத் தொடங்கியதில் வீட்டிலுள்ளவர்களுக்கே சங்கோசமாக இருந்ததென்றால் சுசீலாவுக்கு எப்படியிருந்திருக்கும்? மாப்பிள்ளைக்கோ மாப்பிள்ளை வீட்டாருக்கோ எவ்விதக் குறையும் இல்லாமல் கல்யாணத்தை முடித்து விட்டோம். மறு நாள் சுந்தரேசன் அக்காவை அழைத்துக் கொண்டு பட்டணம் போய்விட்டார்.

அக்கா புக்ககம் போன பிறகு நாங்கள் எல்லோருமே அவள் பிரிவாற்றாமையால் வருந்தினோம். வீடே வெறிச் சென்றிருந்தது. தன் செல்வப் பெண் புக்ககம் போன பிறகு அம்மாவுக்கு உலகமே அஸ்தமித்தது போல் தோன்றியது. "நம்மைப் பிரிந்து சுசீலா என்ன மனக்கஷ்டம் அடைகிறாளோ! புக்ககத்தில் என்னென்ன வேலைகள் செய்யும்படி நேருகிறதோ? அவளை மாமியார் என்ன மாதிரி நடத்துகிறாளோ? அகமுடையான் சந்தோஷமாக வைத்துக் கொள்கிறானா?" என்றெல்லாம் அடிக்கடி கேட்டுக் கொண்டிருப்பாள். அம்மாவின் உடல் எங்கள் வீட்டில் இருந்ததே தவிர அவள் கவனம், எண்ணம், உள்ளம் எல்லாம் சுசீலாவின் புக்ககத்தில் இருந்தது. 'அக்காவுக்காக இவ்வளவு அங்கலாய்க்கிறவள் அவளுடன் கூடவே போய் இருப்பதுதானே?' என்று எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும்.

கல்யாணமாகிப் புக்ககம் போன சுசீலாவிடமிருந்து கடிதமே வராதது எங்களுக்குக் கவலையையும் கோபத்தையும் உண்டாக்கியது. அம்மாவுக்கும் தபால்காரனை எதிர்பார்த்துக் கண் பூத்துவிட்டது. "பிறந்த வீட்டையே

* * * * * * * * * * * * * * * * * * * * * *



## பிரபல திருமணம்!

மாயூரம் ஸ்ரீ வி. சாமி ஐயங்கார் அவர்களின் செல்வக்குமாரி சௌபாக்யவதி மனோன்மணிக்கும் சென்னை ராயப்பேட்டையில் உள்ள குடவாசல் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி அய்யங்கார் அவர்களின் புதல்வர் ஸ்ரீ கே. பி. ரங்கசாமிக்கும் சென்ற 12-ந் தேதி மாயூரம் மணமகள் இல்லத்தில் மிகவும் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. சென்னை நகரில் உள்ள பிரமுகர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், சங்கீத வித்வான்கள், நண்பர்கள், உறவினர்கள் பலரும் ஏராளமாகத் திருமணத்துக்கு விஜயம் செய்து மண மக்களுக்கு ஆசி கூறினார்கள். மணமக்களுக்கு இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் அன்பளிப்புகளும் வந்து குவிந்தன. மாலை ஸ்ரீ ஜி. என். பாலசுப்ரமணியம் கோஷ்டியாரின் இனிமையான சங்கீதக் கச்சேரி நிகழ்ந்த போது தஞ்சை ஜில்லாப் பிரமுகர்கள் அனைவரும் விஜயம் செய்து சிறப்பித்தனர். வாழ்க, மணமக்கள்!

* * * * * * * * * * * * * * * * * * * * * *

மறந்து விட்டாளா என்ன ?'' என்று பாட்டி அங்கலாய்த்தபோது அம்மாவுக்கு அழுகை வந்துவிடுமோ என்று பயந்தேன்.

கோடி வீட்டு விசாலம் அன்று பட்டணத்தி லிருந்து ஊருக்குத் திரும்பி வந்திருந்தாள். அவள் சொல்லிய தகவலைக் கேட்டு நாங்கள் திகைத்து விட்டோம். சுசீலாவையும் அவள் கணவன் சுந்தரேசனையும் விசாலம் ஒரு சினி மாவில் பார்த்தாளாம். சுசீலாவை வைரத் தால் இழைத்திருந்தானும் அவள் புருஷன். அவள் கட்டிக்கொண்டிருந்த பட்டுப் புடவை கண்ணைப் பறித்ததாம். ஆனால் சுசீலா விசா லத்தைப் பார்த்தும் கூட அடையாளம் கண்டு கொள்ளாதவள் போல் பேசாமல் போய் விட்டாளாம். "சுசீலா இப்படி அடியோடு மாறி விடுவாள் என்று நான் சொப்பனத் திலும் நினைக்கவில்லை !'' என்று ஆச்சரியப் பட்டாள் விசாலம்.

கடிதம் வராததைக் கண்டு இருப்புக் கொள்ளாத அம்மா பட்டணம் போய்ப் பெண்ணைப் பார்த்துவர ஆயத்தம் செய்து கொண்டாள். நாலு படி மா வடு வாங்கி ஊறுகாய் போட்டாள். ஒரு தகர டின் நிறையக் கருவடாம், அப்பளாம் தயாரித்து எடுத்துக் கொண்டாள். மணத் தக்காளிக்காய் என்றால் சுசீலாவுக்குப் பிடிக்கும். கொல்லை யில் காய்த்த மணத்தக்காளிக்காயில் இரண்டு படியுடன் சென்னைக்குப் புறப்பட்டுப் போனாள். அம்மாவின் ஏற்பாட்டைப் பார்த் தால் ஆடி ஆறும் மாதத்துக்குப் பெண்ணையும் மாப்பிள்ளையையும் கையோடு அழைத்து வரும்வரை சென்னையிலேயே தங்கப் போவ தாகத் தோன்றியது.

ஆனால் என்ன ஏமாற்றம் ! அம்மா புறப் பட்ட மறுநாளே திரும்ப ஊருக்கு வருவ தென்றால் எங்கள் பதைபதைப்பும் வேதனை யும் எத்தகையதாக இருக்க வேண் டும் ? வரும்போதே அம்மா முகத் தில் எள்ளும் கொள்ளும் வெடித் தது. உள்ளே வந்ததும் துக்கம் தாங் காமல் கதறி அழுது விட்டாள். "என்ன ? என்ன? ஏன் அழுகிறாய் ?'' என்று திகில் பிடித்துக் கேட்டார் அப்பா. "குழந்தை சௌகரியமாகத் தானே இருக்கிறாள் ? மாப்பிள்ளை உடம்பு சுகம் தானே ?'' என்று பாட்டி படபடத்தாள்.

"அவர்களுக்கு என்ன கொள்ளை வந்து விட்டது ? கொழுக்கட்டை மாதிரிதான் இருக்கிறார்கள் ?'' என்று ஆத்திரத்துடன் சொன்னாள் அம்மா. எங்களுக்குப் போன உயிர் வந்தது. "அவள் என் பெண் அல்ல ; துரோகி! நன்றி கெட்ட நயவஞ்சகி !'' என்று சபித்தாள் அம்மா.

"என்ன நடந்தது ? சொல்லேன் !'' என்று துடிதுடித்தார் அப்பா.

"வீட்டுக்குள் வந்த என்னை 'வா' என்று கூட அந்தப் பாவி சொல்ல வில்லை. என்னைக் கண்டதும் 'கடுவன் பூனை' மாதிரி முகத்தை வைத்துக் கொண்டாள் ! எனக்குப் பகீரென்றது. இருந்தாலும் சமா ளித்துக் கொண்டு நான் கொண்டுபோன மணத்தக்காளியை அவளிடம் கொடுத்தேன். 'போயும் போயும் அபூர்வமாக இதைத்தான் கொண்டு வர வேண்டுமாக்கும். பார்த்தால் யாராவது சிரிக்கப் போகிறார்கள் ! எங்கள் தோட்டத்தில் காய்க்கும் தக்காளியை இன்று காலை வேலைக்காரியைப் பறித்துக் கொள்ளச் சொன்னேன்' என்று சொல்லி நான் ஆசை யுடன் கொண்டு போன மணத் தக்காளியைக் குப்பைத் தொட்டியில் கொட்டினாள். எனக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது. பிறகு சமையற்காரியைக் கூப்பிட்டு, "இவருக்குச் சாதம் போடு !'' என்று கடுமையாகச் சொல்லிவிட்டு மேலே மாடிக்குப் போய் விட்டாள். போனவள் மாடியை விட்டு இறங்கி வரவேயில்லை. மத்தியானம் நான் அவளைப் பார்க்க வேண்டுமென்று சொல்லி யனுப்பினேன். 'நாவல் படித்துக் கொண் டிருக்கிறேன். இப்பொழுது பார்க்க முடி யாது !' என்று சொல்லி யனுப்பினாள். இந்த மாதிரி என்னை முகத்தில் அடித்த பிறகு நான் ஏன் அங்கே இருக்கிறேன் ? ராத்திரி ரயிலில் ஏறி இங்கே வந்து விட்டேன். அவளிடம் சொல்லிக் கொள்ளக்கூட இல்லை. என்ன மமதை ! என்ன ராங்கி ? பணத் திமிர்தானே அவளை இந்த மாதிரி செய்திருக்கிறது! என்ன இருந்தாலும், பெற்ற தாயாரிடம் இப்படி நடந்து கொள்ளும் ராட்சசியை நான் கேள் விப்பட்டது கூட இல்லை. அவள் என்ன செய் வாள், பாவம் ! அருமை பெருமையாக வளர்த்துப் பெரிய இடத்தில் கொடுக்க வேண்டுமென்று நினைத்தோ மல்லவா ? விர லுக்குத் தகுந்த வீக்கம் வீங்காமல் நம்



செல்வம் எல்லாவற்றையும் அவளுக்குக் கொட்டினோ மல்லவா?" என்று ஆத்திரத்தைக் கொட்டினாள் அம்மா.

அம்மாளின் நிலைமைக்காக இரக்கமும் சுசிலாவின் கர்வத்திற்காகக் கோபமும் ஏற்பட்டது எனக்கு.

"மாப்பிள்ளையைப் பார்க்கவில்லையா?" என்றாள் பாட்டி.

"அவன் பம்பாய்க்குப் போயிருக்கிறானாம்! நல்ல வேளை, அவனும் சேர்ந்து என்னை அவமானப் படுத்தவில்லை" என்றாள் அம்மா. அப்பா, அம்மாவைப் பார்த்து, "இங்கே பார்! அவள் கோபமாக இருந்தால், அதற்காக நீயும் கோபித்துக்கொண்டு வந்து விடுகிறதா? அவளிடம் சொல்லாமல் புறப்பட்டு வரலாமா? அவளோ இப்பொழுது பணக்காரி. நீ மணத்தக்காளியையும் பொரிவிளங்காவுருண்டையையும் கொண்டுபோனால் அவளுக்குக் கோபம் உண்டாகத்தான் செய்யும். விதரணை தெரியாமல் அப்படிக் கொண்டுபோனது உன் பிசகுதான். அவள் உன்னை வரவேற்காதது தவறுதான். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் நம் குழந்தையிடம் நாம் சலுகை காட்டாவிட்டால் வேறு யார் காட்டுவார்கள்?" என்றார் அப்பா.

ஆனால் அம்மா மன்னிக்கத் தயாராக இல்லை. "குழந்தையாம் குழந்தை! கோட்டான்!" என்றாள் அம்மா.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அம்மாவுக்கு விரக்தி ஏற்பட்டு விட்டது. அவள் சந்தோஷமே போய்விட்டது. எதிலும் சிரத்தை கொள்ளாமல் இயந்திரம் போல் வேலைசெய்தாள். அவளது ஏக்கத்தைப் போக்க அப்பா பல வழிகளில் முயற்சி செய்தார். ஆதரவான வார்த்தைகள் சொல்லி ஆனந்தப் படுத்த முயலுவார்.

அம்மாவின் வேதனையைப் பார்த்து என் நெஞ்சில் தோன்றிய இரக்கம் ஒரு வைராக்கியமாகப் பரிணமித்தது. நான் கல்யாணமே செய்து கொள்ள மாட்டேன். புக்ககத்துப் பெருமையால் கர்வமடையவோ, பிறந்தகத்துக்குத் துரோகம் செய்யவோ சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள மாட்டேன் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

மறுமாதம் அப்பா என்னிடம் ரகசியமாக, "கமலா! நான் பட்டணம் போய் நிலைமை என்னவென்று பார்த்துவிட்டு வருகிறேன்" என்றார். தஞ்சாவூரில் உபாத்தியாயர்கள் மகாநாடு நடப்பதாக அம்மாவிடம் கூறிவிட்டுச் சென்னைக்குப் புறப்பட்டார். மனம் ஒடிந்து போய், சோக சித்திரமாக அப்பாவும் திரும்பி விட்டார். அம்மாவுக்குக் கிடைத்த வரவேற்பே அப்பாவுக்கும் கிடைத்தது. "என்னைக் கண்டதும் யாரோ ஒரு சிநேகிதி வீட்டுக்குப் புறப்பட்டுப் போன சுசிலா வீட்டுக்குத் திரும்பி வரவேயில்லை" என்று அப்பா சொன்னதும் என் உள்ளம் கொதித்தது.

அதற்குப் பிறகு தப்பித் தவறிக்கூட நாங்கள் வீட்டில் அவள் பேச்சை எடுப்பது கிடையாது. அன்று எங்கள் வீட்டுக்கு வந்த ஒரு அம்மாள், "சுசிலாவிடமிருந்து கடிதம் வருகிறதா?" என்று கேட்டாள். "சுசிலா போய் எத்தனையோ நாளாச்சு!" என்று 'வெடுக்'கென்று பதிலளித்தாள் அம்மா.

வருஷங்கள் இரண்டு சென்றன. நான் எஸ். எஸ். எல். ஸி. படிப்பை முடித்துவிட்டு ஆசிரியை பயிற்சிக்காகப் படித்து வந்தேன். ஒருநாள் கோடி வீட்டு விசாலத்தின் சகோதரர் பட்டணத்திலிருந்து எங்கள் ஊருக்கு வந்திருந்தார். அவர் திடுக்கிடத்தக்க தகவல் ஒன்றை எங்களிடம் சொன்னார். "சுசிலாவின் கணவர் வேறொரு ஸ்திரீயுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிறார். இதனால் சுசிலாவுக்கும் அவள் கணவருக்கும் வீட்டில் சண்டையும் சச்சரவும் ஏற்பட்டு அவள் வீட்டில் கண்ணீரும் கம்பலையுமாகவே இருக்கிறாள்" என்பது தான் அவர் சொல்லியதின் சாராம்சம்.

இச்செய்தியைக் கேட்டதும், "பாவம் அக்கா!" என்ற வார்த்தைதான் என்னிடமிருந்து வந்தது. "அந்தத் துரோகிக்கு நன்றாக வேண்டும். அந்த நன்றி கெட்டவளுக்குக் கடவுள் சரியான தண்டனை யளித்து விட்டார். பண மமதையால் கண்காது தெரியாமல் நடந்துகொண்ட கர்விக்குக் கடவுள் புத்தி வரும்படி செய்கிறார்; சாகட்டும். தன் கஷ்டத்தை தன் மனிதர்களிடம் சொல்லிக் கொள்ளக்கூட முடியாமல் மனசுக்குள்ளேயே வைத்து வெந்து சாகட்டும்!" என்றாள் அம்மா ஆக்ரோஷத்துடன்.

"வாயில் வந்ததை உளறாதே! குழந்தையின் கஷ்டம் நம் கஷ்டம் இல்லையா? அவளுக்கு ஆறுதல் சொல்பவர் யார்?" என்று மனம் உருகினார், அப்பா!

"யார் என்றுதான் நானும் கேட்கிறேன். நமக்கு நாளைக்கு ஒரு கஷ்டம் வந்தால் போக்கிடம் எது என்று யோசித்துப் பார்க்காமல் தானே அவள் தலை கீழாக நின்றாள்? தானே நம்ம காலில் வந்து நாளைக்கு விழா விட்டால் பாருங்கள்!" என்று சபதம் செய்தாள் அம்மா.

"ரொம்ப கெட்டிக்காரிதான் போ!" என்று கடிந்து கொண்டார் அப்பா.

மறுவாரம் ஒரு நாள் காலை எங்கள் வீட்டு வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து சுசிலா இறங்கி வந்தாள். அவள் உடம்பு இளைத்து உருமாறியிருந்தாள். உடல் கருத்து அழகு குன்றிப் போயிருந்தது.

கையில் ஒரு சிறு பெட்டியுடன் உள்ளே வந்த சுசிலாவை 'வா!' என்று கூடச் சொல்ல முடியாதபடி அதிர்ச்சியினால் எங்கள் வாயடைத்துப் போயிருந்தது. ஆனால் முகத்தில் குதூகலம் பொங்க, "அம்மா!" என்று கூப்பிட்டுக் கொண்டு அம்மாவின் அருகில் அன்போடு சென்றாள் அக்கா.

"அம்மா என்று என்னைக் கூப்பிடாதே! எதற்காக இங்கே வந்தாய்?" என்று அம்மா 'வெடுக்'கென்று கேட்டாள்.

"பிறந்தகத்துக்கு வராமல் வேறு எங்கே போவேன்?" என்றாள் சுசீலா.

"ஏன்? பிறந்தகம் என்று இப்பொழுது தான் நினைவு வந்ததா? ஆசையோடு உன்னைப் பார்க்க வந்தபோது கர்வம் தலைக்கேறி என்னை விரட்டி யடித்தாயே, அப்பொழுது வேண்டாத பிறந்தகம் இப்பொழுது எதற்கு? அன்போடு நாங்கள் எழுதிய கடிதங்களைக் கிழித்தெறிந்தாயே, அப்பொழுது வேண்டாத பிறந்தகம் இப்பொழுது எதற்கு? அருமை அப்பாவையும் கூடப்பிறந்தவளையும் நஞ்சாக வெறுத்து விட்டு இப்பொழுது மட்டும் நாங்கள் எதற்கு? உன் கஷ்டத்தைச் சொல்லிக் காட்டி அழுவதற்கு மட்டும் நாங்கள் வேண்டுமா?" என்று வெடித்துக் கொட்டினாள் அம்மா.

"சுசீலா! வாடி கண்ணே! அம்மா கிடக்கிறாள்!" என்று பாசமும் துயரமும் நெஞ்சை அடைக்கக் கூறினார் அப்பா. சுசீலா பெற்றோர்களைப் பார்த்து உணர்ச்சியால் கம்மிய குரலில், "அம்மா, என்னைப் பார்க்க நீ வந்த போது உன்னைச் சரியாக வரவேற்கவில்லை. அப்பா! உங்களையும் அவமதித்து அனுப்பினேன். இதற்குக் காரணம் என்ன தெரியுமா? என் பணக் கர்வமல்ல. மமதையல்ல. நீங்கள் மறுபடியும் என்னைப் பார்க்க வரக் கூடாது என்ற எண்ணம்தான். கல்யாணமாகிப் புக்ககம் வந்ததுமே, நான் ஒரு துரதிருஷ்டசாலி என்பதைத் தெரிந்து கொண்டேன். வேறொரு பெண்ணிடம் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டு என் கணவர் உலகத்துக்காக என்னைக் கல்யாணம் செய்து கொண்டார் என்பதைப் பட்டணம் போனதுமே தெரிந்து கொண்டேன். இதனால் அவருக்கும் எனக்கும் தினமும் வீட்டில் சண்டையும் பூசலும் முளைத்து என் வாழ்க்கையே நஞ்சாகி விட்டது. என்னை உயிருக்குயிராகக் கருதி வரும் நீங்கள் என் துர்ப்பாக்கியத்தை அறிந்து கொண்டால், உங்கள் இதயம் சுக்கல் சுக்கலாகி விடும். என் துரதிருஷ்டம் உங்களுக்குத் தெரியாமல் இருக்கவும், என்னை வெறுத்து மறந்துவிட வேண்டுமென்பதற்காகவும் கர்வக்காரிபோல் வேஷம் போட்டு உங்களை அவமதித்தேன். ஆனால் இனிமேல் அவ்வாறு நடிக்கவோ, நீங்கள் என் புக்ககம் வராமலிருக்கவோ அவசியம் இல்லை. ஏனெனில் என் கஷ்டம் விட்டது. என் துயரம் தீர்ந்தது. கணவரின் அன்பைப் பெறுவதில் எனக்குப் போட்டியாக இருந்த அந்தப் பெண் சில தினங்களுக்கு முன் காலமாகி விட்டாள். அதிலிருந்தே இவர் எப்படி மாறி விட்டார் தெரியுமா? அம்மா நினைப்பது போல், நான் என் கஷ்டத்தைச் சொல்ல வரவில்லை. என் சந்தோஷத்தைச் சொல்லவே வந்தேன்!" என்று கூறி அப்பா காலில் விழுந்தாள் அக்கா.

மறுகணம், உணர்ச்சி தாங்காமல் தேம்பி யழும் அக்காவை அணைத்த வண்ணம் நானும் ஆனந்தக் கண்ணீர் உகுத்தேன்!


அறிமுகப் படுத்துகிறோம்.....

# மைசூர் சோப்

## தனிக் கட்டிகள்

**சிறந்த சலவை சோப்**

★

கலப்பட மற்றது, ஹானியளிக்கும் மூலப் பொருள்களின் சேர்க்கையற்றது. மிகவும் பரிசுத்தமானது.

**கஷ்டமில்லாமல் துணிகளை வெளுக்கிறது**

நேரம், சிரமம், பணம், வேலை சகலத்தையும் மிச்சப் படுத்தி உங்களுக்குப் பரிபூரணத் திருப்தியை அளிக்கின்றது.

**இன்றே ஒரு கட்டியை வாங்கிப் பாருங்கள்.**

★

கவர்ன்மெண்ட் சோப் பாக்டரி

**பெங்களூர்**

# தி பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு லி-ட்.

தந்தி : EVERMANS] (இந்தியாவில் இணைக்கப்பட்டது) [போன் : 85834

நெ. 3, சிங்காராச்சாரி தெரு : திருவல்லிக்கேணி, மதராஸ்-5

தபால் பெட்டி நெ. 414

எல்லோருக்கும் சௌகரியமான முறையில் ஜூலை மாதத்தில் இரண்டாவது வெள்ளிக் கிழமை குலுக்கும் ஏல சீட்டு ஆரம்பிப்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

சந்தா செலுத்தும் கடைசீ தேதி 7-7-52 ★ முதல் ஏலத் தேதி 11-7-52

| | | மாதச் சந்தா | சீட்டின் மதிப்பு |
|---|---|---|---|
| B | ,, | ரூ. 100/- | ரூ. 2500/- |
| C | ,, | ரூ. 50/- | ரூ. 1250/- |
| D | ,, | ரூ. 25/- | ரூ. 625/- |
| E | ,, | ரூ. 20/- | ரூ. 500/- |
| F | ,, | ரூ. 15/- | ரூ. 375/- |
| G | ,, | ரூ. 10/- | ரூ. 250/- |


25 மாதங்கள் — 25 மெம்பர்கள்

ரூ. 25க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாங்கிகளின் செக் பெற்றுக் கொள்ளப்படும். அதற்குக் குறைந்த தொகைகளை மணியார்டர் அல்லது இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம். வேண்டுவோருக்கு இலவசமாக நிபந்தனைகளும் விண்ணப்ப பாரங்களும் அனுப்பப்படும்.


இம் மாதம் ஓர் குறிப்பிட்டுள்ள சீட்டுடன் நாங்கள் இதை நிறுத்திக் கொள்வதால் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது உடனேயே விண்ணப்பிக்கவும். சேமிப்பதற்கு நாங்கள் நல்ல வழிபாடு செய்கிறோம்.

(போர்டாரின் உத்திரவுப்படி)

எம். வி. சுப்ரமணியம்
மானேஜிங் டைரக்டர்.




தி கிராமபோன் கம்பெனி லிமிடெட், கல்கத்தா, பம்பாய், மதராஸ், டில்லி




## 1. பிரயாணம்

முன்னொரு காலத்திலே நம் தேசம் பல சின்னச் சின்ன ராஜ்யங்கள் கொண்டதாக இருந்தது. அப்படிப்பட்ட ராஜ்யங்களுள் ஒன்று காந்தார தேசம் என்பது. அந்த காந்தார தேசத்தை ஒரு ராஜா நீண்ட நாள் அரசாண்டு வந்தார். அவர் காலத்தில் குடிகள் எல்லோரும் ரொம்பவும் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருந்து வந்தார்கள்.

இந்த ராஜாவுக்கு வயசு ஆகிக் கொண்டே வந்தது. கல்ல முதுமைப் பருவம் அடைந்தார். அந்தக் கிழப் பருவத்தில் அவரை ஒரு தீராக் கொடிய நோய் வாட்டியது. நோயின் காரணமாக அரசர் கூடிய சீக்கிரம் இறந்து விடுவார் என்று ஜனங்கள் எல்லோரும் கருதி வருத்தப்பட்டார்கள்.

அந்த ராஜாவுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். மூன்று பிள்ளைகளும் அழகாக இருப்பார்கள்; நல்ல வீரர்கள்.

மூத்த பிள்ளையின் பெயர் சம்பத் குமார். சம்பத் குமார் தன் தந்தை இவ்வாறு நோய் வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாக இருப்பதைக் கண்டு ரொம்பவும் வருத்த முற்றான். தந்தையின் நோயைத் தீர்க்க முடிய வில்லையே; இத்தனை ஆண்டுகள் தன்னை மிக்க அன்புடன் எடுத்து வளர்த்துப் பெரியவ னாக்கியதற்கு இந்தச் சிறு உதவிகூடச் செய்ய முடியவில்லையே என்று வருத்தப்பட்டான்.

இப்படியிருந்த சமயத்தில் ஒரு ரிஷி ராஜ சபைக்கு வந்தார். அவருக்குத் தக்க மரியா தைகள் செய்து வரவேற்றனர் ராஜ குமாரர்கள். மூன்று பிள்ளைகளும் தங்கள் தகப்பனுருக்கு ஏற்பட்ட நோயைப் பற்றித் தெரிவித்தார்கள். அரசாங்கத்து வைத் தியர்கள் எல்லோரும் ராஜாவின் நோயைத் தீர்க்க முடியாமற் கையை விரித்ததைப் பற்றியும் கூறினார்கள்.

அதையெல்லாம் கேட்ட அந்த முனிபுங்க வர், "என் அன்பார்ந்த ராஜ குமாரர்களே, காடும் மலையும் கடந்து கிழக்கே வெகு தூரம் சென்றீர்களானால் ஒரு அரண்மனை தென் படும். அதில் மிகவும் பாதுகாப்புள்ள இடத் தில் ஒரு வெள்ளிக் கூஜாவில் ஜீவரசம் இருக் கிறது. அதிலிருந்து கொஞ்சம் ஜீவரசம் கொண்டு வந்து, உங்கள் தகப்பனுருக்குக் கொடுத்தீர்களானால் அவர் நோய் தீர்ந்து, புது வலிமை பெற்று ஆரோக்கியமடைந்து எழுந்திருப்பார். ஆனால் அதைக் கொண்டு வருவதற்குள் வேண்டிய இன்னல்கள்,

இடையூறுகள் ஏற்படும். அவற்றை யெல்லாம் வீரத்தினாலும் சாமர்த்தியத்தினாலும்தான் வெல்ல முடியும். அத்தகைய வீரமும் சாமர்த்தியமும் பெற்றவர்களால்தான் ஜீவரசம் கொண்டு வர இயலும். ஆகவே என் அருமைப் புதல்வர்களே! இம் முயற்சியில் நீங்கள் யார் வேண்டுமானாலும் ஈடுபடலாம். உங்கள் தந்தைக்குப் பழைய ஆரோக்கியம் அளிக்கும் புண்ணியத்தையும், சாதிக்க முடியாத அரும் பெரும் காரியத்தைச் சாதித்த புகழையும் பெறலாம்" என்றார்.



இதைக் கேட்ட மூன்று ராஜகுமாரர்களில் மூத்த ராஜகுமாரனான சம்பத்குமார் எழுந்தான். "மகரிஷி! நான் இப்பொழுதே புறப்படுகிறேன்! அந்த ஜீவரசத்தை நானே கொண்டு வருகிறேன்" என்றான்.

உடனே இரண்டாவது ராஜகுமாரனாகிய நிர்மல குமாரன், "இல்லை, நான்தான் போகப் போகிறேன். அண்ணா இங்கேயே இருக்கட்டும்" என்றான்.

மூன்றாவது ராஜ குமாரனாகிய சூரிய குமாரன், தன் அண்ணன்மாரின் சண்டையைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தான்.

ஆனால், அந்த முனிபுங்கவர் அவர்கள் சண்டையைக் கண்டு, "ராஜகுமாரர்களே! சண்டை யிடாதீர்கள். உங்களில் மூத்தவனான சம்பத் குமார் முதலில் புறப்பட்டுச் செல்லட்டும். அவன் வெற்றியுடன் வரவில்லை என்றால் அடுத்தவன் போகலாம்" என்றார்.

முனிவர் கூறிய இம் மொழிகள் அவர்களுக்கு நியாயமாகப் பட்டது. ஆகவே, அவர் கூறியபடி நடந்து கொள்வதாக ஒப்புக் கொண்டனர். பிறகு அந்த முனிவர் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றார்.

மூன்று ராஜகுமாரர்களும் ராஜாவின் படுக்கை யருகில் சென்றனர். முனிவர் வந்து போன விவரங்களை அரசனிடம் கூறினார்கள். கடைசியாகச் சம்பத் குமாரன், "அப்பா, நான் ஜீவரசம் கொண்டு வந்து உங்கள் நோயைத் தீர்க்கச் சபதம் செய்திருக்கிறேன். ஆகவே, நீங்கள் ஆசி கூறி, எனக்கு விடை கொடுத்து அனுப்புங்கள்" என்றான்.

மகாராஜா தீனமான குரலில் கூறினார்: "எதற்கப்பா வீணாகச் சிரமப்படுகிறாய்! மனிதன் என்றைக்காவது ஒரு நாள் இறக்கவேண்டியவன்தானே? அதனால் என்பொருட்டு நீ வேண்டாத அபாயங்களில் எல்லாம் அகப்பட்டுக் கொள்ள வேண்டாம்" என்றார்.

சம்பத் குமாரன் கேட்கவில்லை. "ராஜகுடும்பத்தில் பிறந்துவிட்டு, அபாயங்களுக்குப் பயப்படலாமா? அதை எதிர் நோக்கியல்லவா செல்ல வேண்டும்! ஒவ்வொரு அபாயத்தையும் தீரத்துடன் வெல்பவனே யல்லவா வீரன்? என் வீரத்தைக் காட்டக் கூடிய சந்தர்ப்பம் நேரும் பொழுது அதைக் கைநழுவ விடலாமா!" என்று மிகவும் தற்பெருமையுடன் கூறி, அழகான குதிரையின்மீது ஏறிப் புறப்பட்டான்.

சம்பத் குமாரன் ஏறியிருந்த குதிரை காற்றை விட வேகமாகப் பறந்தது. ஆனால், வேகமாகச் செல்ல முடியாமல் சாலை மேடும் பள்ளமுமாக இருந்தது. ஆயினும் சம்பத் குமாரன், தான் செல்லும் பாதை கரடு முரடாக இருப்பதைப் பார்க்கவில்லை; இருள்சூழ்ந்து வருகிறதே என்பதையும் பொருட்படுத்த வில்லை; குதிரையும் தானும் களைத்திருப்பதையும் உணரவில்லை; போய்க் கொண்டே யிருந்தான். பகல் எல்லாம் சென்று அஸ்தமிக்கும் வேளையில் நாட்டின் கிழக்கு எல்லையாகிய மலைப் பிரதேசத்துக்கு வந்து சேர்ந்தான்.

மேற்குத் திசையில் வானம் முழுதும் செந்நிறம் பரவி வந்தது. அந்த அந்தி வேளையில் மலையுச்சியிலிருந்து, "யாரப்பா, இந்த வேளையில் காட்டில் தனியாகப் போகிறது? எங்கே போகவேண்டும்? எங்கிருந்து வருகிறாய்?" என்று யாரோ கேட்கும் ஒலி காதில் விழுந்தது.

யார் என்று அறிய குரல் வந்த திசையை நோக்கித் திரும்பினான் சம்பத் குமாரன். கையில் ஒரு தடியை வைத்துக் கொண்டு ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான்.

'சே, போயும் போயும் ஒரு கிழவனுக்கா ராஜ குடும்பத்தில் பிறந்தவனாகிய நான் பதில் சொல்லிக் கொண்டிருப்பது' என்று நினைத்துக்கொண்டு சம்பத் குமாரன் குதிரையைத் தட்டிவிட்டு மேலே போனான்.

அந்தக் கிழவன் ஒரு மந்திரவாதி என்பது சம்பத் குமாரனுக்கு என்ன தெரியும், பாவம்! தெரிந்திருந்தால் இப்படிப் பதில் சொல்லாமல் மேலே போவானா?

மந்திரவாதிக் கிழவன், சம்பத் குமாரன் தன்னை இப்படி இழிவு படுத்தியதைக் கண்டு மிகுந்த கோபம் கொண்டான். 'ராஜகுமாரனாக இருந்தால் என்ன? அவனுக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன்' என்று மனதுக்குள் கறுவிக் கொண்டான் கிழவன். (தொடரும்)


# திருமண அழைப்புப் பத்திரிகைகள்

அழகான பல வர்ண சித்திரங்களுடன் லித்தோவில் அச்சிட்டது. பல டிஸைனுகள், அனேக சைஸ்களில் சப்ளை செய்கிறோம். சாம்பிள் வேண்டுவோர் தபால் செலவிற்காக எட்டணு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

○●○

**கார்னேஷன் லித்தோ ஒர்க்ஸ்**

**தபால் பெட்டி நெ. 2, சிவகாசி (S. I.)**

கும்பகோணம் பிரபல ஹோட்டல் முதலாளியான ஆர்யபவான் எம். ஆர். சேதுராமய்யர் தனது அபிமான புத்ரி ஸௌபாக்யவதி விஜயலக்ஷ்மிக்கும் சிரஞ்சீவி கே. சீதாராமன், பி. ஏ. ஹானர்ஸ் (லெக்சரர், மதுரா காலேஜ், மதுரை) அவர்களுக்கும் 12-6-52ல் கும்பகோணம் தனது இல்லத்தில் வெகு விமரிசையாய் திருமணம் நடத்தி வைத்தார். திருமணத்திற்கு ஏராளமான உறவினர்களும் நண்பர்களும் விஜயம் செய்து தம்பதிகளை ஆசிர்வதித்தனர். அன்று மாலை வரவேற்பின் போது ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இன்னிசை விருந்தைக் கேட்டு ஆனந்தித்தனர். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும் வாழ்த்துக்களும் வந்து குவிந்தன.


# ஹோமியோபதி

ஹோமியோபதி வைத்திய சாஸ்திரத்தைத் தமிழிலோ ஆங்கிலத்திலோ தபால் மூலம் குறைந்த செலவில் படித்து சன்னத்து பெற்று டாக்டர் ஆக இப்பொழுது நல்ல சந்தர்ப்பம். முழு விபரங்களுக்கு உடனே எழுதவும்.

**தென் இந்தியாவின் முதலாவதும் மிகப் பெரியதுமான ஹோமியோபதி ஸ்தாபனம்.**

**இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்**

**கும்பகோணம் (K)**


மிகவும் சிறந்தது எப்பொழுதும்
மிகவும் சுத்தமானதாயிருக்கும்
Glaxo
கிளாக்ஸோ குழந்தைகளுக்கான மிகவும்
சுத்தமான பால் உணவு.
கிளாக்ஸோ லெபரட்டரீஸ் (இந்தியா) லிட். பம்பாய் கல்கத்தா மதராஸ்
Copyright
LAS. (B)



# சுந்தரியின் கண்ணீர்

**மருந்தா**

அன்று காலை தபால்காரனின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தபடியே எங்கள் வீட்டின் முன்புறமிருந்த ஹாலில் ஒரு சோபாவில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். கையில் 'பிரேம்சந்த்' எழுதிய ஹிந்தி நாவல் ஒன்று இருந்தாலும் என் மனம் என்னவோ அதில் பதியவில்லை. என் பொறுமையைச் சோதிப்பதே போல் அன்று வெகு நேரம் ஆகியும் தபால்காரன் வரவில்லை. கடைசியில் பொறுமையை இழந்து உள்ளே செல்வதற்காகச் சோபாவை விட்டு எழுந்து திரும்பிய போது தபால்காரனின் தலை காம்பவுண்டுக்கருகில் தெரிந்தது.

தபால்காரனைக் கண்டதும் என் சோர்வெல்லாம் பறந்தது. அவன் கையிலிருந்த கடிதத்தை என் அருகில் வந்து கொடுப்பதற்கு முன்னதாகவே நான் அங்கே ஓடி அந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டேன். நான் எதிர்பார்த்திருந்த கடிதந்தான்! கடிதத்தை அவசரமாக ஒரு தடவை படித்து விட்டு விஷயத்தை அப்பாவிடம் சொல்லுவதற்காக உள்ளே ஓடினேன். அதே சமயம் அப்பா மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார்.

"என்ன லதா! அப்படி ஓடி வருகிறாயே! என்ன சமாசாரம்? அது என்ன கடிதம்? உன் சிநேகிதி யாருக்காவது கல்யாணமா?" என்று கேட்டார் அப்பா.

அப்பாவின் கேள்வி அடுக்கைக் காதில் வாங்கிக் கொள்ளாமலேயே "மேரி ராணி கல்லூரியிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. அப்பா! எனக்கு 'மாதமாடிக்ஸ் ஆனர்ஸில்' இடம் கிடைத்து விட்டது!" என்று ஆனந்தத்துடன் கூறினேன்.

ரொம்ப சந்தோஷம், லதா! அதற்காக இப்படி ஓடி வர வேண்டுமா? எங்கேயாவது விழுந்தால் என்ன ஆகிறது? உள்ளே போய் அம்மாவிடம் சொல்லு!" என்று சொல்லி விட்டு அப்பா ஆபீசுக்குப் புறப்பட்டார்.

உள்ளே ஓடிப் போய் அம்மாவிடம் சமாசாரத்தைச் சொல்லுவதற்குள் என் மனம் தாங்கவில்லை. இந்தச் சந்தோஷ சமாசாரத்தை உடனே சுந்தரியிடம் சொல்ல வேண்டும் என்று துடித்தது. அம்மாவிடம் இரண்டு வார்த்தைகள் சொல்லி விட்டு வாசலுக்கு வந்தேன். நல்ல வேளையாக அப்பா அன்று காரை ஆபீஸுக்கு எடுத்துக்கொண்டு போகவில்லை. டிரைவரும் இல்லாமற் போகவே நானே காரை எடுத்துக் கொண்டு திருவல்லிக்கேணியில் இருந்த என் தோழி சுந்தரியின் வீட்டுக்குக் கிளம்பினேன்.

சுந்தரி என் தோழி. சென்ற இரண்டு வருஷங்களாக நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளாத நாள் கிடையாது. சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை முதலிய விடுமுறை தினங்களில் அவள் எங்கள் வீட்டுக்கு வந்து விடுவாள். இரண்டு வருஷங்கள் பழகியும் அவளுடைய உள் மனத்தைச் சில விஷயங்களில் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒருமுறை கூட அவள் என்னைத் தன் வீட்டுக்கு அழைத்ததில்லை. எப்பொழுதாவது நானாகவே அவள் வீட்டுக்கு வருவதாகச் சொன்னால்கூட அவளாகவே பேச்சை மாற்றி விடுவாள். அப்பொழுதெல்லாம் அவளுடைய நீண்ட நயனங்களில் கண்ணீர் ததும்பும். அவள் முகம் சோகம் அடைவதை நான் பார்க்காமல் இருக்க வேண்டும் என்று கஷ்டப்பட்டு மறைத்துக் கொள்வதை நான் கவனியாதது போலக் கவனித்திருக்கிறேன். அதற்குக் காரணம் கேட்டு அவள் மனத்தை மீண்டும் புண்படுத்த விரும்பவில்லை ஆதலால் அவளை அந்த விஷயம் என்ன என்பதைப் பற்றிக் கேட்பதையே விட்டு விட்டேன். ஆனாலும் அவள் படும் வேதனை என் மனத்தை அரித்தது. என் உயிர்த்தோழி சுந்தரியின் மனத்தில் இருக்கும் அந்தத் துக்கத்தைப் போக்கக் கடவுளை வேண்டிக் கொள்வேன்.

இப்படியாக எங்கள் நட்பு வளர்ந்தது. எனக்குக் காலேஜில் 'மாதமாடிக்ஸ் ஆனர்ஸில்' இடம் கிடைத்துவிட்டது என்ற சந்தோஷ சமாசாரத்தைக் கேட்டு அவள் எவ்வளவு ஆனந்தப் படுவாள்!

அவள் வீட்டு விலாசம் எனக்குத் தெரியும். இதுவரையில் அவள் வீட்டுக்குப் போகாமல் இருந்து விட்டு இப்பொழுது திடீரென்று நானாகப் போவது ஏதோ ஒரு மாதிரிதான் இருந்தது. இருந்தாலும், அவளாக என் வீடு தேடி வருகிற வரையில், கலாசாலையில் எனக்கு இடம் கிடைத்து விட்டது என்னும் சந்தோஷச் செய்தியை என் மனசுக்குள் வைத்துக் கொண்டிருக்க முடியாது என்று தோன்றியது. ஆகவே அவள் வீட்டைத் தேடிக் கொண்டு புறப்பட்டு விட்டேன்.

கார் மெதுவாக மெரினுவில் சென்று கொண்டிருந்தது. அருகில் இருந்த பஸ் ஸ்டாண்டு வழியாகக் கார் போய்க் கொண்டிருந்தபோது யாரோ ஒருவருடைய பழகிய குரல் என்னைக் கூப்பிட்டதுபோல் இருந்தது. காரை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தேன். என் அத்தான் குமார் காரை நோக்கி வந்து கொண்டிருந்தான். "என்ன லதா! எங்கே இப்படிப் புறப்பட்டாய்? நான் கூட உன் வீட்டுக்குத்தான் கிளம்பினேன். வெகுநேரமாக பஸ் வரவில்லை......" என்றான்.

"நான் திருவல்லிக்கேணியில் இருக்கும் என் சிநேகிதியின் வீட்டுக்குப் போகிறேன். அங்கிருந்து பத்து நிமிஷங்களுக்குள் வீட்டுக்குத் திரும்பிவிடுவேன். வேண்டுமானால் நீயும் காரில் ஏறிக்கொள்" என்றேன்.

"உன் தோழியுடன் பேசும் சுவாரஸ்யத்தில் பத்து நிமிஷம் பத்து யுகமாக ஆகிவிட்டால் என்ன செய்வது? எனக்கு ஆபீஸுக்குப் போக வேண்டுமே!" என்று அத்தான் கேலி செய்தான்.

"அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்" என்று நான் வாக்களித்த பிறகு அவனும் காரில் ஏறிப் பின்புற ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

என் தந்தை இந்திய சர்க்கார் உத்தியோகஸ்தர். இரண்டு வருஷங்களுக்கு முன்பு நாங்கள் டில்லியில் இருந்தோம். என் தகப்பனருக்கு ஒரே சகோதரி சென்னையிலிருந்து வந்தாள். ஆனால் ஏதோ காரணமாக என் தந்தைக்கும் அவளுக்கும் அதிகமான பற்றுதல் இல்லாமல் இருந்தது. அதனால் எங்களுக்கு அத்தை ஒருத்தி இருக்கிறாள் என்றும் அவளுக்குக் குமார் என்று ஒரு பிள்ளை இருக்கிறான் என்றும் தெரியாமலேயே நாங்கள் வளர்ந்து வந்தோம்.

என் தகப்பனருக்குச் சென்னைக்கு மாற்றலாகி நாங்களும் சென்னைக்கு வந்த பிறகுதான் அத்தான் குமார் அடிக்கடி வீட்டுக்கு

ஒரு சமாசாரத்தை அத்தான் சொன்னான்: "ஐந்து வருஷங்களுக்கு முன்பே எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. ஆனால் அவள் இருக்குமிடம் இப்போது எனக்குத் தெரியவில்லை. அவளைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று.

அப்பா துருவித் துருவிக் கேட்ட பிறகு இப்பொழுது அவள் தன் பிறந்தகத்தில் இல்லை என்றும் அவர்கள் எல்லோருமே ஐந்து வருஷங்களுக்கு முன்பு எங்கேயோ போய் விட்டார்கள் என்றும் அத்தான் சொன்னான். எப்படியாவது அந்தப் பெண்ணைத் தேடிக் கண்டு பிடிக்கவேண்டும் என்றும் அவளைக் கண்டு பிடிப்பதற்குத் தானும் உதவி செய்வதாகவும் அப்பா சொன்னார்.

என் தோழி சுந்தரி சொல்லியிருந்த நம்பரைத் தேடிக்கொண்டே காரை மெதுவாக விட்டுக் கொண்டு போனேன். அவள் வீடு வந்து விட்டது. காரை நிறுத்திக் கீழே இறங்கி உள்ளே போனேன். முன் பக்கத்தில் இருந்த கூடத்தில் ஒரு வயதான ஸ்திரீ இருந்தாள். அவள்தான் சுந்தரியின் தாயார் என்று அறிந்து கொண்டேன். சுந்தரியின் முக ஜாடை அவளுக்கு இருந்தது. சுந்தரி, கூடத்திலிருந்து உள்ளே போகும்படியாக அமைக்கப்பட்டிருந்த ஒரு அறையில் இருந்தாள். நான் மெதுவாக அந்த அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றேன்.

அங்கே சுந்தரி ஸ்நானம் செய்த தலையை வாராமல் அள்ளி முடிந்துகொண்டு சுவரில்



இருந்த ஒரு படத்தின் முன்னால் கைகூப்பி நின்று கொண்டிருந்தாள். மெல்லிய குரலில் அவள் வாய் முணு முணுத்தது: "என்னை இன்னும் எத்தனை நாள் இந்தமாதிரி தனியாகத் தவிக்க விட்டு வேடிக்கை பார்க்கப் போகிறீர்கள்? இனியாவது என்னை அழைத்துக் கொள்ளக் கூடாதா? இத்தனை வருஷங்களாக நான் செய்து வரும் பிரார்த்தனை தங்கள் காதில் ஏறவில்லையா? நான் அப்படி என்ன குற்றம் செய்து விட்டேன்? இன்னும் சில நாட்களுக்குள் எனக்கு விடிவு காலம் வராவிட்டால் நான்......நான்......"

சுந்தரி திரும்பினாள். என்னை அங்கே எதிர்பாராத விதமாகப் பார்த்ததும் அப்படியே மலைத்துப் போய் நின்றாள். அவள் கைகள் கண்களில் வழிந்திருந்த நீரைத் துடைத்தன.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. மாலை சாத்தப் பட்டிருந்த அந்த வாலிபனின் படத்தைப் பார்த்தேன். எங்கேயோ பார்த்த முகம் மாதிரி இருந்தது.

"நீ எப்பொழுது இங்கே வந்தாய், லதா?" என்று சுந்தரி கேட்டாள்.

"சுந்தரி! நான் வந்தது இருக்கட்டும்; நீ இருக்கும் நிலையைப் பார்த்து என் உள்ளம் தவிக்கிறது. நீ முதலில் சொல்லு. இந்த போட்டோ யாருடையது? உனக்கும் இவருக்கும்......என்ன சம்பந்தம்? எதற்காக இப்படி இந்தப் போட்டோவின் முன்னால் நீ கண்ணீர் விடுகிறாய்?......சொல்! சொல்லித் தான் ஆகவேண்டும். நான் உயிர்த் தோழி இல்லையா?" என்று அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினேன்.

சுந்தரி உடனே பதில் சொல்லவில்லை. பேச்சை மாற்ற முயன்றாள். ஆனால் நான் விடாமல் பிடிவாதம் பிடிக்கவே, அவள் அறையின் வாசல் பக்கம் போய்ப் பார்த்து அங்கே அம்மா இல்லை என்று தெரிந்தவுடன் திரும்பி வந்து மெல்லிய குரலில் சொல்ல ஆரம்பித்தாள்.

"லதா! உன்னிடம் சொல்லக்கூடாது என்பதில்லை. என் கவலையை நான்தான் பட்டுத் தீரவேண்டும். உன்னிடமும் சொல்லி, நீயும் எனக்காக ஏன் வருந்த வேண்டும் என்று இருந்தேன். இன்று நீ பிடிவாதம் பிடிப்பதையும் என் மன நிலையையும் பார்த்தால் யாரிடமாவது என் மனத்தில் இருப்பதைச் சொல்லி அழ வேண்டும் என்றிருக்கிறது. அதனால் சொல்கிறேன்.

"எனக்குக் கல்யாணம் ஆகி ஐந்து வருஷங்களுக்கு மேல் ஆகிறது. அப்பொழுது 'அவர்' 'ஆனர்ஸ்' பாஸ் செய்துவிட்டு ஏதோ கம்பெனியில் உத்தியோகம் வகித்து வந்தார். எங்கள் கல்யாணம் மிகவும் விமரிசையாக நடந்தது. நான் என் பெற்றோருக்கு ஒரே பெண் என்பதுடன் கூட 'அவர்' நல்ல வரன், அழகிலும், படிப்பிலும், குணத்திலும் மேம்பட்டவர் என்ற பெருமையினால் என் தந்தை தன் சக்திக்கு மீறிச் செலவழித்தார். வைர மோதிரம், கைக் கடிகாரம், அதற்கு ஒரு தங்கச் செயின்—என்று இப்படி ஒவ்வொன்றுக்கும் பணத்தை வாரி இறைத்தார்.

"நான் கணவர் வீட்டுக்கு வந்தேன். ஆனந்த மயமாகச் சில மாதங்கள் சென்றன.

"தலை தீபாவளி வந்தது. முதலில் நானும் பிறகு தீபாவளிக்கு முதல் நாள் என் கணவரும் என் பிறந்த வீட்டுக்கு வந்தோம். தீபாவளியும் அமர்க்களமாக நடந்தது.

"தீபாவளி கழித்து நாங்கள் மறுபடியும் அவர் ஊருக்குச் சென்றதும் என் மாமியார் அவரைப் பார்த்துத் 'தீபாவளி மோதிரம் எங்கே!" என்று கேட்டார்.

"அதுதான் கல்யாணத்தின் போது செய்து விட்டார்களே!" என்று அவர் சொன்னது தான் தாமதம்; என் மாமியாருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

"கல்யாணத்தின் போது செய்தாகி விட்டது என்றால் சரியாய்ப் போய்விட்டதா? தீபாவளிக்கு ஒரு மோதிரம் வாங்கிப் போட விதி இல்லாவிட்டால் அங்கே போயிருக்கவே வேண்டாமே!" என்று ஆரம்பித்தாள்.

"இதற்குப் பதிலாக 'அவர்' என் தகப்பனார் பக்கம் பரிந்து பேசினார். அவ்வளவுதான். என் மாமியார் நான் ஏதோ சொக்குப் பொடி போட்டு அவரை மயக்கி விட்டதாகக் கூறி ஆத்திரத்துடன் வாய்க்கு வந்ததை யெல்





ஹோட்டல் மானேஜர் ஹோட்டலில் புதிதாக வந்து தங்கியிருந்தவரைப் பார்த்து):—ராத்திரி நிம்மதியாகத் தூங்கினீர்களா, ஸார்?

வந்தவர் (கோபத்துடன்):—தூக்கமா? நன்றாயிருக்கிறது, ராத்திரி முழுவதும் கண்ணை மூடவில்லை, ஸார், நான்!

ஹோட்டல் மானேஜர்:—அப்படியானால் தவறு உங்களுடையது தான். கண்ணை மூடினால் தானே, ஸார், தூங்க முடியும்?

லாம் பேசித் தீர்த்தாள். என் மாமியார் மோதிரம் போடாததற்குக்கூட மன்னித்தாலும் மன்னித்திருப்பாள்; 'அவர்' என் தகப்பனார் பக்கம் பேசியதைத்தான் என் மாமியாரால் பொறுக்க முடியவில்லை.

"அன்று ராத்திரி, வேறு ஒரு துரதிருஷ்ட சமாசாரம் வந்தது. திருச்சியில் இருந்த என் மாமனார் திடீரென்று காலமாகிவிட்ட செய்தி தான் அது. ஆத்திரத்தினால் கொதித்துக் கொண்டிருந்த என் மாமியாரின் மனம் இந்தச் செய்தியைக் கேட்டதும் பொங்கியது. என்னைத் 'துடைகாலி' என்றும் 'புகுந்த வீட்டை விளங்க வைக்காதவள்' என்றும் சொல்லிச் சொல்லிக் குமுறினாள். ஆனால் இதெல்லாம் சேர்ந்து என் வாழ்வுக்கே உலை வைக்கும் என்று நான் நினைக்கவில்லை.

"மறுநாளே நாங்கள் எல்லோரும் திருச்சிக்கு வந்தோம். வரும் வழியில் எல்லாம் என் மாமியார், நான் அந்த வீட்டில் புகுந்த வேளை சரியாக இல்லாததினால் நானேதான் என் மாமனாரை 'உருட்டி' விட்டேன் என்றும், நான் அந்த வீட்டில் இருக்கும்வரை வீடு விளங்காது என்றும் திட்டினாள். இதெல்லாம் கூட எனக்கு அவ்வளவாக வருத்தம் அளிக்கவில்லை. வெறும் தூற்றுதல்களைப் பொறுத்துக் கொள்ள முடியாத துர்ப்பலம் படைத்த மனம் உடையவள் இல்லை, நான். துக்கம் விசாரிக்க வந்த என் பெற்றோரிடம் 'இவள் எங்கள் வீட்டுக்கு வந்த வேளை சரியில்லை; நீங்களே அழைத்துக் கொண்டு போய் விடுங்கள்' என்று சொல்லி என்னைப் பிறந்தகத்துக்கு அனுப்பி விட்டார்கள்.

"என் பிறந்தக வாசம் தாற்காலிகமானது தான் என்று நான் நம்பியிருந்தேன். ஆனால் சில நாட்களுக்குப் பிறகு என் தலையில் இடி விழுந்தது மாதிரி ஒரு கடிதம் வந்தது—'இனி மேல் என்னை அங்கே அழைத்துக் கொள்வதாக உத்தேசம் இல்லை' என்று.

"நான் அவருக்குக் கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதினேன். முதலில் ஒன்றிரண்டுக்குப் பதில் வந்தது. அதற்குப் பிறகு நான் எழுதிய கடிதங்கள் கூட எனக்கே திரும்பி வந்து விட்டன.

"என் தகப்பனார் அவர்கள் வீட்டுக்குப் போய் மன்றாடினார். விதி என்னவோ என் பக்கத்தில் துரதிர்ஷ்டக் கயிற்றை முறுக்கி வைத்திருந்தது.

"இவ்வளவு தூரத்துக்கு வந்த பிறகு என் மனந்தான் என்ன செய்யும்? அதில் ஒரு வைராக்கியம் பதிந்தது. எப்பொழுது என் கணவர் என்னை லக்ஷியம் செய்ய வில்லையோ, அவரை நினைத்து நான் மாத்திரம் ஏன் ஏங்கிக் கலங்க வேண்டும்? இந்தத் தீர்மானத்துடன்தான் நாங்கள் ஊரைவிட்டே கிளம்பி இங்கே சென்னைக்கு வந்து சேர்ந்தோம்.

"கல்யாணத்தினால் தடைப் பட்டிருந்த படிப்பை இங்கே வந்ததும் தொடர்ந்தேன். என் தந்தை உயிருடன் இருந்தவரை என் வைராக்கியம் நீடித்திருந்தது. ஆனால் அவரும் காலமாகி விட்ட பிறகு என் வைராக்கியமெல்லாம் தளர்ந்து விட்டது. 'அவர்' என்றைக்காவது ஒரு நாள் என்னை ஏற்றுக் கொள்ள மாட்டாரா என்று என் மனம் தவிக்கிறது. ஆனால்......ஆனால்......அம்மா எனக்காகத் தினம் ரத்தக் கண்ணீர் வடிக்கிறாள்லவா! உலகத்தில் மிருகமாகக் கூடப் பிறக்கலாம்; ஆனால் இப்படிப் பெண்ணாக மாத்திரம் பிறக்கக் கூடாது......"

என் கண்களில் நீர் ததும்பிற்று. அதைத் துடைத்துக் கொள்வதற்காகத் திரும்பினேன்.


அப்பொழுது அந்த அறையின் கதவு படீரென்று திறந்தது. வெளியிலிருந்து அத்தான் ஓடி வந்தான். வந்த வேகத்துடன் அப்படியே கஸ்தூரியின் காலடியில் உட்கார்ந்து கொண்டு, "கஸ்தூரி!......கஸ்தூரி...! என்னைத் தெரிகிறதா? என்னை மன்னித்து விடு! நான் செய்து விட்ட அக்கிரமத்திற்கு எனக்குத் தண்டனை கிடைத்து விட்டது. என்னை நினைத்து நீ எவ்வளவு ஏங்கினாயோ அதை விட நூறு பங்கு நான் தவித்துப் பைத்தியமாக அலைந்தேன்......கஸ்தூரி! அம்மாவின் பேச்சைத் தட்ட முடியாமல் இவ்வளவு அவலத்துக்கும் நானே காரணமாகி விட்டேன். நான் செய்த கொடுமையை மறந்து விடு..." என்று மேலே பேச முடியாமல் அப்படியே அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

ஆச்சரியத்தினால் மௌனமான நான் அதற்கு மேலும் அங்கே நிற்பது அழகல்ல என்று அந்த அறையை விட்டு மெல்ல வெளியே நழுவி விட்டேன்.

Smoothness • Safety • Beauty

# Plymouth

CRANBROOK



**THE PREMIER AUTOMOBILES LTD.**

Factory: Agra Road, Kurla, Bombay Head Office: Construction House, Ballard Estate, Bombay

DEALERS

SOUTHERN MOTORS, MOUNT ROAD, MADRAS

---




நல்ல
சிகரெட்
வாங்க
ஏன்
அதிக விலை கொடுக்கிறீர்கள்

10 விலை 3½ அணா
50 விலை ரூ 1/4
உள்ளூர் வரி அலாதி

Issued by the National Tobacco Co. of India Ltd., Licensees of James Carlton Ltd., London. Cigarettes made in India.

ACI



SISTA'S—J—276 A—TAM

## தாய்ப்பால் மறக்கும் சமயம் மிகுந்த கவனிப்பு அவசியம்

உங்கள் குழந்தையின் ஜீவியகால ஆரோக்கியம் அதுதன் சிறுவயதில் அடையும் பராமரிப்பை பொறுத்துள்ளது. அவ்வயதிலேயே கொடுமையான ஈரல், குலைநோய் ஆரம்பிக்கலாம். உடனே கவனித்து தக்க சிகிச்சை செய்தால் யாதொரு தீங்கும் நேரிடாது. கவனிக்காவிடில் குழந்தை நீண்டகால அவஸ்தைக்கு ஆளாகிவிடலாம்.

ஜம்மியின் "லிவர்க்யூர்" குழந்தைகளின் ஈரல் குலைநோய்களுக்கு சிறந்த பாதுகாப்பு. ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான குழந்தைகளை இவ்வியாதியினின்று மீட்டு ஆரோக்கியத்தை அளித்து வருகின்றது.

ஜம்மி வெங்கட்டரமணய்யா & ஸன்ஸ்
மைலாப்பூர் — மதராஸ்-4.

கிளைகள்:
பெரியகடைத்தெரு, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி; பெரிய தெரு, கும்பகோணம்; ஆர்காட் சீனிவாஸாசார் தெரு, பெங்களூர் ஸிடி.

## இருமல், உபாதையளிக்கும் ஆஸ்துமா, மார்ச்சளி இவை மூன்றே நிமிஷங்களில் அகற்றப் படுகின்றன.

ஆஸ்துமா, மார்ச்சளி தாக்குதலால் மூச்சுத் திணறி தூக்கமின்றி அவதியுறுகிறீர்களா! அதிகமாக இருமுவதால் பிராணாவஸ்தையாக இருக்கிறதா! பலஹீன உணர்ச்சியினால் வேலை செய்ய அசக்தராகவும், ருசியுள்ள வஸ்துக்களையும் சிற்சில உணவுகளையும் உட்கொள்ள முடியவில்லையா!

எவ்வளவு காலமாக உபாதையுற்று எதை உபயோகித்திருப்பினும் சரி, மெண்டாகோ ஓர் புதிய நம்பிக்கையை அளிக்கும். மயக்க மருந்து, புகை பிடித்தல், இஞ்சக்ஷன், ஆட்டோமைஸர் இவை தேவையில்லை. செய்ய வேண்டியதெல்லாம் ருசியற்ற இரண்டு பில்லைகளை சாப்பாட்டின்போது உட்கொள்ள வேண்டியதே. உபத்திரவங்கள் மாயமாக அகன்றுவிடும். மூன்றே நிமிஷங்களில் மெண்டாகோ இரத்தத்துடன் கலந்து வேலை செய்யத் தொடங்கி கபத்தைக் கரைத்து சிரமம் இன்றி ஸ்வாஸத்தை அபிவிருத்தி செய்து முதல் நாள் இரவிலேயே நல்ல நித்திரையை அளித்து விரைவில் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியையும் பலத்தையும் பெறுவீர்கள்.

### 2 ஆண்டுகளாக ஆஸ்துமா இல்லை

மெண்டாகோ அநேகமாக உடனே குணமளித்து ஸ்வாசத்தை இலகுவாக்குவது மட்டுமின்றி எதிர்கால தாக்குதல் ஏற்படாது செய்கிறது. உதாரணமாக மிஸ்டர் ஜே.ஆர். இருமல் மூச்சுத் திணறலால் இரவு தூக்கமின்றி 40 பவுண்டு எடை குறைந்து இறந்துவிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. மெண்டாகோ ஆஸ்துமாவை முதல் நாளே நிறுத்தி விட்டது. இரண்டு வருஷங்களில் அத்தொந்தரவே அவருக்கு மீண்டும் ஏற்படவில்லை.

### பணம் வாபஸ் உத்தரவாதம்

மெண்டாகோ முதல் வேளை சாப்பிட்டதும் நேரடியாக இரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ அதிவிரைவில் வயதில் பல வருஷம் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்தரவாதத்தின் மீது மெண்டாகோ உபயோகித்துப் பார்த்து தீர்ப்பளியுங்கள். மெண்டாகோ சாப்பிட்ட பின் பூரண குணம் பெற்று, திருப்தி யளிக்காவிடில் காலிப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறு நாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிற தென்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்கு நல்ல பாதுகாப்பை அளிக்கிறது.

**Mendaco**
மெண்டாகோ

★ ஆஸ்துமா ★ மார்ச்சளி நோய் ★ வைக்கோல் ஜுரம் இவற்றை அறவே அகற்றுகின்றது




## 11. மலர் மெத்தையில் முட்கள்!

சகோதரா! அந்தக் கடிதத்தைப் படித்ததும் எனக்கு ஆனந்தம் தலை கொள்ளவில்லை. அப்பொழுது நான் இருந்தது என்னவோ பூமியில்தான். ஆனால் என் மனம், மூளை எல்லாம் வான வீதியிலே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. எனக்கு ஏற்பட்ட அந்த மகிழ்ச்சியை எழுத்தில் வடிக்க முடியாது. நான் ஒரே ஓட்டமாக ஸ்டெலாவின் வீட்டை நோக்கி ஓடினேன். அவளைக் காணப் போகும் ஆசையில் என் கால்கள் பறந்தன; என் கைகள் பறந்தன; என் உடல் பறந்தது. ஏன்? என் உள்ளமும் பறந்தது. அடுத்த சில நிமிஷங்களில் நான் அவள் வீட்டு வாசலில் நின்றேன்.

ஸ்டெலா நல்ல அழகி. நான் அவளை எத்தனையோ தடவைகள் பார்த்திருக்கிறேன். ஆனால் அன்று அவள் அழகிய விலையுயர்ந்த ஆடைகள் அணிந்து ஒய்யாரமாக நின்று கொண்டிருந்ததைக் கண்டபொழுது, எனக்கு அவள் அப்ஸரஸைக் காட்டிலும் ஒரு படி மேலாகவே தோற்றமளித்தாள். அழகின் பெருமையை அதிகப்படுத்தி, மிகைப்படுத்திச் சொல்வதற்காகத்தான், அழகு சொட்டுகிறது என்று சொல்கிறார்களாக்கும் என்று இது வரை நான் எண்ணி வந்தேன். ஆனால் அன்று அது மிகைப்படுத்திக்கூறும் சொல்லாகப் படவில்லை; உண்மையானதாகவே தோன்றிற்று. அப்படி அவள் அழகே உருவாகத் தோற்றமளித்தாள்.

கடிதத்தில் எழுதியிருந்தபடி அவள் உண்மையாகவே என்னை எதிர்பார்த்தவாறு வாசற்படியில் நின்று கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் அவள் முகத்திலே முல்லை முறுவல் படர்ந்தது. ஆனால் என் உள்ளத்திலோ கோபம் குமுறிக் கொண்டிருந்தது. போனதும் போகாததுமாக அவளைக் கண்டபடி கோபித்துக் கொள்ள வேண்டும் என்று மனத்திலே கோட்டை கட்டிக் கொண்டு சென்றேன். ஆனால் அவளுடைய அந்தப் புன்முறுவலின் பிரவாகம் என் கோபத்தையும் தாபத்தையும் இருந்த இடம் தெரியாமல் அடித்துக் கொண்டு போய் விட்டது. நீர்ப் பிரவாகத்தில் சிக்கிய காகிதங்களும் புற்களும் மிதந்து ஓடி மறைந்து விடுவதுதானே வழக்கம்? ஆகவே, என் கோபமும் தாபமும் அவளுடைய புன்முறுவலுக்கெதிரே மறைந்து விட்ட விஷயத்தில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லையல்லவா?

எனக்கு வாய் திறக்க வழி தோன்றவில்லை. என் உதடுகள் ஊசி கொண்டு தைக்கப் பட்டவை போல் ஆகி விட்டன. ஆனால் ஸ்டெலா என்னைப் போல் வாய் அடைத்துப் போய்ப் பேசாமல் நிற்கவில்லை. என்னைத் தன் கடைக் கண்ணால் காதல் கனியப் பார்த்து, "உன் மேல் எனக்கு அசாத்தியக் கோபம், தெரியுமா?" என்றாள்.

அதைக் கேட்ட பின் என் நாவுக்கும் பேசத் துணிவு உண்டாயிற்று. "நான் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்கிறேனே என்பதைப் பார்த்ததும் உனக்குப் பேச துணிவு உண்டாகி விட்டதாக்கும்!" என்றேன் சற்று ஏளனமாக.

"அப்பப்பா! உன் கல் நெஞ்சம் வேறு யாருக்கு வரும்? நீயும் ஒரு மனிதன் மாதிரி! இத்தனை நாட்களில் என்னைப் பற்றி ஒரு நிமிஷமாவது நினைத்திருப்பாயா?" என்று என்னைக் கேட்டாள் ஸ்டெலா.

"இதைப் பற்றி என்னைக் கேட்பதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. உன் நெஞ்சையே தொட்டுக் கேட்டுப் பார்த்துக் கொள்!" என்றேன் நான் வெகு அலட்சியமாக.

"அப்படியானால் நீ ஏன் இதுவரை இங்கு வரவில்லை? ஏதடா, ஏழை ஒருத்தி நமக்கு வேண்டியவள் என்று இருக்கிறாளே! அவளுக்கு என்ன கஷ்டமோ? இவ்வளவு நாட்களும் அவள் வரக் காணோமே! நாம்தான் ஒரு நடை போய்ப் பார்த்து வருவோமே என்று என்றைக்காவது நீ எண்ணியதுண்டா?"

"ஏழையா? யார் ஏழை? நான் அல்லவா ஏழை! உனக்குத்தான் அதிர்ஷ்டக் கதவு மடேரென்று திறந்து கொண்டு விட்டதே! இனிமேல் உனக்கு என்ன கவலை?" என்றேன்.

"இப்படி நொந்த புண்ணில் கோல் கொண்டு குத்திப் பரிகாசம் செய்வது உன்

னைப் போன்ற ஆண்களுக்குச் சிறிதும் அழகு ஆகாது!'' என்றாள் அவள்.

நான் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, "ஆமாம், நீ சொல்வதெல்லாம் உண்மை. நான் சொல்வதுதான்......'' என்று ஆரம்பித்தேன்.

"என் மனத்தில் நிகழ்ந்தது உனக்கு எங்கே தெரியப் போகிறது? விஷத்தைத் தின்று செத்து விட்டால் என்ன என்று கூடச் சிற்சில சமயம் எனக்குத் தோன்றிவிட்டது. நீயே சற்றுக் கோபத்தை மூட்டை கட்டி வைத்து விட்டுச் சிந்தித்துப் பார்! இது எத்தனை பெரிய வீடு! எவ்வளவு அழகான வீடு! எவ்வளவு வசதிகள் நிறைந்த வீடு! இந்த வீட்டில் சௌகரியங்களுக்கு என்ன குறைவு? இப்படிப்பட்ட வீட்டில், உன்னைப் பிரிந்து தனியாக இருப்பதென்றால் எனக்கு எவ்வளவு வேதனையாக இருந்தது, தெரியுமா? சொன்னால் புரியாது. அநுபவித்தால்தான் தெரியும். நீ இல்லாத வீடு எனக்கு வீடாகவே தோன்றவில்லை; பயங்கரமான காடாகத்தான் தோன்றியது!'' என்றாள் ஸ்டெலா.




அவளுடைய அந்தப் பேச்சில் தொனித்த பாவம் என் உள்ளத்தில் கொஞ்ச நஞ்சம் இருந்த கோப தாபத்தையும் கரைத்துப் போக்கிவிட்டது. நான் அவளை நெருங்கி அவளுடைய மென்கரத்தை என் கையில் ஏந்திக் கொண்டு, "அப்படியிருக்கும்பொழுது நீ ஏன் எனக்குச் சொல்லி அனுப்பவில்லை? சொல்லி அனுப்பியிருந்தால் உன்னைப் பார்க்க நான் ஓரே ஓட்டமாக ஓடி வந்திருக்க மாட்டேனா?'' என்றேன்.

ஸ்டெலா தன் மோவாய்க் கட்டையில் விரலை வைத்து, "பார்த்தாயா, பார்த்தாயா! எனக்குத் துரும்பு எடுத்துப்போடப் பொழுது இருந்தால் நான் பேசாமல் இருந்திருப்பேனா?'' என்றாள்.

"எனக்கு இது முன்பே தெரிந்திருந்தால்...'' என்று இழுத்தேன்.

"சரி, போனது போகட்டும். உன்னைப் பார்த்ததும் என் கோபம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது!'' என்றாள் ஸ்டெலா இலேசாகச் சிரித்து.

நான் சிறிது நேரம் பேசாமல் இருந்தேன். பிறகு ஸ்டெலாவின் முகத்தை ஒரு முறை பார்த்துவிட்டு மெதுவான குரலில், "ஸ்டெலா! இனி கல்யாண விஷயத்தில் நாம் காலந் தாழ்த்தக் கூடாது; துரிதப்படுத்த வேண்டும். இப்படிப் பார்த்துப் பேசிக் கொண்டிருப்பதனால் மட்டும் மனத் தாகம் அடங்கிவிடுவதில்லை. தெரியும் அல்லவா?'' என்றேன்.

இதைக் கேட்டதும் ஸ்டெலாவின் முகம் குப்பென்று சிவந்தது. கன்னங்களில் நாணம் குமிழியிட்டது. கையில் அணிந்திருந்த உறையைக் கழற்றியவாறே, "என் எண்ணமும் அதுவேதான்!'' என்றாள் அவள்.

இதே சமயம் வெளியே யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்தாற் போலவே, "எல்லாவற்றையும் இந்தச் சிறிய அறையில் வைத்துவிடு'' என்ற குரலும் வந்தது.

அந்தக் குரல் காதில் விழுந்ததும், ஸ்டெலாவின் முகம் போன போக்கைச் சொல்லி முடியாது. அவளுடைய முகம் பேய் அறைந்தது போல் வெளுத்து விட்டது. அவளுடைய கை கால்கள் நடுங்கத் தொடங்கின. எங்கே கீழே விழுந்து அவள் மூர்ச்சையாகி விடுவாளோ என்று கூடத் தோன்றியது. அதைக் கண்ட நானும் துணுக்குற்றேன். எனக்கும் உள்ளூற உதறல் எடுத்தது. என் உடல் பலம் அனைத்தும் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டது. 'இது என்ன தலைவலி?' என்று மனக் குழப்பத்துடன் சிந்திக்கலானேன்.


அதுவரையில் உட்கார்ந்திருந்த ஸ்டெலா சட்டென்று எழுந்து நின்றாள். திடீரென்று அவள் கண்கள் பளிச்சிட்டு ஒளி வீசின. வழி தவறிவிட்ட வழிப் போக்கனுக்குத்

திரும்பவும் வழி கிடைத்துவிட்டால் மகிழ்ச்சியுறுவானே, அதுபோல, அத்தனை நேரமும் திகைத்துத் திக்பிரமை பிடித்தவள்போல் இருந்த ஸ்டெலா மகிழ்ச்சி அடைந்தாள். உடனே அவள் தன் கையினால் ஒரு அறையை எனக்குச் சுட்டிக் காட்டி, "இந்த அறைக்குள் ஒளிந்து கொள். தருணம் பார்த்துப் பின்புறத்துக் கதவைத் திறந்துகொண்டு ஜாக்கிரதையாக வெளியேறிவிடு. இப்போது இதைப் பற்றியெல்லாம் என்னிடம் ஒன்றும் அதிகமாகக் கேட்காதே. நான் இன்னொரு தடவை சாவகாசமாக எல்லா விவரங்களையும் உன்னிடம் சொல்லுகிறேன்!" என்று சொல்லி ஒரு சாவிக் கொத்தை என் கையில் திணித்தாள். அடுத்த கணம் நான் அந்த அறைக்குள் நுழைகிறேனா, இல்லையா என்பதை எதிர்பார்க்காமலே என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் அதற்குள் தள்ளினாள். பிறகு வெளிப்புறமாகக் கதவைத் தாளிட்டுக் கொண்டு, கையோடு கையாக ஒரு பூட்டை எடுத்துப் பூட்டியும் விட்டாள்.

நான் பயந்த குழந்தையைப் போல் பேந்தப் பேந்த விழித்தேன். என் வாயிலிருந்து ஒரு வார்த்தை வெளிவர வேண்டுமே! அதுதான் இல்லை. என் நாக்கு மேலண்ணத்துடன் ஒட்டிக் கொண்டு விட்டது. நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் மனிதனைத் தூக்கி நடுக்கடலில் விட்டெறிந்தால் அவன் விழித்துக் கொண்டதும், பேரிரைச்சல் புரிந்துகொண்டு தன்னைத் திக்குமுக்காட வைப்பதற்காக முன்னேறி வரும் அலைகளைக் கண்டு அச்சத்தினால் கதிகலங்கிப் போவான் அல்லவா? அதுபோல் நான் கதிகலங்கிப் போனேன். கண நேரத்துக்குள் இப்படியெல்லாம் நடக்கக் கூடும் என்று நான் சிறிதாவது எதிர்பார்த்திருந்தால்தானே? எனக்குக் கண்களைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. இது வரை நான் காதலை மலர் மெத்தையாக எண்ணி வந்தேன். இதில் முட்களும் உண்டு என்பதை எண்ணியிருந்தால் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்க மாட்டேன். அப்படியேயிருந்தாலும் கூடியவரை ஜாக்கிரதையாக இருக்க முயன்றிருப்பேன். நடந்தது என்னவோ நடந்து விட்டது. அதைப்பற்றி இனிமேல் யோசித்து என்ன பயன்? மலர்களைப் பார்த்தாயிற்று. முட்களைப் பார்க்க வேண்டிய முறை வந்து விட்டது. வேண்டாம் என்றால் யார் விட்டார்கள்? அதையும் பார்த்து அநுபவித்துத் தானே தீரவேண்டும்?




சிறிது நேரம் சென்றது. நேரம் ஆக ஆக, பொழுது போகப் போக, இந்தச் சிறையில் வருஷக் கணக்காக அடைபட்டிருப்பது போன்ற பிரமை என்னைப் பிடித்துக் கொண்டு என்னைத் திகிலுறச் செய்தது. கதவை உடைத்துக் கொண்டு வெளியேறி விட்டால் என்ன என்றுகூட எண்ணினேன். அப்பொழுது வெளியே யாரோ ஆனந்தமாக ஒரு பாட்டை முணு முணுத்துக் கொண்டு போவது காதில் விழுந்தது. அவன் நிலைமை எனக்குப் பொறுமையை உண்டு



தகப்பனார் :—உன்னைவிட சின்னவர் களைப் போய் அடிக்கலாமாடா? உம், சொல்லு......

பையன் :—அது சரிதான், அப்பா! நீங்கள் மாத்திரம் இப்பொழுது என்ன பண்ணுகிறீர்கள்?

---

பண்ணிற்று. 'ஆகா! அவன்தான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி! எங்கே நினைத்தாலும் போகிறான். என்ன வேண்டுமானாலும் செய்கிறான். அவன் யாரோ, தெரியவில்லை. ஆயினும் அவனுக்கு எவ்விதமான பயமும் இல்லை; பீதியும் இல்லை. பாக்கியசாலி என்றால் அவன் அல்லவா பாக்கியசாலி!' என்று எண்ணி மனம் பொருமினேன்.

காட்டிலே சுயேச்சையாகப் பறந்து திரிந்து ஆனந்த கீதம் பாடி வரும் பறவைக்குச் சுதந்திரத்தின் மகிமை எங்கே தெரியப் போகிறது? அதைப் பிடித்துக் கூட்டில் அடைத்துச் சிறை வைத்தபின் அல்லவா அது சுதந்திரத்தின் மகிமையை உணரும்? நீரில் வாழும் மீன் நீரில் இருக்கும் வரையில் 'நாம் சுதந்திரமாக வாழ்கிறோம்' என்பதை அறியுமா? அதைப் பிடித்துக் கரையில் போட்டால் அல்லவா அதற்குச் சுதந்திரத்தின் பெருமை தெரிய வரும்? 'வாழ்ந்தால் நீரில் சுதந்திரமாக வாழ வேண்டும். இல்லாவிட்டால் பிராணனை விட்டுவிட வேண்டும்' என்று துடியாய்த் துடிக்கும்? அதேபோலத்தான் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி, 'சித்தம் போக்கு சிவன் போக்கு' என்று என் இஷ்டப்படி சுயேச்சையாக வாழ்ந்துவந்த எனக்கு அந்த அறை சிறையாகப் பட்டது.

எனக்குச் சுதந்திரத்தின் மதிப்பு சுதந்திரத்தை இழந்து அறையில் அடைபட்ட பின்தான் தெரிய வந்தது. ஆனால் நான் என் சுதந்திரத்தை இழந்தது இரண்டு ஒரு மணி நேரத்துக்குத்தான் என்றாலும் என் உள்ளம் அந்தச் சுதந்திரத்துக்காக என்ன தவியாய்த் தவித்தது, தெரியுமா? சுதந்திரத்தின் பெருமையை உணர்வதற்கு அதைவிட அரிய சந்தர்ப்பம் கிட்ட முடியாது. நான் ஒரு நாற்காலியில் அமர்ந்து, 'நமக்கு எப்பொழுது அந்த ஆனந்த சுதந்திரம் கிட்டும்' என்று ஏக்கத்துடன் எதிர்பார்க்கலானேன்.

இதே சமயம், "வக்கீல் எனக்குத் தந்தி அடித்திருந்தார். அதனால்தான் நான் திரும்பி வந்துவிட்டேன்......" என்று யாரோ வெளியில் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

குரலைக் காது கொடுத்துக் கேட்ட எனக்கு அது ஒரு கிழவியின் குரலாகத் தோன்றியது.

"ஏதாவது முக்கியமான சமாசாரமாயிருக்கலாம். இல்லாவிட்டால் அவர் எதற்காக இவ்வளவு அவசரமாகக் கூப்பிட்டிருக்கப் போகிறார்?" என்றாள் ஸ்டெலா.

"அப்படித்தான் இருக்க வேண்டும். ஏன், ஸ்டெலா! நான் இப்படி 'திடு திப்'பென்று திரும்பி வந்து விட்டது பற்றி, ஒன்றும் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாயே?" என்று கேட்டாள் கிழவி.

"தவறாக எடுத்துக் கொள்வதா? தாயார் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தால் பெண் எங்கேயாவது தவறாக எடுத்துக் கொள்வது உண்டா? நீ சொல்லுவது அதிசயமாக அல்லவா இருக்கிறது!" என்றாள் ஸ்டெலா.

"இல்லை, ஸ்டெலா! இல்லை. நான் சும்மாக் கேட்டு வைத்தேன் நீ வித்தியாசமாக எடுத்துக் கொள்ளாதே!" என்றாள் கிழவி.

"இம்மாதிரி நீ பேசுவது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. ஆமாம், சொல்லி விட்டேன்!" என்றாள் ஸ்டெலா.

"இனிமேல் பேசவில்லை. இந்தத் தடவை மட்டும் மன்னித்துவிடு" என்று சொன்ன கிழவி, "ஸ்டெலா! சற்று எதிர் அறையின் சாவியைக் கொண்டு வாயேன்!" என்றாள்.

அதைக் கேட்டதும் எனக்கு வியர்த்து விறுவிறுத்து விட்டது.

"எதற்கு, அம்மா!"

"என் கவுன் அந்த அறைக்குள் இருக்கிறது. எடுத்துக் கொள்ள வேண்டும்!"

"கவுன்தானே? இதோ நானே எடுத்து வருகிறேன். உனக்குப் பிரயாணக் களைப்பு அதிகமாயிருக்கும். வந்த சிரமம் நீங்க, இதோ, இந்த நாற்காலியில் உட்கார்ந்து சற்று இளைப்பாறு. நான் போய்க் கொண்டு வந்து தருகிறேன்!" என்றாள் ஸ்டெலா.

"சிரமமும் இல்லை, கிரமமும் இல்லை. நான் என்ன நடந்து வந்தேனா, கைகால் கடுத்துப் போவதற்கு? வேண்டாம், இங்கே சாவியைக் கொண்டு வா! நானே எடுத்துக் கொள்கிறேன்!" என்றாள் கிழவி.

"இல்லை, அம்மா! என்ன இருந்தாலும் உனக்கு வயதாகி விட்டது. என்னைப்போன்ற குமரிகளுக்கே இந்தப் படி ஏறி வந்தால் மூச்சு முட்டிப் போகிறது. அப்படியிருக்கும்பொழுது உன்னைப்போன்ற கிழவிகளைப் பற்றிக் கேட்பானேன்? நீ சிரமப்படுவதைக்




இது உண்மைதானா என்று நீங்கள் கேட்பீர்கள்.

ஆம், முற்றிலும் உண்மையே! கீழ்க் கண்ட கடிகாரத்தைக் குறைந்த விலைக்கு நீங்கள் இப்பொழுது பெற்றுக்கொள்ளலாம்.

5 வருஷம் உத்தரவாதம்.


நெ. 2501—வாட்டர் புரூப், ஷாக் புரூப், ஆன்டிமாக்னடிக், க்ரோம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேக், சிவப்பு சென்டர் செகண்டு, ரேடியம் டயலுடன் 15 ஜுவல் கடிகாரம் ரூ. 48/- தபால் செலவு ரூ. 1/- தனி.

இரண்டு வாங்குகிறவர்களுக்கு தபால் செலவு இலவசம்.

சொற்ப கடிகாரங்களே கைவசமுள்ளதால் உடனேயே ஆர்டர் செய்யுங்கள்.

குறிப்பு:—குறித்த நேரத்தில் சுலபமாக 15, 17 ஜுவல் கடிகாரமும் அத்துடன் ரேடியோவையும் பெற நூதன முறையை ஏற்படுத்தி யிருக்கிறோம். இதைப் பெற விரும்புவோர் உடனே நூதன முறை காட்லாக்கிற்கு எழுதவும்.

**EAST INDIA WATCH CO., POST BAG No. 16, CALCUTTA-1**



புத்தம் புதியதும் சிறந்ததுமான இந்த மூன்று சக்கரம் சைகிள்களுக்கு (Try-Cycle) ஆர்டர் செய்யுங்கள். இதன் விலை ரூ. 25/- லிருந்து ரூ. 15/-க்கு குறைக்கப் பட்டிருக்கிறது. ரயில்வே சார்ஜ் சுமார் ரூ. 1/8/- உங்கள் அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரைத் தெரிவித்து இன்றே ஆர்டரை அனுப்புங்கள்.

•

**JUPITER TRADING CO.,**
**P. BAG 16602 - CALCUTTA-4**

வண்ணாத்திப்பூச்சி
பிராண்ட்



**சமேலி**
**அகர்பத்தி**

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

**மோடி அண்டு கோ.,**

சென்னை ராஜ்யம், திருவாங்கூர் – கொச்சி, மைசூர் சமஸ்தானம் முதலிய இடங்களுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
மெஸர்ஸ். ஒக்லே பௌடன் & கோ. (மதராஸ்) லிட்.,
11-12, முதல் லேன் பீச், மதராஸ்-1





"நானைக்குத்தான் சம்பளம் வாங்கப் போகிறேன். கையில் காலணு இல்லை. ஒரு ஐந்து ரூபாய் கொடுங்களேன்."

"நான் நேற்றுத்தான் சம்பளம் வாங்கினேன். கையில் தம்படிகூட இல்லை, சார்!"

---

காண என்றால் ஆகாது. நீ பேசாமல் உட்கார். நானே கொண்டு வருகிறேன்!" என்றான் ஸ்டீலா மறுபடியும் பிடிவாதமாக.

ஆனால் கிழவி கேட்கவில்லை. சாவியை வாங்கிக் கொண்டுதான் மறு காரியம் பார்த்தாள். சாவியை வாங்கிக் கொண்டதும் என் அறையை நோக்கி வந்தாள். அவன் என் அறையை நெருங்கி வர வர, என் சாவே என்னை நெருங்கி வருவது போலிருந்தது. எனக்கு மூச்சே நின்று விட்டது. பின் புறத்துக் கதவைத் திறந்து கொண்டு ஓடி விடுவோமா என்று எண்ணினேன். ஆனால் என் கால்கள் எழும்பினால் தானே? எனக்கு

தப்புவதற்கு உபாயம் தோன்றாமல் தவித்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஸ்டீலாவுக்குத் தப்புவதற்கு நல்ல உபாயம் ஒன்று கிடைத்து விட்டது. உடனே அவன் வெளியே ஒரே ஓட்டமாக ஓடி, "திருடன், திருடன்!" என்று உரக்கக் கத்தி ஊரைக் கூப்பிட்டாள்.

அதைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அஜாக்கிரதையாகச் சட்டை போட்டுக் கொள்ளும் ஒருவன் சட்டையை மாட்டிக் கொண்டதும் சர்ப்பம் அதனுள்ளிருந்து வெளிவருவதைக் கண்டால் எப்படித் துணுக்குறுவான்? அதேபோல் நான் துணுக்குற்றுத் துள்ளிக் குதித்தேன். ஸ்டீலாவின் வறட்சி நிறைந்த சுபாவம், ஏமாற்று வித்தை, மோசடி, சூது, வாது எல்லாவற்றையும் நான் கண்டிருக்கிறேன். அவையெல்லாம் எனக்கு ஒன்றும் புதிதில்லை. ஆனால் தன்னை நல்லவளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் என் மானத்தையும் மரியாதையையும் இப்படிப் பலி வைப்பாள் என்று நான் நினைக்கவே இல்லை. என் கால்கள் கனத்தன; உடல் வெலவெலத்தது; தலை சுற்றியது. நான் சிலையாக நின்று விட்டேன். அப்பொழுது எனக்குக் கையிலிருந்த சாவிக் கொத்தை விட்டெறியக் கூடத் தோன்றவில்லை.

இதற்குள் போலீஸ்காரன் வந்து என்னைக் கைது செய்து விட்டான். நான் சிறிது நேரத்துக்கு முன்புதான் இரண்டொரு மணி நேரத்துச் சிறைவாசத்துக்குப் பயந்து செத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுதோ...? அநேக ஆண்டுகள் நான் சிறைக் கம்பிகளை எண்ணியாக வேண்டுமே! என்ன செய்வது? ஆனால் நான் அதைச் சிறிதும் பொருட் படுத்தவில்லை. மனிதன் இவ்வளவு தூரம் மக்கட் தன்மையை விட்டு ஒழிந்து நன்றி கெட்டவனாக ஆகக் கூடும் என்னும் எண்ணம் என் மன வருத்தத்தையும் சிறை வாசத்தினால் கிடைக்கப் போகும் அவமானத்தையும் எத்தனையோ பங்கு குறைத்து விட்டது.

பிறகு அந்தக் கிழவி ஸ்டீலாவின் சிற்றன்னை என்பதையும், 'ஸ்டீலா அவள் இல்

# ஜலதோஷத்தை அலட்சியமாக எண்ணாதீர்கள்
# உடன் சிகிச்சை செய்யுங்கள்




வெஸ்ட் மின்ஸ்டர் லேபரட்டரீஸ் லிமிடெட் லண்டன், தயாரிப்பு

ஜலதோஷத்தின் அறிகுறி தென்பட்ட உடனேயே மூக்கினுள் சிறிது கிபாக்கைத் தடவினால் ஒரு மணி நேரத்திற்குள்ளாக சளியின்று மூக்கு அடைப்பு அறவே அகன்றுவிடும். மூக்கு அடைப்பு நீங்கி சுவாசம் சரிவர ஆகிவிட்டால், ஜலதோஷம் தானாகவே நின்றுவிடும்.

இரவில் படுக்குமுன், மார்பு, நெஞ்சு முதுகு பாகங்களில் சிறிது கிபாக்கை நன்றாகத் தேய்த்துக்கொண்டால், முற்றிலும் நீங்கற்றதும் ஆவியாக மாறக் கூடியதுமான கிபாக்கிலுள்ள எண்ணைச்சத்துக்கள் நீடித்துள்ள ஜலதோஷத்தையும் எளிதில் நிவர்த்தி செய்துவிடும்.

## கிபாக்

முகரவும், தேய்க்கவும் உகந்தது

ஏஜென்டுகள்: ஓரியண்டல் மெர்க்கன்டைல் ஏஜென்ஸி,
99-A., அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்-1

SISTA'S—WL—21A—TAMIL



## பருக்களும் விகாரமான சருமமும் 24 மணி நேரத்தில் குணமடைகிறது



BEFORE AFTER

நிக்ஸோடெர்ம் கண்டு பிடிக்கப் பட்டதிலிருந்து இனி யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டிகள் ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்மினால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனுபவசாலமாக வைத்துக்கொண்டு, பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் கொடுக்காதீர்கள்.

### ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் கண்டு உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவிக் கொள்ளும்போது ஒரு பவுடரைப் போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தைத் தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைத் தாக்கிக் கொல்லுகிறது. (2) அரிந்து, எரிந்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷங்களில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப்போல வழவழப்பாகவும் ஆக்குகிறது.

### விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் வேறெதையும்விட சீக்கிரமாக வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சல் ஆகியவற்றை சில நிமிஷங்களில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழவழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி — நாடிய வைத்தியம் கிடைத்ததை உணருவீர்கள். நிக்ஸோடெர்ம் ஆயிரக்கணக்கானவர்களுடைய சருமத்தைச் சுத்தமாக்கி புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "பல வருஷங்களாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப் பிறகு நிக்ஸோடெர்ம் உபயோகித்தேன். 10 நிமிஷங்களில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாயிற்று. என் தோற்றத்தில் ஏற்பட்ட மாறுதலைக்கண்ட என் நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்."

### திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாக சுத்தமாகாதவரை நிக்ஸோடெர்ம் மதிப்பை இழக்கிறது. இன்றே ஒரு நிக்ஸோடெர்ம் வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் கண்டு ஆச்சரியப் படுவீர்கள். மேலும் ஒரு வாரத்திற்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் அதன் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, நீங்கள் கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே ஒரு நிக்ஸோடெர்ம் வாங்குங்கள். அதன் அளித்த உத்தரவாதமே உங்களுக்கு உறுதி.

# நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?



"மிகவும் ஆரோ
க்கியம் வாய்
ந்த பற்களை
உடையவள் நான்
என்று எனது பல்
வைத்தியர் சொல்
லுகிறார். இது மக்
ளீன்ஸுக்கு பெரு
மை தருகிறதல்
லவா?"

உங்கள் பல் பிரஷ்ஷின் மீது மக்ளீன் பெராக்ஸைட் பற்பசையை அமுக்கிப்பிழியுங்கள். உங்கள் பற்களை சுத்தம் செய்த பிறகு உங்கள் வாயில் உண்டாகும் புது மணத்தையும், சுவையையும் உணருங்கள். மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உடனடியாக வாயில் ஊறும் அபாயகரமான புளிப்பு நீர்களைக் குறைத்து பல் சொத்தை பிடிப்பதைத் தடுத்து விடுகிறது. விகாரமளிக்கும் கறைகளை பற்களிலிருந்து அகற்றுகிறது.

ஆரோக்கியமானவாயும், வெண்மையும் வசீகரமும் கொண்ட பற்களும் வேண்டுமானால் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை தினமும் இரண்டுதடவை உபயோகியுங்கள். அதன் சுத்தத்திற்கு உத்தரவாதம்.

**இன்றே மக்ளீன்ஸ் வாங்குக!**




MTY-6 TAM.

வியாபார விவரங்களுக்கு: ஜே. எல். மாரிசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட் மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.

# வழக்கும் தீர்ப்பும்

வேம்பு

அன்று கோர்ட்டிலிருந்து திரும்பி வந்து உட்கார்ந்ததும், லோகசுந்தரிக்குத் தாங்க முடியாத துக்கம் வந்தது. விம்மி விம்மி அழுதாள். புடவைத் தலைப்பால் முகத்தை மூடிக் கொண்டு அவள் அழுவதைப் பார்த்த அவள் தாயார், "என்னடி இது! எதற்கு இப்படி அழுகிறாய்! இந்தக் கோர்ட்டிலே ஜெயிக்க வில்லையென்றால் அப்பீலுக்குப் போவோம். என்றைக்கும் இல்லாத வருத்தம் இன்றைக்கென்று உனக்கு எங்கிருந்தடி வந்து விட்டது! எழுந்து முகத்தை அலம்பிக் கொள்" என்றாள்.

அவள் சமாதானப் படுத்தினதுகூட அவளுக்குக் கசப்பாக இருந்தது. எரிச்சலாகவும் பட்டது. அந்த விம்மலுக் கிடையேயும் அவள் உரத்த குரலில், "அம்மா, எல்லாம் உன்னால் வந்த வினை தான். நீயும் அண்ணாவும் சேர்ந்து பிடிவாதம் பிடித்துத்தானே இந்தமாதிரி யெல்லாம் வர வழைத்தீர்கள்! அவரை ஒரு எதிரி என்று எண்ணி விட்டீர்களே......" என்று மேலும் ஏதோ சொல்ல முயன்றவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

எப்படிப் பேசமுடியும்! அவள் இருதயம் விம்மியது. அன்று கோர்ட்டில் நடந்த சம்பவம் அவளை அப்படியாக்கி விட்டது. கடந்த நான்கைந்து மாதங்களாகவே 'கோர்ட், கோர்ட்' என்று அவள் போக வேண்டிய பொல்லாத காலம் சேர்ந்து விட்டது. விஷகடி வேளை என்பார்களே, அது இதுதானோ! தன் கணவனுக் கெதிராகக் கூண்டிலேறி, வக்கீல்கள் கேட்கும் கேள்விகளுக் குப் பதில் சொல்வதுகூட அவளுக்குத் துன்பமாகப் படவில்லை. மூன்றே வயது நிரம்பிய அவளுடைய குழந்தையைக் கூண்டிலேற்றி, "நீ எங்கே பாப்பா, போகிறாய்! அப்பாவிடமா, அம்மாவிடமா!" என்று கேட்டபோது, ஒரு கள்ளச் சிரிப்பு சிரித்து, தன் பிஞ்சுக் கையை நீட்டி, "அப்பாவிடம்......!" என்றபொழுது லோகசுந்தரிக்கு யாரோ தன்னை உலுக்குவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அந்தக் குழந்தையின் இருதயங்கூடத் தனக்கில்லாமல் போய்விட்டதே என்று அவள் மனம் பொருமி விம்மினாள்.

அந்தக் குழந்தை ஒன்றைக் கருதித்தான் கணவனிடமிருந்து கோபத்துடன், மூன்றாவது தெருவிலிருக்கும் தன் பிறந்தகத்துக்கு வந்தாள். இளங் குழந்தையின் இன்ப முகத்தைப் பார்த்துக் கவலையைப் போக்கிக் கொள்ளலாம் என்று கருதினாள். அதனுடைய குமிழ்ச் சிரிப்பால் இழந்த இன்பத்தை மீண்டும் பெறலாம் என்று எண்ணினாள். தன் கணவனைக்கூட குழந்தையின் மோகனஸ்திரம் மயக்கிவிடும் என்று எண்ணினாள். ஆனால் அந்த குழந்தையைப் பிரியுமாறு நேர்ந்து விட்டதே! இதற்கு யார் காரணம்! அவளா!

இல்லை, இல்லை! இந்த அம்மாவும், அண்ணாவும் சேர்ந்து, தன் குழம்பிய உள்ளத்தை மேலும் குழம்பச் செய்து விட்டார்கள். தனக்கு நன்மை செய்வதாகக் கூறிக் கணவனுக்கெதிராக வைஷம்யத்தை வளர்த்து விட்டார்கள்.

* * *

லோகசுந்தரிக்கும், சேகரனுக்கும் கல்யாணம் நடந்து ஓராண்டுவரை எத்தகைய இடையூறுமின்றி வாழ்க்கைப் படகு சென்றது. இரண்டு வருஷங்களுக்குப் பிறகு லோகசுந்தரி கருவுற்றிருந்தபோதுதான் கல்கத்தாவிலிருந்து சேகரனின் சகோதரி வந்து சேர்ந்தாள். அவளது கணவனுக்கு வேறு ஊருக்கு மாற்றல் ஆகிவிட்டதால் சிறிது காலம் தமையன் வீட்டில் தங்கிப் போகலாம் என்று வந்திருந்தாள். இயற்கையாகவே சோம்பேறியான அவள் யாருடனும் அதிகம் பேசமாட்டாள். பிறருக்குக் கூடமாட ஒத்தாசை செய்யவும் மாட்டாள். கர்ப்பவதியான லோகசுந்தரி அதை வித்தியாசமாக எடுத்துக் கொள்ளவில்லை. தனக்குத் தேக சிரமம் சிறிது இருந்தாலும் 'அக்கா, அக்கா' என்று ஓடி ஓடி அவளுக்குச் சிசுருஷை செய்தாள். சேகரன் இது எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் தான் உண்டு தன் காரியம் உண்டு என்று இருந்தான்.

ஒரு நாள் தன் மகளைப் பார்த்துப் போக வந்த லோகசுந்தரியின் தாயார், தன் மகள் இயந்திரத்தில் அரிசி அரைப்பதைப் பார்த்தவுடனேயே கன்னத்தில் கையை வைத்துவிட்டாள். அவளுடைய பெரு மூச்சிலே விஷ ஜ்வாலை வீசியது. லோகசுந்தரியின் நாத்தனார் கால் மேல் கால் போட்டுக் கொண்டிருப்பதும், கர்ப்பவதியான



தன் மகள் அரை வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்வதும் அந்தப் பெற்ற வயிற்றை என்ன செய்ததோ என்னவோ!

“நாத்தனார் இன்னும் எத்தனை நாள் இங்கே தங்கியிருப்பாள்! ஏன் வந்தாள்! அவளைச் சும்மா இருக்க விட்டு நீயே எல்லாவற்றையும் செய்கிறாயே! உன் கணவன் ஒன்றையும் கேட்பதில்லையா!” என்று பற்பல கேள்விகள் கேட்டு மகளின் மனத்திலே விஷ வித்தை ஊன்றினாள்.

இதன் பலனாக லோகசுந்தரிக்கு ஏற்பட்ட இயற்கை அசதி, தான் ஏன் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இரண்டுமாகச் சேர்ந்து வீட்டிலே ஓர் யுத்த களத்தைச் சிருஷ்டித்துவிட்டன. சேகரனின் பாடு திண்டாட்ட மாயிற்று. சீமந்தமும் அவ்வளவு சந்துஷ்டியாக நடைபெறவில்லை. மனைவி பிரசவத்துக்காகப் போன பிறகுதான் சேகரனுக்கு ஒருவாறு மன நிம்மதி யுண்டாயிற்று.



லோகசுந்தரியும் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். சேகரன் குழந்தையைப் போய்ப் பார்க்கத் தவறவில்லை. ஆனால் அந்தச் சமயம் தான் அவனுக்குக் காரியாலயத்தில் கஷ்டமேற்பட்டது. இவன் வேலை செய்த கம்பெனி கஷ்டத்தில் வேலை செய்தபடியால், அவனுக்குச் சம்பளம் சரியாக வரவில்லை. ஆகவே, எட்டு மாதங்கள் கழித்துத்தான் அவன் லோகசுந்தரியைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்ல முடிந்தது.

குழந்தைக்கு டானிக், புஷ்டிகரமான ஆகாரங்கள் முதலியன கொடுப்பதைக் கண்ட சேகரன், “சுந்தரி, நம் நிலைக்குத் தக்கபடி செய்ய வேண்டும். குழந்தை சுகுமார் இளைத்திருந்தால் இதெல்லாம் கொடுக்கலாம். அநாவசியமாக எதற்கு!” என்று சர்வ சாதாரணமாகத்தான் சொன்னான்.

ஆனால் லோகசுந்தரி அதை விபரீதமாக எடுத்துக் கொண்டு தன் தாயாருக்குத் தெரிவித்தாள். தாயார் உடனே கோபமாக நான்கைந்து மாதங்களுக்கு வேண்டிய டானிக்குகள், புஷ்டிகரமான ஆகாரங்கள் முதலியவற்றை வாங்கிக் கொடுத்துச் செல்லும்போது சற்றுக் குறைவான வார்த்தைகளைப் பேசிவிட்டுச் சென்றாள். சேகரனின் தங்கைக்கு அந்த வார்த்தைகள் பொறுக்கவில்லை. சேகரன் வந்தவுடன் அவள் அதைக் கூறும்போது லோகசுந்தரிக்கும், சேகரனின் தங்கைக்கும் வாக்குவாதம் முற்றியது.

தன் மனைவி இப்படிப் பிறந்த வீட்டுப் பெருமையை எடுத்துக் கூறி எல்லோரையும் மட்டந் தட்டும் குணமுடையவளாக இருப்பாள் என்று சேகரன் நினைக்கவில்லை. கசப்பு வளர்ந்து ‘ஒரு நாள் என் வீட்டிற்குப் போய்விடுவேன்’ என்று பயமுறுத்திய லோகசுந்தரியை, ‘உன் இஷ்டப்படி செய்’ என்று கூறிவிட்டான் சேகரன்.

கோபத்தில் அவன் அவ்வாறு கூறிவிட்டானே யொழிய, உண்மையில் லோகசுந்தரியைக் கோபிக்க விரும்பவில்லை. ஆனால், பிறந்த வீடு போன லோகசுந்தரி திரும்பி வரவில்லை. அதன் பலனாகச் சேகரனும் தன் பிடிவாதத்தைக் கடைப்பிடிக்கலானான். லோகசுந்தரியின் தாயாரோ, “உன் கணவன் வந்து உன்னைக் கூப்பிடும் வரையில் போக வேண்டாம்” என்று சொல்லி விட்டாள்.

சேகரனுக்கு வீடே சூன்யம் நிறைந்தது போலிருந்தது. சுகுமாரன் தவழ்ந்த இடங்கள், இனிய மழலை பேசிய சொற்கள் எல்லாம் கண்முன் தோன்றுவது போலும் காதில் விழுவதுபோலும் தோற்றமளித்தன. சுகுமாரனாவது இருந்திருந்தால் தன் மனம் நிம்மதியாக இருக்குமென்று எண்ணினான். ‘போய்க் குழந்தைக்காகவாவது அவளை அழைத்து வருவோமா!’ என்று ஒருகணம் நினைத்த அவன், ‘ஊஹூம், அது முடியாத காரியம். அவ்வளவு கர்வத்துடன் போனவளைக் கூப்பிடுவதா! அவள் வீட்டுக்குப்போவதா!’ என்று பலவாறு எண்ணினான். ஒரு நாள் சேகரன் தன்

மனைவியின் பிறந்தகம் இருக்கும் தெரு வழியாகச் செல்ல நேர்ந்தது. அந்த வீட்டைப் பார்க்காதது போலவே சென்றுவிட எண்ணினான். ஆனால் தெருவில் குழந்தை சுகுமாரன் மணலில் விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டதும் அவன் கால்கள் மேற்கொண்டு நடக்க மறுத்தன. ஆனால் வீட்டிற்குள்ளிருந்து யாரோ குழந்தையைக் கூப்பிட்டுக் கொண்டே வரும் ஓசை கேட்கவே சேகரன் தன் இருதயத்தில் எழுந்த பாசத்தையும் அடக்கிக்கொண்டு வேகமாகச் சென்று விட்டான்.

ஆனால் அன்று முழுவதும் அவனுக்குக் குழந்தையின் நினைவுதான். 'சுகுமாரனை எடுத்து வந்து விட்டால்......! அப்போது லோககந்தரி தானே வந்துவிடுவாள்!' என்ற எண்ணம் அவன் மூளைக்கு வேலை அளித்தது.

மறுநாள் மாலை அதே நேரத்துக்கு, அதே வீதி வழியாகச் சென்ற சேகரனின் இருதயம் படபடத்தது. நடுத்தெருவிலேயே சுகுமாரன் விளையாடிக் கொண்டிருந்தான்.

'சுகு, சுகு' என்று அழைத்தான் சேகரன். குழந்தை திரும்பிப் பார்த்து ஒரு விநாடி திகைத்தது. பிறகு சிரித்துக் கொண்டே சேகரனை நெருங்கியது. சேகரன் ஆவலுடன் அதை வாரியணைத்தான். குழந்தை புழுதி அடைந்த கைகளுடன் இருந்ததும் அவனுக்குத் தெரியவில்லை. மாறி மாறி முத்த மிட்டவாறே அதைத் தூக்கிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தான்.

அஸ்தமித்த பிறகு குழந்தையைக் காணோம் என்னும் கூக்குரல் லோககந்தரியின் வீட்டில் எழுந்தது. பல இடங்களில் ஆள்விட்டுத் தேடினர். கடைசியில் எப்படியோ சேகரன் எடுத்துச் சென்ற விவரம் அறிந்தவுடன் லோககந்தரி நிம்மதியடைந்தாலும், வக்கீலான அவள் அண்ணன் கோபங் கொண்டான். மறுநாளே சேகரன்மீது வழக்குத் தொடர்ந்து விட்டான்.

* * *

அந்த வழக்கு நடந்து அன்று தீர்ப்பு வந்த பிறகுதான் லோக ககந்தரிக்கு வருத்தம் தாங்க முடியவில்லை. அவள் உள்ளத்துச் செருக்கு எல்லாம் அழிந்தது. இரண்டு மூன்று தினங்கள் அவள் சாப்பிடவே யில்லை. லோக ககந்தரியின் தாயாருக்கும் கூட 'இதென்ன வேதனை!' என்று தோன்றி விட்டது.

இந்தச் சமயத்தில்தான் புதுடில்லியிலிருந்து லோககந்தரியின் தம்பி வந்து சேர்ந்தான். அவன் ஊருக்கு வந்து நான்கு வருடங்களுக்கு மேலாகி விட்டன. அவனுக்கு முதலில் தன் அக்காவுக்கும், அக்கா புருஷன் சேகரனுக்கும் ஏற்பட்ட தகராறு தெரியாது.

முதல் நாளே சேகரனிடம் சென்று சௌஜன்யமாகப் பேசிவிட்டு வந்தபிறகுதான் லோககந்தரியின் தம்பி கிருஷ்ணமூர்த்திக்கு விவரம் தெரிந்தது. தன் சகோதரியும், தன் அண்ணனும் தாயாரும் சேர்ந்து செய்த செயல்களை அறிந்து மிகவும் வருத்தப்பட்டான்.

தினமும் சேகரன் வீட்டிற்குப் போய் வருவான். ஒருநாள் கூட அந்தச் சோகக் கதையைப் பற்றிப் பேசவில்லை. சுகுமாரன் 'மாமா, மாமா' என்று பிரியமுடன் வருவான். அவனைத் தூக்கிக் கொஞ்சுவான் கிருஷ்ணமூர்த்தி.

ஒரு நாள், லோக ககந்தரியுடன் கடைத் தெருவுக்குப் போய்த் திரும்பி வரும்போது, அவளைப் புக்ககத்துத் தெரு வழியே வருமாறு கூப்பிட்




## தமிழ்த் தெய்வம் கண்ட உண்மை

"மையுண்ட கண்களுடனும் நெற்றியில் இட்டுக் கொண்டிருக்கும் (சாந்து) திலகத்துடனும் கூடிய உன்னை வெறும் தினைப் புனம் காக்க வைத்தாரே" என்று பேசுகிறான் வள்ளியின் சௌந்தர்ய லாவண்யத்தைப் பருகிய அழகுக் கடவுள் குமரன்.

இது வெறும் காதல் மொழிகள் அல்ல. தமிழ்த் தெய்வம் கண்ட உண்மை.

பெண்மணிகளின் மருளுதலுடன் கூடிய மீன் விழி போன்ற கண்களுக்கு ஐடெக்ஸ் கண் மையும், கூன் பிறை போன்ற ரஞ்சிதமான சோபையும், களையும் கூடிய நெற்றிக்கு பிந்தி குங்குமம் வாசனை சாந்தும் (பச்சை, கடும் சிவப்பு, ரோஸ், வைலட்டு, மஜந்தா, கருப்பு முதலிய ஆறு தனித் தனி கலர்களில்), கருமேகம் போன்ற இருண்டு சுருண்டு அடர்ந்து வளரும் கூந்தலுக்கு ரூபா டானிக் ஹேர் ஆயிலும், உபயோகித்து வந்தால் — பூரண சந்திர வதனம் போன்ற மிருதுவான மேனியுடன் விளங்குவீர்கள்.

இவைகள் எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும். மட்டமான போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்.




தயாரித்து விநியோகிப்பவர்கள் :

அரவிந்த் லாபரட்டரீஸ்

ஆற்காட் ரோடு — மதராஸ் - 16

டான். முதலில் அவன் மறுத்தபோதிலும் ஏதோ ஓர் உணர்ச்சி அவனைச் சம்மதிக்கச் செய்தது. வீட்டை நெருங்கும்போது, சுகுமாரன் தெரு வாசற்படியில் உட்கார்ந்திருந்தான். குழந்தையைப் பார்க்கும்போது தாய்மை உணர்ச்சி அவனை வதைத்தது. அந்த இடத்தை விட்டு வேகமாகக் கடந்துவிட விரும்பினான். ஆனால் கிருஷ்ணமூர்த்தி குழந்தை அருகே போய் "சுகுமார், வா!" என்று அழைத்தான். சுகுமாரும் துள்ளி ஓடி வந்தான். அவனைத் தூக்கிக்கொண்ட கிருஷ்ணமூர்த்தி, "அக்கா, எப்படி அப்பாவிடம் போனானோ அப்படியே அம்மாவிடமும் வந்து விட்டான். வா, போகலாம்" என்று வீட்டை நோக்கி நடந்தான்.

* * *

மாலை காரியாலயத்திலிருந்து, அன்று ஏற்பட்ட ஒரு சந்தோஷச் செய்தியால் உள்ளக் களிப்புடன் வந்த சேகரன் சுகுமாரனைக் காணாமல் தவித்தான். பரபரப்புடன் இங்கும் அங்கும் தேடி விட்டுப் போலீஸில் புகார் செய்யக் கிளம்பும் போது கிருஷ்ணமூர்த்தி எதிரே வந்தான்.

"என்ன அத்திம்பேரே, வாட்டமாக இருக்கிறீர்களே!" என்று ஒன்றும் தெரியாதது போலக் கேட்டான் கிருஷ்ணமூர்த்தி.

"குழந்தையைக் காணோம்" என்று வருத்தத்துடன் கூறிய சேகரனைப் பார்த்துக் கிருஷ்ணமூர்த்தி சிரித்தான்.

அவன் சிரிப்பது சேகரனுக்கு ஆத்திரமாகத் தானிருந்தது. வேகமாகப் போகத் தொடங்கினான். கிருஷ்ணமூர்த்தி அவன் கையைப் பற்றி இழுத்து. "அத்திம்பேரே, அவசரப் படாதீர்கள்! குழந்தை இருக்கும் இடம் எனக்குத் தெரியும், காட்டுகிறேன். குழந்தை யாருடன் இருக்கிறேன் என்று சொல்கிறதோ அதற்குத் தாங்கள் சம்மதிக்க வேண்டும்" என்று கூறிய வண்ணம் அழைத்துப் போனான்.

கிருஷ்ணமூர்த்தி தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றபோதுதான் சேகரனுக்கு விஷயம் விளங்கிற்று. உள்ளே யிருந்து சுகுமாரனைத் தூக்கி வந்த கிருஷ்ணமூர்த்தி அவனைப் பார்த்து, "சுகு, நீ யாரிடம் இருக்கப் போகிறாய், கண்ணு! அப்பாவிடம் போகிறாயா!" என்று கேட்டதும் சுகுமாரன் தன் பிஞ்சு வாயால் "உன்னிடம்தான் மாமா, இருக்கப்போகிறேன்" என்றான்.

"அட போக்கிரி" என்று அவன் கன்னத்தை வேகத் தட்டிய சேகரன், கதவு இடுக்கு வழியாக லோக சுந்தரி வெளிப்பதைப் பார்த்து விட்டான். இத்தனை நாள் கோபமும் விநாடியில் மறைந்து விட்டது.

கதவு ஓரத்தில் நின்று கொண்டிருந்த லோக சுந்தரியின் கண்களில் ஆனந்தத்தாலோ என்னவோ நீர் ததும்பியது.

கண்ணீரைத் துடைத்த வண்ணம், "கிருஷ்ணமூர்த்தி, அத்திம்பேரை உள்ளே வரச் சொல்லுடா" என்றாள் லோக சுந்தரி.

"மாப்பிள்ளே, வாங்கோ! எல்லாம் விஷகடிவேளைச் சண்டைதான் தீர்ந்து போய்விட்டதே!" என்று வரவேற்றனர் சகோதரர்கள் இருவரும்.

குழந்தை சுகுமாரன் என்னவோ, ஏதோ புரிந்தது போல் கைகொட்டிச் சிரித்தது அந்த வீடெங்கும் எதிரொலித்து எல்லோர் முகத்திலும் கரை கடந்த களிப்பை வரவழைத்தது.

## குரங்கு ஆட்டம்!




தென் கொரியாவின் தலைவர் ஸிங்மன் ரீ அமெரிக்க சர்க்காரை மீறிக் காரியம் செய்யத் தொடங்கி யிருக்கிறார்.

# நீரிழிவு

## ஏழு நாட்களில்

## குணமாகும்!

எவ்வளவு நாட்பட்டதாயினும் மிகக் கடுமையாக இருப்பினும் நவீன ரஸாயன முறைத் தயாரிப்பான **வீனஸ் சார்ம் நீரழிவு** (DIABETES) வியாதியை முற்றிலும் குணமாக்கி விடும். அடங்காத பசி, மரண தாகம், அடிக்கடி சிறுநீர் பிரிதல், சொரி சிறங்கு ஆகிய இவைகளே இவ்வியாதியின் முக்கிய அறிகுறிகள். இதை கவனிப்பின்றி விட்டு விட்டால் கட்டி, பிளவை, கண் கோளாறு முதலிய உபத்திரவங்களில் முடியும். **வீனஸ் சார்ம்** ஆயிரக்கணக்கானவர்களை மரிப்பினின்றும் பிழைக்க உதவியுள்ளது. உபயோகித்த மறுதினமே நீரிலுள்ள சர்க்கரைச் சத்தைக் குறைத்து இதமளிக்கும். இரண்டு மூன்று தினங்களில் பாதி குணமடைந்ததாக நீங்களே உணர்வீர்கள். ஆகார நிபந்தனை கிடையாது. இலவசமான விபரங்கள் அடங்கிய ஆங்கில காட்லாகிற்கு எழுதவும்.

**50 மாத்திரைகள் கொண்ட பாட்டில் ரூ. 6-12-0**

(தபால் செலவு இலவசம்)

**வீனஸ் ரிஸர்ச் லாபரடரி (K.M.)**

**தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா**



**மலிவான அநேக சரக்குகள் அகப்பட்டாலும் ஜனங்கள் டி.எஸ்.ஆர் தைலங்களை அபேக்ஷிக்கிறார்கள்**



ஏனென்றால்

1. டி. எஸ். ஆர். தைலங்கள் தாவர எண்ணெய் அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை. சுத்தமான நல்லெண்ணெயே உபயோகப் படுத்தப்படுகிறது.

2. டி. எஸ். ஆர். தைலங்கள் மின்சாரத்திலும் இயக்கும் நவீன இயந்திரத்தில் காய்ச்சப்படுகின்றன.

3. டி. எஸ். ஆர். தைலங்கள் மார்க்கெட்டில் 1909 முதல் பிரசித்தியுடன் இருந்து வருகின்றன. டி. எஸ். ஆரின் அனுபவத்துக்கும், ஆராய்ச்சிக்கும் ஈடானது இல்லை.

4. கடைசியாக டி. எஸ். ஆர். தைலங்கள் முற்றிலும் இந்திய தயாரிப்பு. சம்பிரமான வாசனையும் குளிர்ச்சியும் அளிப்பதுமல்லாமல் அவைகளில் ஆரோக்கியத்திற் கேதுவான மூலிகை சத்துக்களும் சேர்க்குள்ளன. தினசரி உபயோகத்துக்கு இக்காட்டுக் டி. எஸ். ஆர். கம்பெனியார்தான் இந்தமாதிரி சரக்குகள் தயாரிக்கிறார்கள்.

- சந்தனாதி தைலம்
- அரைக்கீரைவிதை தைலம்
- ப்ருங்காமலகா தைலம்

**டி.எஸ்.ஆர்**

PAG-722-TAM

என்ற பெயரை கவனித்து வாங்கவும்
1909 லிருந்து பிரசித்தி பெற்றது.

**டி.எஸ்.ஆர் அண்டு கோ., கும்பகோணம்.**


சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
சுராஜ் ஏஜன்ஸீஸ்
37, ரானி அங்கார் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்
கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு ஸோல் ஏஜண்டு:
B. பாலபட்டாபி (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது)
கோயமுத்தூர்



அபாயகரமான
இன்புளுயன்ஸாவையும்
மார் வலியையும்
வெளியேற்றுங்கள்

டாக்டர்கள் இந்த அற்புதமான பெப்ஸை
சிபார்சு செய்கிறார்கள்

# PEPS



இருமல், ஜலதோஷம், குளிர், தொண்டைப்புண், இன்புளுயன்ஸா, சளி ஜுரம், மார்வலி சுவாசகோச நோய்கள் முதலியவற்றிற்கு உகந்தது. இன்புளுயன்ஸா நீங்கள் கருதுவதைவிட அதிக ஆபத்தாக முடியக்கூடிய நோய். தாமதம் செய்யாதீர்கள். உடனே பெப்ஸ் மாத்திரைகளை உட்கொள்ளுங்கள். நீங்கள் மூச்சு விடும்போது பெப்ஸ் மருந்துச் சத்துக்கள் உங்களது சுவாசக் குழாய்கள் வழியாகச் சுவாசகோசத்திற்குச் சென்று ஆபத்தை அளிக்கும் கிருமிகளை நாசம் செய்து விடும். பெப்ஸ் எரிச்சலையும் புண்ணையும் குணப்படுத்துகிறது. மூச்சு விடுவதை எளிதாக்குகிறது, சுவாசாசயத்தை குணப்படுத்தி பெப்ஸ் அதை வலுப்படுத்துகிறது. பெப்ஸ் அற்புதமான மருந்து.

**பெப்ஸ் தொண்டைப் புண், மார்வலி நோய் நிவாரண மாத்திரைகள்**


மதராஸிற்கு சோல் ஏஜண்டுகள் : தாதா & கம்பெனி, பார்க் டவுன் PPY 2

## உங்களுக்குகந்த சைகிள்கள்

மொத்த விலையிலும் தவணைகளில் செலுத்தும் சலுகையுடனும் புதிய சைக்கிள்களை வாங்குங்கள். யாவும் புத்தம்புதியது.

இந்தச் சலுகையை நழுவவிடாது நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். விலையின் 25 சத விதம் முன்னதாகவும் பாக்கியை ஐந்து மாதாந்திரத் தவணைகளாகவும் செலுத்தலாம்.

ஹிந்த் சைக்கிள் ரூ. 155/- இங்கிலீஷ் சைக்கிள் ரூ. 185/-
பிலிப்ஸ் ரூ. 230/- ஹெர்குலஸ் ரூ. 240/-
பி. எஸ். ஏ. ரூ. 255/- ராலே (பச்சை) ரூ. 365/-



உங்களுக்கு அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரும் முழு விலாஸமும் எழுதி நிபந்தனைகளுக் குட்பட்டு உடனேயே டெலிவரி எடுத்துக் கொள்ளுங்கள். புதிய டன்லப் டயர்கள், டியூப்கள், புதிய ஒரிஜினல் பார்ட்டுகள் எல்லாம் புத்தம் புதியவை என்பதற்கு உத்தரவாதம். உடனேயே ஆர்டர் செய்யுங்கள்.

**JUPITER TRADING CO.**
**P.BAG.16602.CALCUTTA-4**

# ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

குழந்தை ஒரு விலையுயர்ந்த வஸ்துவை விளையாட எடுத்துக் கொண்டால், அது கெட்டுப் போய்விடும் என்பதற்கு அறிகுறியாக "சரி அதற்குத் தலைவலி வந்து விட்டது" என்கிறோம். ஒருவன் ஒரு விஷயத்தில் சிக்கிக் கொண்டான் என்றால், "அவனுக்குத் தலைவலி ஆரம்பித்து விட்டது" என்கிறோம். இவ்வாறு சிறு விஷயத்திலாகட்டும், பெரிய விஷயத்திலாகட்டும் பாதகமாய் முடியும் போலிருந்தால் "தலைவலி வந்து விட்டது" என்று முன்னெச்சரிக்கையாகச் சொல்வது வழக்கமாய் விட்டது. இதை அறிந்துதான் சொல்கிறார்களோ அறியாமல்தான் இந்த வார்த்தையை உபயோகிக்கிறார்களோ சொல்லுவதற்கில்லை. ஆனால் உண்மையில் தலைவலியானது பின்னால் வரும் பல கேடுகளை உணர்த்தும் அறிகுறியே!

தலைவலிக்கும், வயிற்றுக்கும் மிக மிக நெருங்கிய சம்பந்தமுண்டு. இது என்ன! வயிறு எங்கிருக்கிறது! தலை எங்கிருக்கிறது! வயிற்றில் கோளாறு என்றால் தலை வலிப்பானேன்! இது என்ன! மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதைப் போலல்லவா இருக்கிறது! என்று சொல்லுவோம். ஆனால் உண்மை என்னவோ, வயிற்றுக்கும் தலைவலிக்கும் மிக மிக நெருங்கிய தொடர்புண்டு என்பதுதான். இந்த வயிற்றினால் வரும் கேடுகளெல்லாம், அதாவது நாம் சாப்பிடும் ஆகாரத்தினால்தான் நன்மையோ, தீமையோ விளைவதெல்லாம். இந்த உடல் பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டதானாலும், பிருத்வியாகிய நாம் உண்ணும் ஆகாரத்திலிருந்துதான் இவ்வுடலின் ஆரோக்கியம் அமையும். ஆகாரத்தை எவ்வளவு சீர்தூக்கி, இது உகந்ததா! அவசியமா! என்று பார்த்து அளவுடன் உண்கிறோமோ அவ்வளவுக்கும் ஆரோக்கியமாக வாழலாம். உணவு ஞானமின்றிக் கண்டதைக் கண்ட நேரத்தில் உண்கிறவர்களுக்கு முதலில் வயிற்றில்தான் கோளாறு ஆரம்பிக்கும். அதன் அறிகுறியாகத் தலைவலி ஆரம்பிக்கும். வயிற்றில் மாத்திரம் என்ன! பிறகு எங்கு கோளாறு ஏற்பட்டாலும் சகல அவயவங்களும் மூளையுடன் சம்பந்தப் பட்டிருப்பதால் முதலில் தலையைத்தான் வலிக்கும்.

சென்ற வாரத்தில் வெகு சாதாரணமான தலைவலிகளைப் பற்றித்தான் விவரிக்கப் பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் உபசாந்திகளுடன் சிரசாசனம் செய்து வந்தால் வெகு சுலபமாகப் போக்கடித்து விடலாம். தவிர, அவைகளெல்லாம் சீதோஷ்ண மாறுபாட்டினாலும் அவ்வப்போது ஏற்படும் ஆகாரப் பிழையினாலும் உண்டாவது. ஆனால் தலைவலிகளில் இன்னமும் கடினமானதும்பயங்கரமானதுமான தலைவலிகள் உண்டு.

மூளையில் கட்டி, சிலந்தி, க்ஷயம், புற்றுநோய், சதை வளர்ச்சி முதலியவைகளினால் தலைவலி உண்டாவதுண்டு. இதற்குத் தலைவலி என்பதற்குப் பதிலாக 'தலை வேதனை' என்று சொன்னால் பிசகாகாது. சிலருக்கு இக்குறையுள்ள இடத்தில் மட்டும் வலிக்கும். சிலருக்குத் தலை பூராவும் வலிக்கும். வலி பொறுக்க முடியாது. குத்தலுடன் வலிக்கும். கண் பார்வையும் மங்கும். மப்பாய்த் தென்படும். ஒரு பொருள் இரண்டாகக்கூடத் தோற்றம் அளிக்கும். இம்மாதிரி வலிகளுக்கு என்னதான் மருந்துகளை உபயோகித்தாலும் கேட்காது. சிரசாசனமும் இந்நிலையில் உதவி செய்ய முடியாது. ஆப்பரேஷன் தான் இதற்கு ஏற்றது. இதில் குணம் காணுவது அவரவர்களின் நோயின் தன்மையைப் பொறுத்தும், அதிர்ஷ்டத்தைப் பொறுத்தும் இருக்கிறது.

பலவிதமான ஜுரங்களுக்கு முன் உண்டாகும் தலைவலிக்கும் சிரசாசனம் உதவி செய்ய முடியாது. ஜுரமாய் இருக்கும் போதோ சிரசாசனம் செய்ய முடியாது. செய்யவும் கூடாது. பின் எப்படிப் போவது! வெள்ளம் வருவதற்கு முன் அணை போடுவது போல் இம்மாதிரி சங்கடங்கள் வருவதற்கு முன்பே தடுத்திருக்க வேண்டும். சிரசாசனமும் மற்ற ஆசனங்களும் செய்து வந்திருந்தால் இம்மாதிரி தலைவலிகளோ ஜுரமோ வந்தே இருக்காது. ஆனால் வந்ததற்கு வேறு என்ன செய்ய முடியும்! மருந்தினால் குணப்படுத்திக் கொண்டு பிறகு வராமல் இருக்க ஆசனம், ஆசார ஒழுக்கம் முதலியவைகளைக் கைக் கொள்ள வேண்டும்.

உடற்கூறின் மாறுபாட்டினால் தலைவலி உண்டாவதற்குச் சிரசாசனம் நன்கு துணை செய்யும். அத்துடன் கூட அந்த அவயவத்தையும் சீர்திருத்தும். உதாரணமாக குண்டிக்காயை எடுத்துக் கொள்வோம். அதன் வேலைகளைப் பற்றியும் முக்கியத்வத்தைப்பற்றியும் இதற்கு முன்பே விவரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு எந்த விதத்திலாவது கஷ்டம் உண்டாகி அதன் வேலைத் தடைபட்டால் ரத்தத்திலுள்ள வேண்டாத வஸ்துக்களைப் பிரிக்காமல் மறுபடியும் ரத்தத்துடனேயே இருதயத்துக்கு அனுப்பும். இருதயம் அதையே அடித்து உடல் பூராவுக்கும் அனுப்பும். அப்படி சுத்தப்படுத்தாமல் அனுப்பப்படும் ரத்தம் மூளைக்குச் சென்று மயக்கம், தலைவலி போன்றவைகளை உண்டாக்கும். அதற்குச் சிரசாசனம் செய்தால், குண்டிக்காய்க்குச் சக்தி ஏற்படுவதுடன், அசுத்தங்களைப் பிரிக்கும் சக்தியும் உண்டாக்கும். இம்மாதிரி இடங்கள் இரைப் பை, இருதயம், பித்தப் பை, கல்லீரல், மண்ணீரல் முதலிய அவயங்களில் உண்டாகும் மாறுபாட்டுக்கும் சிரசாசனம் தன் அற்புத சக்தியைப் பிட்யூட்டரியின் மூலம் அளிக்கிறது.

இரத்த அழுக்கத்தினாலும், தலைவலி உண்டாகும்; தலை பளுவாய் இருக்கும். அதற்குத் தற்காலிகமாக மருந்துகளைச் சாப்பிட்டுப் பிறகு இரத்த அழுக்கம் வராமல் இருப்பதற்கான ஆசனங்களைப் பயின்று வந்தால், தலை வலி ஒழியும்.

ஒற்றைத் தலைவலி. இது மூளையைச் சேர்ந்த ஒரு பாகமோ உடலைச் சேர்ந்த ஒரு பாகமோ பாதிப்பதால் உண்டாவது. இதற்குப் பல தைலங்கள், ஸ்நானங்கள் மருந்துகள் உண்டு. இவைகளை முதலில் உபயோகித்துக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை.





பட்டு:—போடா, ராமு! நீ எப்பொழுது பார்த்தாலும் 'என்னோடு சண்டை போடுகிறாயே! நம்ம இரண்டு பேருக்கும் கல்யாணம் ஆயிடுத்து என்று யாராவது பார்த்தால் நினைத்துக் கொள்வார்கள்!

ஆனால் மறுபடியும் வராமல் தடுக்கச் சிரசாசனம் உதவி செய்யும். சிலருக்கு விட்டு விட்டுத் தலை வலிக்கும். அப்படிப்பட்டவர்கள் தலைவலி இல்லாத சமயம் பார்த்துச் சிரசாசனம் செய்யலாம். ஆனால் அந்தச் சமயத்தில் வயிறு காலியாய் இருக்க வேண்டியது அவசியம்.

ஹிஸ்டமைன் என்ற தலைவலி ஒன்றிருக்கிறது. அது முறைபோட்டு வாரத்துக்கு ஒரு தடவையோ இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவையோ வரும். அதுவும் ஒற்றைத் தலைவலி போல வலிக்கும். அதையும் சிரசாசனம் குணமாக்கும்.

மூக்கின் மேல் பக்கம் ஆரம்பித்து, கண் புருவத்துக்கு மேல் முன் தலைப் பக்கம் வலிக்கும். அப்படி வலித்தால் கண்களை உபயோகித்துப் படிக்கவோ எழுதவோ முடியாது. அதற்குச் சிறிது கண் மூடிப் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டால் தலை வலி போய்விடும். சிரசாசனம் செய்து வருபவர்களுக்கு இம்மாதிரி தலைவலி வராது.

சிலருக்குப் பசியைத் தாங்கும் சக்தி யிருக்காது. கண்கள் வலிக்கும். தலையும் வலிக்கும். அவர்கள் உணவு உட்கொண்டதும் தலைவலி மாயமாய் மறைந்து விடும். இத்தனைக்கும் நரம்பின் சக்தி யின்மையே காரணம். சிரசாசனம் செய்து வந்தால் இந்தக் குறையும் மறைந்துவிடும். சிலருக்குக் கோப, தாப, வருத்தத்தின் காரணமாகவும் தலை வலிக்கும். உடனே உணர்ச்சி வசப்படுவதனால் இவை உண்டாகும். இதற்கு மனது, நரம்பு சக்தி குறைவே காரணம். இதற்கு மற்ற ஆசனங்களுடன் சிரசாசனம் சாந்தியாசனம், நாடி சுத்தி, தியானம் முதலியவைகளைச் செய்து வந்தால், குணமாகும். சிலருக்குக் கண்ணீர் வர அழுததும் தலை வலிக்கும். அதுவும் சிரசாசனத்தால் குணமாகும்.

தலைவலி யென்பது என்ன? அது எப்படியெல்லாம் உண்டாகும் என்பதை முதலில் தெரிந்து கொண்டால், அதைச் சிரசாசனத்தினால் குணமாக்க முடியுமா? மருந்தினால் குணமாக்க முடியுமா வென்பதை அறிந்து கொள்ளலாம். சாதாரணமாய் ஒரு இடத்தில் வலிக்க வேண்டுமானால் ஒன்று அந்த இடத்தில் எந்தக் காரணத்தினாலோ சரிவர ரத்தம் பரவாமல் இருக்க வேண்டும். அல்லது ரத்தம் சரிவர வராமல் இருக்க வேண்டும். அந்த இடத்தில் ரத்தம் தேங்க வேண்டும். இது பொது விதி. இப்படி எந்தப் பக்கத்தில் ஏற்பட்டாலும் முதலில் தலையைத்தான் வலிக்கும்.

அதற்குச் சிரசாசனம் செய்தால் மூளைக்கு நிறைய ரத்த போஷணை கிடைப்பதுடன், நரம்புகளுக்குச் சக்தியளிக்கும் பிட்யூடரி கோளமும் அதனால் பலமடைகிறது. பிறகு நரம்புச் சக்தி உண்டாகிறது. மற்றும் எல்லா அவயவங்களும் சரிவர வேலை செய்ய உதவுகிறது. பிறகு தலை வலிதான் எங்கிருந்து வரும்! எப்படி வரக்கூடும்!


அவசியமானவற்றுக்கு மருந்தைச் சாப்பிடத்தான் வேண்டும்; ஆப்பரேஷன் செய்துகொள்ளத்தான் வேண்டும். ஜுரத்துடன் இருக்கும்போது ஆசனம் செய்ய முடியுமா! தலை கீழாய்த்தான் நிற்க முடியுமா! கூடாது. ஆனால் மருந்தைச் சாப்பிடுவதையே வழக்கமாகக் கொள்ளாமல் மருந்தை மருந்தாக உபயோகிக்க வேண்டும்.

நாம் எந்த மருந்தைச் சாப்பிட்டாலும், அது முதலில் ஆகாரப்பைக்குச் சென்று பிறகு சிறு குடலுக்குச் செல்கிறது. அங்கு சிறு குடலின் சுவர் வழியாக மருந்து உறிஞ்சப்பட்டு ரத்தத்துடன் கலக்கின்றது. பிறகு ரத்தம் செல்லும் இடங்களுக்கெல்லாம் மருந்தும் செல்லுகின்றது. அப்படிச் செல்லும் போது ரத்தத்திலுள்ள மருந்தின் வேகத்தினால் நரம்புகள் கிளர்ச்சியுற்று ரத்த ஓட்டமில்லா இடத்தில் ரத்தமும், ரத்தம் தேங்கின இடத்தில் அதைக் கலைத்து அடித்துத் துரத்தவும் செய்து ரத்தோட்டம் சமன் செய்யப் படுகிறது. அப்பொழுது நமக்கு வலி குறைகிறது. நமக்கு ஒரு விடுதலை கிடைத்தாற்போல் ஆகிறது.

ஆனால் அத்துடன் நாம் உணவைச் சீர்படுத்தி ஒழுங்கான தேகப்பயிற்சிகளைச் செய்தால் மறுபடி இம்மாதிரி வலிகள், உபாதைகள் ஏற்படாது. தலைவலி வரும்போதெல்லாம் மருந்தையே உட்கொண்டு வந்தால், அது இருதயத்தையும் மூத்திரப் பிரித்தியையும் அநேகமாய்க் கெடுத்துவிடும். எவ்வளவு அதிகமாய் மருந்தை உபயோகிக்கிறோமோ அவ்வளவுக்கும் இருதயம் மூத்திரக்காய் ஆகிய இரண்டு அவயவங்களும் தாக்கப்படும்.

ரத்தத்தில் கலந்த மருந்து எப்பொழுதும் ரத்தத்துடன் ஒன்றிவிடாது. அதன் வேலை முடிந்ததும் பிரிந்து விடும். சரீரம் பூராவுக்கும் ரத்தத்துடன் கலந்து சென்று வரும் மருந்தானது மூத்திரக்காய்களில் வடிக்கப்பட்டு விடுகிறது. ரத்தத்திலுள்ள வேண்டாத வஸ்துவைப் பிரிக்கும் பெரிய வேலையுடன் இவ்விஷ மருந்தையும் பிரிக்கும்படியான அதிக வேலை மூத்திரக் காய்களுக்கு ஏற்படுகிறது. அளவில் மிகச் சிறியதும் ஆனால் நாம் ஆரோக்கியமாய் வாழ அழுக்குகளை அகற்றும் குண்டிக்காய்களுக்கு, நாம் அளவு மீறின வேலையை மருந்தை அருந்துவதனால் கொடுத்தவர்களாகிறோம். அவை ஆரோக்கியமாய் இருக்கும் வரை தன்னிடம் வரும் எந்த வேண்டாதவையும் பாரபட்சமின்றிப் பிரித்து மறுபடியும் இருதயத்துக்கு அனுப்புகிறது. ஆனால் இவ்வாறு அதிக வேலை செய்து களைத்து விட்டால் அசுத்தம் நீக்கப்படாமலேயே இருதயத்துக்கு ரத்தம்போகும். அப்படி ரத்தம் சுத்தியாகாமற் போனால் இருதயம் என்னவாகும்? அதுவும் இவ்விஷ வஸ்துவினால் தாக்கப்படுகிறது. மூத்திரக் காய்களும் இவ்விஷ வஸ்துவினால் தாக்கப்படுகிறது. ஆயுள் பூராவுக்கும், நாம் உயிருடன் இருக்கும் வரைக்கும் வேலை செய்வதற்காக ஏற்பட்ட இருதயமும், மூத்திரக்காய்களும் சீக்கிரம் பழுதடைந்து ஆயுளையும் குறைத்து விடுகின்றன. எத்தனையோ பேர்கள் அகாலத்தில் மரணமாவதற்கு இவைகளே காரணம். ஆசனம் செய்து வந்தால் மருந்தையே உபயோகிக்க வேண்டியதில்லை. (தொடரும்)

# B. I. S. N. கம்பெனி லிமிடெட்



# S. S. "ரஜுலா"

**சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்**

| | | | |
|---|---|---|---|
| சென்னையிலிருந்து | 11 ஜூலை 1952<br>5 ஆகஸ்டு 1952<br>30 ஆகஸ்டு 1952 | நாகப்பட்டினத்திலிருந்து | 12 ஜூலை 1952<br>6 ஆகஸ்டு 1952<br>31 ஆகஸ்டு 1952 |

தேதிகளில் மேற்கண்ட கப்பல் புறப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது

பர்த் வசதியற்ற டிக்கெட்டுகள் சாப்பாட்டுடனே அல்லது சாப்பாடு இன்றியோ வாங்கிக்கொள்ளலாம்

குடியேறுவோர் பாதுகாப்பு அதிகாரி (புரொடெக்டர் ஆப் எமிக்ரேண்ட்ஸ்) யிடமிருந்து "ஆட்சேபணையில்லை" என்ற அத்தாட்சி சர்ட்டிபிகேட் உடையவருக்குத்தான் குறிப்பிட்டு விரும்பும் பிரயாணத்திற்கு பர்த் வசதியற்ற டிக்கெட்டுகள் வழங்கப்படும்.

*பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூருக்கு கார்கோ சாமான்களை நேரடியாக ஏற்றிச் செல்லவும், பாங்காக், ஹாங்காங், ஜப்பான் மற்றும் தூர கிழக்குத்திசையிலுள்ள இதர ஊர்களுக்குச் சிங்கப்பூரில் கப்பல் மாற்றி அனுப்பும்படியும் ஏற்றுக் கொள்ளப்படும்*

இதர விவரங்களுக்குத் தயவுசெய்து விண்ணப்பிக்கவும்:

| | |
|---|---|
| பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்<br>7, அரமனைக்கார தெரு, மதராஸ் | மதுரா கம்பெனி லிமிடெட்<br>முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம் |

# பன்னிரண்டாவது அகில இந்திய காதி, சுதேசி, கைத்தொழில் பொருட்காட்சி, சேலம்

**3-8-1952 முதல் 24-8-1952 வரை**

1. பொருட்காட்சி சேலம் நகரின் மத்தியிலுள்ள விஸ்தாரமான போஸ் மைதானத்தில் நடைபெறும். ஆண்டுதோறும் நடைபெறும் ஸ்ரீ மாரியம்மன் திருவிழாவின்போது பொருட்காட்சி நடைபெறுவதால் சுற்றியுள்ள தாலுக்காக்களிலிருந்து ஏராளமான ஜனத்திரள் கூடுகிறது.
2. பஸ் ஸ்டாண்டு, போஸ்ட் ஆபீஸ், பாங்குகள், சினிமா தியேட்டர்கள் ஹோட்டல்கள் முதலியன அருகிலேயே இருக்கின்றன.
3. சங்கீதக் கச்சேரிகளும், மற்றும் மனதைக் கவரும் அனேக வித வேடிக்கை விநோதங்களும் ஏற்பாடு செய்யப்படும்.

**விவரங்களுக்குக் காரியதரிசிக்கு உடனே எழுதவும்.**

கமிஷனர் & காரியதரிசி
எக்சிபிஷன் கமிட்டி, சேலம்

# காதல் பாதை

## கே. எஸ். எஸ். ராகவன்

என் நண்பன் சந்திரனைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா! பார்த்தீர்களானால், "இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா!" என்றுதான் சொல்லுவீர்கள். ஆனால் எனக்கும் அவன் தந்தை சூர்யநாராயணய்யருக்கும் தெரியும் அவனால் படும் அவஸ்தை. "நான் சன்னியாஸம் வாங்கிக் கொள்ளப் போகிறேன்" என்று அடிக்கடி அவன் அப்பா சொல்லுவதற்கு அவன்தான் காரணம் என்பது என் தீவிர நம்பிக்கை. சந்திரனோ, அவன் சிறிய தாயார்தான் தந்தையின் விரக்திக்குக் காரணம் என்று சாதிக்கிறான்! சந்திரனுடைய தகப்பனருக்கும் அவன் சித்திக்கும் எவ்வளவோ விஷயங்களில் மன வேற்றுமை இருந்தாலும், ஒன்றில் மட்டும் அவர்கள் ஒன்றுபட்டிருந்தார்கள். அது சந்திரன் கந்த "உதவாக்கரை" என்பதில் தான்! பலவிதத்திலும் அவர்கள் அவனைத் திருத்த முயன்று பார்த்தார்கள்; ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் சந்திரன் வீட்டை விட்டு வெளியேறும் வரையில் வந்து விட்டது.

சந்திரன் நல்ல பையன்தான் — இந்த உலகத்தில் காரிமணிகள் மட்டும் இல்லாமலிருந்தால். "காதல் ஹிருதயம்" என்று சொல்கிறார்களே, அதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் சந்திரனோடு பழகிய பிறகு அது இப்படித்தான் இருக்குமோ என்று தோன்றுகிறது. சந்திரன் காதல் கொண்ட பெண்களைப் பற்றிய கணக்கு என்னிடம் இல்லை; வைத்துக் கொண்டிருந்தாலும் அதை எழுதுவதற்கு இந்த இதழ் முழுவதும் போதாது. முன் காலத்து ராஜகுமாரிகள் எல்லோரும் கந்த அசடுகள் என்று தோன்றுகிறது. யாராவது தங்களை உற்று நோக்கி விட்டால், அவர்கள் காதல் நோய்வாய்ப்பட்டு, குரங்குகள், கிளிகள், கொக்குகள்—ஏன் யானைகளோடு கூட பிதற்ற ஆரம்பித்து, தூது அனுப்பிக் கொண்டிருந்தார்கள். நல்ல வேளையாக இந்தக் காலத்துக் காலேஜ் பெண்கள் புத்திசாலிகள். சந்திரன் எவ்வளவுதான் மனம் உருகிக் காதல் பார்வை பார்த்தாலும் அவர்கள் கல்நெஞ்சம் கரைவதில்லை. சிலர் கைகொட்டிச் சிரிப்பார்கள்; மற்றும் சிலர் பிரின்ஸ்பாலிடம் சொல்வார்கள்; ஓரிரு துணிச்சல் பெண்மணிகளோ, "கூச்சப்படாமல் பார்ப்பதற்குச் சௌகரியமாயிருக்கும்" என்று கறுப்புக் கண்ணாடி அனுப்புவார்கள்! ஆனால் சந்திரன் மட்டும் என்னவோ காதல் பாதையிலிருந்து வழுவுவதில்லை. "அவன் எக்கேடு கெட்டால் உனக்கு என்ன!" என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் இந்தக் காதல் நாடகங்களால் பாதிக்கப்படுவது அடியேன்தான்.

* * *

ஒரு நாள் சாயங்கிரம் ஐந்து மணியிருக்கும். காரியாலயத்தை விட்டுக் கிளம்பும் சமயம். டெலிபோன் மணி அடித்தது. "யாரது பாலுவா! நான் ஐந்தரை மணிக்கு உன் அறைக்கு வருகிறேன். எங்கும் தொலைந்து விடாதே!" என்று சந்திரன் அன்போடு சொன்னான். "ஏழு மணி வரையில் வேலை இருக்கிறது. ஆபீஸை விட்டு வந்தால் வேலையே போய் விடும்" என்று காரியாகக் கத்தினேன். ஆனால் கேட்பதற்கு அந்தப் பக்கத்தில் ஆள் இருந்தால்தானே! அவன்தான் இல்லையே!

நான் நினைத்தது வீண் போகவில்லை. நான் போய்ச் சேருவதற்கு முன்னாலேயே சந்திரன் பிரசன்னமாக இருந்தான். தனியாக இல்லை. தன் காதலியுடன் இருந்தான். அந்த பெண்ணிடம் சந்திரன் என்னத்தைக் கண்டான் என்பது எனக்கு விளங்கவில்லை.

"மிஸ் ஜோன்ஸ்! இதுதான் என் அந்யந்த நண்பன், பாலு! நம் கல்யாணத்துக்கு இவன் தான் 'போஸ்ட்மேன்'" என்றான் சந்திரன்.

மிஸ் ஜோன்ஸுக்கு அவசரமாக வேறு எங்கேயோ வேலை இருந்ததால் ஒரு புன்னகைப் பூத்து விட்டுச் சென்றுவிட்டாள். இந்த சமயத்தில் சந்திரனிடம் என் பையிலிருந்து இருபது ரூபாய் போய் விட்டது.

அவன் தன் காதலி ஜோன்ஸைப் பஸ்ஸில் ஏற்றி விட்டுத் திரும்பி வந்தான்.

"அடடா, பெண்ணாய்ப் பிறந்தால் மிஸ் ஜோன்ஸ் மாதிரிப் பிறக்க வேண்டும்! சிலருக்கு அழகிருந்தால் குணமிருக்காது, குணமிருந்தால் அழகு இருக்காது. தப்பித் தவறி இரண்டும் சேர்ந்திருந்தாலும் பிறரோடு பழகத் தெரியாது. என்ன பாலு! உனக்குப் பொறாமையாக இருக்கிறதா, இல்லையா!" என்று அவன் அடுக்கிக் கொண்டே போனபோது, உண்மையில் அவன் மீது எனக்குப் பரிதாபம்தான் இருந்தது.

சந்திரன் என்னை அத்துடன் விடவில்லை.

"பாலு! உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்! மிஸ் ஜோன்ஸிற்குப் பணம், பெருமை இதிலெல்லாம் கொஞ்சம் கூட மனமில்லை. ஆனால் அவள் அம்மா ஒரு கட்டுப்பெட்டி. அவளிடம் யாரோ அப்பாவின் சொத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 'பத்து லக்ஷம் பாங்கில் இருக்கிறதாமே!' என்று கேட்டாள். 'அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது!' என்று ஆச்சர்யப்பட்டேன். 'எல்லாம் எனக்குத் தெரியும். போன வாரம்கூட ஏதோ தர்மத்துக்கு ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்தார் என்று பத்திரிகையில் வந்திருக்கிறதே! அவரை நான் பார்க்க வேண்




டும். நீங்கள் இரண்டு பேரும் உங்களுக்குள் நிச்சயம் செய்து கொண்டு விட்டீர்கள் என்பது உண்மைதான். என்ன இருந்தாலும் உங்கள் அப்பாவிடமும் ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா!' என்று எச்சரித்தாள். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். 'அப்பா நான் கீறின கோட்டைத் தாண்ட மாட்டார். இம்மாதிரி விஷயங்களிலெல்லாம் மிகவும் விசாலமான மனப்பான்மை உடையவர்' என்றெல்லாம் சொல்லியாகி விட்டது. இருந்தாலும் ஒரு தடவை பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறாள். நீதான் ஒத்தாசை செய்ய வேண்டும்!" என்றான்.

"சந்திரா! நான் உயிரோடு இருப்பதில் உனக்கு இஷ்டம் இல்லையா! உன் அப்பா இரண்டு ராஜ பாளையம் நாய்களை நமக்காகவே வாங்கி வைத்திருக்கிறார் என்பதை மறந்து விட்டாயோ! போனால் திரும்ப முடியாது" என்று மறுத்தேன்.

"அட அசடே! எந்த மூடனாவது உன்னை இது சம்பந்தமாக அப்பாவைப் பார்க்க அனுப்புவானா! ராம, ராமா! இந்த விஷயம் அவர் காதில் கூடப் படக் கூடாது. நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், உன் மாமாவிடம் ஒரு வார்த்தை சொல்லி அவரை என் அப்பா மாதிரி தயவு செய்து ஒரே ஒருநாள்......"

"சந்திரா! நீ என்ன வேண்டுமானாலும் செய்! ஆனால் மாமாவைப் பற்றிய பேச்சையே எடுக்காதே. போன வருஷம் தீபாவளி சமயத்தில் நடந்தது ஞாபகம் இல்லையா!...அந்த மனுஷனுக்கும் தான் புத்தி கிடையாது. ஏதடா, இவ்வளவு வயதாகி விட்டதே, பேரன் பேத்தி பிறக்கும் நாளாகி விட்டதே. ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மாமியின் தலைமாட்டில் வந்து நாய்மாதிரி குலைக்கலாமா என்று தெரிய வேண்டாமா! குலைத்தது தான் குலைத்தாரே, நான்தான் அம்மாதிரி செய்யச் சொன்னேன் என்று சாதிக்க வேண்டுமா!



அன்றைக்குப் பயந்து கொண்டவள் மாமி இன்றைக்கும் நிலைக்கு வரவில்லை. வேண்டாமப்பா, மாமா பேச்சை விட்டு விடு......"

"உன்னை நம்பி வந்தேன். இப்படிக் கைவிட்டு விட்டாயே!" என்று பரிதாபமாகச் சொல்லிக் கொண்டே சந்திரன் போனான்.

* * *

மறு நாள் காரியாலயத்துக்குள் நுழையவில்லை. சந்திரன் டெலிபோனில் கூப்பிட்டு, "பாலு, நீ ஒன்றும் உன் மாமாவைப் பார்க்க வேண்டாம். நேற்று நான் அவரைப் பஸ்ஸில் சந்தித்தேன். சொல்ல வேண்டியதைச் சொல்லியாகி விட்டது. நீ என்னவோ பயப்பட்டாயே! எவ்வளவு உற்சாகத்துடன் அவர் ஒப்புக் கொண்டார் தெரியுமா! சாயந்திரம் உன் அறைக்கு வருவார். அப்பா, நான் எல்லாரும் இருக்கும் குடும்ப போட்டோ மாட்டி இருக்கிறதே, அதை அவருக்குக் காண்பி. அப்பா மாதிரி உடை உடுத்திக் கொள்ள உபயோகமாயிருக்கும்" என்றான்.

அதற்குப் பிறகு எனக்கு எவ்வாறு வேலை ஓடும்! ஒருவாறு காரியங்களை முடித்துவிட்டு சாயந்திரம் வீட்டுக்குப் போனேன். சாட்சாத் மாமா காத்துக் கொண்டிருந்தார். சந்திரன் மேல் நான் கொண்டிருந்த கோபத்தையெல்லாம் அவர் மேல் திருப்பி, "இந்த வயது காலத்தில் உமக்கு ஏன் இந்த விஷமமெல்லாம்!" என்றேன்.

மாமாவா அசைபவர்! ஆனால் அவர் பதில் என்னைத் திடுக்கிடச் செய்தது. "பாலு, ஏதாவது ஒரு நல்ல காரியத்தைச் செய்ய உத்தேசித்தால் நீ அதற்குக் குறுக்கே நிற்பது வழக்கமாகி விட்டது" என்று கத்த ஆரம்பித்து விட்டார்.

"நாய் மாதிரி குலைப்பது நல்ல காரியமோ!"

"ஆட்சேபனை என்ன! அன்று நான் அப்படிக் குலைத்திருக்கா விட்டால் என்ன நடந்திருக்கும் தெரியுமா! அவள் அத்தை பெண் இருக்கிறாளே, அவள் தான் அந்த அசட்டு அம்புஜு, அவளை உன் தலையில் கட்டியிருப்பாள். ஏதோ, நான் சிரமத்தைப் பார்க்காமல் நாய் வேஷம் போட்டுக் குலைக்கவும் குலைத்து, நீதான் அப்படிச் சொல்லச் சொன்னது என்று சாதித்ததால்தான் நீ தப்பினாய். போகட்டும். சந்திரன் விஷயத்திலும் நான் நல்லதைத்தானே செய்யப் போகிறேன்! அந்த மாயக்காரி அவனை ஏதோ சொக்குப் பொடி போட்டு மயக்கி விட்டாள். பையன் அகப்பட்டுக் கொண்டு விழித்தான். இப்போது தான் நல்ல புத்தி வந்திருக்கிறது. 'எப்படியாவது என்னைக் காப்பாற்றுங்கள்' என்று கெஞ்சினான். நானும் சரியென்று சொன்னேன். நீயும் நானும் சரியாக ஐந்தரை மணிக்கு 'காஞ்சினி' ஹோட்டல் வாசலில் சந்திக்க வேண்டியது. கெட்டிக்காரப் பிள்ளை சந்திரன். அப்பாவை வீட்டில் பார்ப்பதை விட, ஹோட்டலில் பார்ப்பதுதான் சௌகர்யம் என்று அவர்களிடம் சொல்லி விட்டானாம். சந்திரன் அம்மாளையும் பெண்ணையும் அழைத்துக் கொண்டு வருவான். நீ கவனி. நான் பார்க்கிற பார்வையிலேயே அந்தப் பெண்ணும் அவள் அம்மாவும் பயந்து ஓடுகிறார்களா, இல்லையா என்று."

மாமாவிடம் விவாதித்துப் பிரயோசனமில்லை என்று அப்படியே விட்டு விட்டேன். மறு நாள் ஹோட்டல் வாசலில் சந்தித்த போது திட்டம் போட்டது போல் தான் நடக்கும் என்று தோன்றிற்று. பெண்ணும் அம்மாவும் வந்தார்கள். மாமாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் பிரசித்தி பெற்ற பார்வை எவ்வளவு

சிக்கனம்
திறமை
நீடித்த உழைப்பு
நல்ல அமைப்பு
இவையனைத்தும்
பொருந்தியவை
"போனிக்ஸ்"
விசிறிகளே!









போனிக்ஸ்
(A.C. & D.C.) விசிறிகள்
ஸோல் ஏஜண்டுகள்
R.M.S. & CO. LTD.
BROADWAY MADRAS-1

கிளை ஆபீஸ்:
5, மேல கோபுர வீதி,
மதுரை

னாம் காரியத்தைச் சாதிக்கும் என்பதில் என்னுடைய சந்தேகம் தாயாரைப் பார்த்தவுடன் ஊர்ஜிதமாகி விட்டது. மாமாவைப் பார்த்துக் கைகுலுக்கி, "அடாடா! நான் உங்களை எவ்வளவோ காலமாகப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். உதார குணம் என்றால் உங்களைப் போலல்லவா இருக்க வேண்டும்! ஏதோ, என் அதிர்ஷ்டம், என் பெண்ணின் மூலமாக உங்கள் பரிச்சயம் ஏற்பட்டது!" என்று அவன் குழைந்து, குழைந்து பேச ஆரம்பித்தவுடன், மாமாவும் அனலின் முன் மெழுகு மாதிரி உருக ஆரம்பித்து விட்டார். "என் பிள்ளை அதிர்ஷ்டசாலிதான். உங்கள் பெண் மாதிரி அவனுக்குக் கிடைக்க வேண்டுமே!" என்று சொல்லி, அந்தப் பெண்ணுக்கு ஒரு "ஷொட்டு"க் கொடுத்தபோது நான் மயக்கம் போட்டுக் கீழே விழ இருந்தேன்!

எல்லோருமாக உள்ளே போனோம். எனக்கு ஒன்றுமே சாப்பிடப் பிடிக்கவில்லை. மாமாவின் சரள சம்பாஷணை காதில் காரசம் போல் விழுந்து கொண்டிருந்தது. சந்திரன் பக்கம் பார்த்தேன். அவன் அசட்டுச் சிரிப்பிலிருந்து அவனும் அதை ரசிக்கவில்லை என்பது தெரிந்தது.

எல்லோரும் எழுந்திருக்கும் சமயம். எங்கள் பக்கத்து மேஜையில் பரிமாறிக்கொண் டிருந்தவன், அப்படியே கப் நிறைய காப்பி இருந்தது என்பதையும் கவனிக்காமல் தட்டைத் தடா ரென்று கீழே போட்டவுடன், எல்லாரும் அந்தப் பக்கம் திரும்பினோம்.

இதென்ன, அவனுக்குப் பைத்தியமா பிடித்து விட்டது! திடீரென்று ஏன் இப்படி...

"லலி, என் பிரிய லலி! உன்னைக் காணாமல் நான் எவ்வளவு நாளாகத் தூங்கவில்லை தெரியுமா! அந்த ஹோட்டலிலிருந்து நீ வேலையை விட்டு விட்டுப் பம்பாய்க்கு வந்த பிறகு எனக்குக் கோவாவே பிடிக்க வில்லை. உன்னைத் தேடிக் கொண்டு நானும் வந்து விட்டேன். எவ்வளவு நாளாகத் தேடி அலைந்து கொண்டிருக்கிறேன் தெரியுமா! லலி, என்ன இருந்தாலும் இப்படி என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் வரலாமா!" என்று சொல்லிக் கொண்டே ஆவேசம் வந்தவன்போல் மிஸ் ஜோன்ஸின் அருகில் நெருங்கினான். மிஸ் ஜோன்ஸையும் அவள் அம்மாவையும் பார்த்தேன். முகத்தில் ஈ ஆடவில்லை.

அப்போதுதான் மாமாவிற்கு உயிர் வந்தது. "இது என்ன! சந்திரா! போயும் போயும் இவர்கள் சிநேகம்தானா உனக்குக் கிடைத்தது!" என்று கம்பீரமாகச் சொல்லிவிட்டு 'விர்'ரென்று எழுந்து போய் விட்டார்.

காரியம் விபரீதமாகப் போவதற்குள் மிஸ் ஜோன்ஸும் அவள் அம்மாவும் ஹோட்டலை விட்டு கடையைக் கட்டி விட்டார்கள்.

"சந்திரா! தெய்வாதீனமாகத் தப்பினாய்!" என்று அவன் முதுகில் தட்டப் போனேன்.

சந்திரன் கூடமாகச் சிரித்தான்.

"பாலு! உன் பையில் எவ்வளவு பணம் இருக்கிறது! அந்த சர்வருக்குப் பத்து ரூபாய்தான் கொடுப்பதாகச் சொல்லி யிருந்தேன். ஆனால் அந்தத் தட்டை அவ்வளவு தத்ரூபமாகப் போட்டானே, அதற்கே ஒரு ஐந்து ரூபாய் கொடுக்க வேண்டும்!" என்று சொல்லி, என் பையிலிருந்த பதினைந்து ரூபாயையும் வாங்கிக் கொண்டான்.

இப்போது தெரிகிறதா. சந்திரனைப் பற்றி நான் ஏன் புகார் செய்கிறேன் என்று!

# நீ தெய்வம்

எஸ். வி. நாதன்

"அம்மாவுக்கு அபாயம். உங்களைக் காண விரும்புகிறேன். உடனே புறப்படவும். ரகு"

தந்தியைக் கண்டதும் அட்வகேட் அப்புசாமியின் உள்ளத்தில் ஏற்பட்ட வெறுப்பை அவன் முகம் பிரதிபலித்தது.

"இந்தத் துராத்மாவை நான் ஏன் பார்க்கப் போகணும்!" என்று அவன் மனம் எண்ணியது. ஆயினும் அந்த எண்ணத்தை அவனுடைய நல்லுணர்ச்சி அக்கணமே அகற்றிவிட்டது. 'மரணப் படுக்கையில் கிடக்கும் அவளிடம் என்ன வர்மம் வேண்டிக் கிடக்கிறது! கடையர்கள் அல்லவா கடைசி வரை விரோதம் பாராட்டுவார்கள்! நான் அவள் இறுதி விருப்பத்தை நிறைவேற்றத்தான் வேண்டும்' என்று எண்ணினான் அப்புசாமி.

தன் மாற்றாந் தாயைக் காணுவதற்காக அன்றிரவு திருவனந்தபுரம் பாஸ்ட் பாஸஞ்சரில் கும்பகோணத்துக்குப் புறப்பட்டான். ரயிலின் வேகத்தோடு போட்டி யிட்டுக்கொண்டு அவன் மனம் கடந்த காலப் பாதையில் பிரயாணம் செய்தது.

* * *

அப்புசாமிக்கு ஐந்து வயது. ஓர் சிறுவனுக்கு நேரக்கூடிய துர்ப்பாக்கியங்களில் மிகப் பெரிது—கொடியது—அவனுக்கு வாய்த்துவிட்டது. அவன் அன்னை இவ்வுலகை நீத்து விட்டாள்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை அவன் தந்தை எங்கோ வெளியூர் சென்றார். மறு நாள் மாலை ஒரு பெண்ணைத் தம்முடன் அழைத்துக்கொண்டு வந்தார். அடுத்த வீட்டு முதிர்ந்த சுமங்கலி அப் பெண்ணுக்கு ஆலத்தி எடுத்தாள். அப் பெண்ணைப் பார்த்து மிரண்டு விழித்த அப்புவிடம் "என்னடா அப்பு! பயப்படுகிறாய்! இனிமேல் இவள்தான் உனக்கு அம்மா!" என்று விளக்கினாள் அடுத்த வீட்டு அம்மாள்.

அம்மாவா! இவளா! அவள் அப்புவைப் பார்த்த முதல் பார்வையே கடுமை நிறைந்ததல்லவா காணப் பட்டது. அன்பின் ரேகை ஒன்றுகூட அதிலில்லையே! அவன் தாயார் அவனைப் பார்க்கும் பார்வை இப்படியா இருந்தது! கருணையும் கனிவும் பாசமும், பரிவும், குழைமையும் குதூகலமும் நிறைந்து அமுத கிரணங்களெனப் பாய்ந்து அவனைப் பரவசமாக்கிப் புளகாங்கிதம் அடைய யல்லவோ செய்தது! அவன் சொந்தத் தாயின் கருணை நோக்கிற்கும் இந்த அவன் தந்தை எங்கிருந்தோ அழைத்துக் கொண்டு வந்திருக்கும்—'இரவல் அம்மா'வின் உணர்ச்சியற்ற—தாய்மை யுணர்ச்சியை இம்மியளவும் பிரதிபலிக்காத—கடும் நோக்குக்கும் எவ்வளவு வித்தியாசம்! அந்தப் பெண்ணை அம்மாவென்று கருத அப்புசாமியின் உள்ளம் தயாரா யில்லை. அவன் சித்தி ராஜேஸ்வரி முதன் முதலாக அவ்வீட்டில் அடிவைத்த அன்றைக்கே அப்புசாமியின் பிஞ்சு மனத்தில் அவளைப் பற்றித் தாழ்வான அபிப்பிராயம் உண்டாகி விட்டது. அவளிடம் தாயன்பை எதிர்பார்க்க முடியாது. அதற்கு மாறாக இன்னல்தான் அனுபவிக்கப் போகிறோம் என்பதை அவளுடைய முதற் பார்வையே சிறுவன் அப்புவுக்கு உணர்த்தி விட்டது.

அவன் நினைத்தது தவறாகவில்லை. வந்த சில தினங்களிலேயே அப்புசாமியை ஆட்டி வைத்து வதைக்க ஆரம்பித்து விட்டாள் ராஜேஸ்வரி. யாதொரு காரணமுமின்றி அப் பாலகனைப் பல விதங்களிலும் கொடுமை செய்து குடம்குடமாகக் கண்ணீர் வடிக்கச் செய்தாள். அப்புசாமியின் 'யானைப் பசியை'ப் பற்றி வந்தவர்கள், போனவர்களிடமெல்லாம் புகார் செய்தாள். அவன் வயிற்றில் பெருச்சாளி இருக்கிறதோ என்று சந்தேகித்தாள்! வசைமாரி பொழிந்தாள். ஆனால் உண்மையில் ஒரு சிறு பாலகனுக்கு வேண்டிய குறைந்த பட்ச உணவைக் கூட அவனுக்கு அவள் அளிப்பதில்லை! வசவுகளையும் அடிகளையும், உதைகளையும் மாத்திரம் வழங்கி வந்தாள்.

அப்புவின் தந்தை ஜகன்னாதன் தன் பையன் மாற்றாந் தாயிடம் பட்ட சித்திரவதையெல்லாம் நன்கு அறிவா ரெனினும் கவனிக்காததுபோல் பாசாங்கு செய்தார். இளம் மனைவியின் சௌந்தர்ய போதையில் மயங்கி மதியை இழந்திருந்த அவர் அவளுக்கு எதிராக எப்படிப் பேசமுடியும்! அவளை எப்படிக் கண்டிக்க முடியும்!

இதற்கிடையில் ராஜேச்வரிக்கு இரண்டு புதல்வர்களும் பிறந்தார்கள். அதன் பிறகு அப்புவின் மீதிருந்த அவளுடைய வெறுப்பு புயல்போல் உருவெடுத்துப் பைசாச நர்த்தனம் புரிய ஆரம்பித்தது. அவளுடைய இரு பிள்ளைகள் மாத்திரம் பங்கு போட்டுக் கொள்ள வேண்டிய ஜகன்னாதனின் சொத்து, அப்பு ஒருவன் உயிரோடிருப்பதால் மூன்று பங்காகவல்லவா ஆகிவிடும்! அச் சனியன் செத்தொழியாதா என்று பிரார்த்தனைகூடச் செய்தாள் அந்தப் புண்ணியவதி!

இரண்டு சம்பவங்களை இன்று நினைத்தாலும் அப்புவின் உள்ளம் பதறும், உடல் நடுங்கும். எங்கோ போய் விளையாடிவிட்டு ஒரு நாள் மாலை அவன் திரும்பி வீட்டுக்கு வரும்போது இருட்டி விட்டது. 'தண்ணீர் மொண்டு நிரப்பாமல் விளையாட்டென்ன கேடு, சனியனே! சமையலுக்கு நேரமாகி விட்டது! ஒரு சொட்டு ஜலம் கிடையாது. உன் வேலையை யெல்லாம் யார் செய்வது! சற்றுப் போனால் வயிற்றைத் தீட்டிக் கொண்டு இலை முன் உட்கார்ந்து விடுவாயே! அதற்கு மட்டும் நன்றாய்த் தெரியும்!' என்று கர்ஜனை புரிந்து கைகள் ஓயுமட்டும் அவனைப் புடைத்து — அவன் சமாதானம் கூறக்கூட சந்தர்ப்பமளிக்காமல் மேலும் மேலும் அடித்து அன்றிரவு பட்டினியும் போட்டு விட்டாள். இரவு முழுதும் பசியினாலும் சிற்றன்னையின் மர்த்தனத்தின் விளைவான உடல் வலியினாலும் அவன் அனுபவித்த துன்பமும் வேதனையும் சொல்லத்தரமன்று. இப் பார்த உலகில் தன் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் சொல்லக் கூடியவர் ஒருவருமில்லையே யென அவன் விம்மிய விம்மலில், நெஞ்சு வெடித்து விடாதது அதிசயம்தான்!

இன்னொரு சம்பவம். அவனுக்கு விமோசன மளித்து வாழ்க்கையின் போக்கையே மாற்றியமைத்து விட்ட நிகழ்ச்சி. மூன்றாவது வீட்டு முத்துலக்ஷ்மியிடமிருந்து சிற்றன்னையின் கட்டளைப்படி ஒரு சேர் பால் வாங்கிக்கொண்டு வந்த அப்பு, வெறி நாய் ஒன்று அவனைப் பார்த்துக் கோரமாகக் குரைக்கவே, அதனிடமிருந்து தப்பும் பொருட்டு வீட்டை நோக்கி ஓட்டம் பிடித்தான். தெருவில் நீட்டிக் கொண்டிருந்த இரக்கமற்ற கல் ஒன்று அவன் காலைத் தடுக்கி விட்டது. அவனைத் தலை குப்புற விழும்படிச் செய்து விட்டது.



தேகத்தில் ஏற்பட்ட சிராய்ப்புகளின் வலிகூட அவனுக்குத் தெரியவில்லை. உடம்புக் காயங்களைப் பற்றிச் சிந்திக்கக்கூட நேரமின்றி அவன் மூளை சிந்தி பால் கொட்டி விட்டதற்காக என்னவித மான தண்டனை யளிப்பாளோ என்ற நினைவில் துடிக்க ஆரம்பித்தது.

மன்னித்து விடும்படி அப்பு இறைஞ்சிக் கதறிய தைப் பொருட்படுத்தாமல் பேய்போல் அரைமணி நேரம் அவனை மர்த்தனம் செய்தாள் ராஜேஸ்வரி.

இதயத்தின் அடிவாரத்திலிருந்த துயரத்தை நெஞ்சிலேயே தேக்கிக் கண்களை வடிகால்களாக்கி மௌனமாகக் கண்ணீர் பெருக்கிக் கொண்டே ரேழித் திண்ணையில் போய் உட்கார்ந்தான். எவ்வளவு நேரமென்று அவனுக்கே தெரியாது. அப் பேதைச் சிறுவனின் நிலையைக் கண்டு இரக்கங் கொண்டவள் போல் நித்திராதேவி அவனை அணைத்துக் கொண்டாள்.

அவன் கண் விழித்தபோது விடியற்காலை மூன்று மணி யிருக்கும். துயின்றபோது அவன் மறந் திருந்த பசியும், உடல் வலியும் மீண்டும் தலை தூக்கி வதைத்தன. துயரம் மீண்டும் அவனைக் கவ்வியது. யோசித்தான். எவ்வளவு நாள் இந்த அவல வாழ்வு! பெரிய பணக்காரரின் புதல்வனாக இருந்தும் பசியாறக் கூடச் சாப்பிட முடியாமல் வேலைக்காரனினும் கேவலமாக நடத்தப்படும் இந்த நிலையில் எவ்வளவு காலம் தள்ளுவது! இதைவிட அசல் வேலைக்காரனாகவே ஆகிவிட லாமே! வசை மாரியும், அடி உதைகளுமாவது இல்லாமலிருக்கு மல்லவா!

ஒரு முடிவுக்கு வந்து விட்டான் அப்பு. வீட்டைத் துறந்து வெளியேறி எங்காவது போய் வேலை செய்து பிழைத்துக் கொள்வது என்பதுதான் அவன் செய்த முடிவு.

ஓர் உற்சாகமும், தெம்பும் உண்டாயின அப்பு வுக்கு. எழுந்தான். சுற்று முற்றும் பார்த்தான். ஒருவருமில்லை. ராஜேஸ்வரி மாடியிலிருந்து இன் னும் எழுந்து வரவில்லை. அவனுடைய தந்தையோ வரவில்லை. மெள்ளச் சத்தமின்றித் தாழ்ப்பாளை நீக்கினான்; கதவைத் திறந்தான். தெருவில் இறங்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றான். எங்கு போவது என்ற லட்சியம் எதுவுமின்றிக் கால் போன திக்கில் போய்க் கொண்டிருந்தான்.

*　　　*　　　*

பல பல வென்று விடியும் தருணம். ரயில்வே ஸ்டேஷனருகில் வந்து சேர்ந்தான் அப்பு. தஞ்சை போகும் ரயில், ஸ்டேஷனில் நின்று கொண்டிருந் தது. அதைப் பார்த்ததும் ஸ்டேஷனுக்குள் புகுந்து ரயிலில் ஏறிக் கொள்ளப் போனான்.

"ஏலே, அப்புவாடா! எங்கே வந்தாய் இங்கே!" என்ற குரலைக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும் பினான் அப்பு. அக் குரலுக்கு உடையவர் இன்னா ரென்று தெரிந்ததும் அச்சமும் வியப்புங் கொண்டு ஸ்தம்பித்து நின்றுவிட்டான், பதில் கூற நாவெழாமல்.

இரண்டாவது வகுப்புப் பெட்டி யொன்றி லிருந்து அப்புவைத் திகைப்புடனும், வியப்புட னும் நோக்கிக் கொண்டிருந்தவர் அவனுடைய அம்மானுகிய அட்வகேட் காகாநதன் அவர்கள் தான். சென்னைவாசி. ஒரு கேஸுக்காகத் தஞ்சைக் குப் போய்க் கொண்டிருந்தார்.

"என்னடா பதிலைக் காணோம்! விழிக்கிறாயே!"

"மாமா......" என்று ஆரம்பித்த அப்புசாமி மேலே சொல்ல முடியாமல் விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டான். "என்னடா! ஏன்டா அழுகிறாய்!" என்று பதறினார் காகாநதன்.

"வீட்டிலிருந்து சொல்லாமல் ஓடிவந்து விட் டேன் மாமா! இந்த ரயிலில் ஏறி எங்கேயாவது போய்விடலாம் என்று இங்கே வந்தேன்."

மாமா திகைத்து விட்டார். "ஏன்டா அசடு! சொல்லாமல் யாராவது வீட்டை விட்டு ஓடுவார் களா!......" அவர் முடிப்பதற்குள் ரயில் ஓர் முறை ஊதிவிட்டுப் புறப்பட யத்தனித்தது.

"இந்த வண்டியில் வந்து ஏறிக்கோடா! உம்."

அப்புசாமி ஏறிக்கொண்டான். விம்மித் திண றிக் கொண்டு கண்ணீர் பெருக்கியபடி தன் சோக சரிதையை அவரிடம் சொன்னான்.

அவன் வரலாற்றைக் கேட்ட காகாநதன் கலங் கித் துடித்துக் கண்ணீர் வடித்தார். அப்பு இவ் வளவு கொடுமைப்படுத்தப்படுகிறான் என்ற விஷ யம் அவருக்குத் தெரியாது. அவருடைய தங்கை —அப்புவின் அன்னை— இறந்த பிறகு இரண்டு முறைதான் அவர் கும்பகோணத்துக்கு வந்திருக் கிறார். எங்கோ அவ்வூர் வழியாகப் போகும் போது அப்புவைப் பார்ப்பதற்காக இறங்கினார் அங்கே. சில மணி நேரந்தான் அவர்கள் வீட்டில் தங்கினார். அப்புவின் நிலைமையை அவர் எவ்வாறு அறிய முடியும்!

தஞ்சையிலிருந்து திரும்பும்போது தம்மோடு அப்புவையும் சென்னைக்கு அழைத்துப் போய்விட் டார் காகாநதன். அப்பு தம்மிடமிருக்கிறான், தேடவேண்டியதில்லை யென ஜகந்நாதனுக்குத் தந்தி கொடுத்தார். ராஜேஸ்வரி 'சனி விட்டது' என்று அகமகிழ்ந்தாள். "வீட்டை விட்டு ஓடத் துணிந்த அக் காலியை மீண்டும் இங்கே அழைத் துக்கொண்டு வரக் கூடாது" எனக் கணவனுக் குக் கட்டளை யிட்டாள். அவளை மீறிக் காரியம் செய்யும் துணிவு ஜகந்நாதனுக்கு ஏது!

# வனப்பை அடையுங்கள்

100% சுத்தமான எண்ணெயை மூலப் பொருளாகக் கொண்ட, கேரளா ஸாண்டல்வுட் ஸோப்பிலுள்ள சந்தன எண்ணெய் சருமத்தை வளர்ப்பதோடு உண்மையான அழகிற்கு அவசியமான கதகதப்பையும் உயிரையும் உங்கள் சருமத்திற்கு அளிக்கிறது இதன் மிருதுவான கிரீம் போன்ற நுரை நீடித்த பரிமளத்துடன் உங்கள் சருமத்திலுள் நன்றாக வேலை செய்து அதை மிருதுவாகவும் வழவழப்பாகவும் செய்கிறது.

## கேரளா
## ஸாண்டல்வுட்
## சோப்




சருமத்தை
அழகுபடுத்துகிறது

கேரளா ஸோப் இன்ஸ்டிட்யூட், கோழிக்கோடு

டிபார்ட்மென்ட் ஆப் இன்டஸ்ட்ரீஸ் அன்டு காமர்ஸ்,
கவர்ன்மென்ட் ஆப் மதராஸ்.

SISTA'S-ES-16-(TAMIL)




# சூடான அல்லது குளிர்ந்த 'ஓவல்டின்' எல்லா காலங்களுக்கும் உகந்த பானம்!

ஒரு டின் 'ஓவல்டின்' வீட்டில் எப்பொழுதுமே தயாராக வைத்திருந்தால் வருஷத்தில் எந்த சமயத்திலும் உங்களுக்கு புஷ்டி தரும் பானத்தைப் பற்றிய கவலையே யிருக்காது. குளிர் காலத்தில் கடச்சட ஒரு கப் ஒவல்டின் பருகினால் குளிர் மறைந்து போகும்; கடும் வெயில் காலத்தில் குளிர்ந்த ஒவல்டின் பருகினால் சோர்வு நீங்கி புத்துணர்வு ஏற்படும். கவனியுங்கள்—ஆரோக்கியம் ததும்பும் ஒவல்டினில் ஆடைநிரம்பிய சுத்தமான பசும்பால், பழுத்த பார்லி மால்ட், சிறந்த கொக்கோ, பி & டி விடமின்கள் இருக்கின்றன. ஆகவே ஒவல்டின் உங்களுக்கு இன்றியமையாதது.



இந்த ருசி மிகுந்த உணவு பானம் வருஷம் முழுவதற்கும் உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து சக்தியை அளிக்கும். உங்கள் கடையில் 'ஓவல்டின்' கேளுங்கள்.

விநியோகஸ்தர்கள்:
கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) லிட்.

## ஓவல்டின்

சூடாகவோ, குளிர்ந்த பானமாகவோ பருகலாம்

OV.395

நாகநாதனுடைய பரிவு மிக்க அரவணைப்பில் வளர்ந்த அப்பு பி. ஏ. பி. எல்., பாஸ் பண்ணி அட்வகேட் ஆனான். மாமாவின் ஜூனியராக இருந்து அவரிடம் வேலை கற்றுக் கொண்டான். அவருடைய ஏக புதல்வியையும் மணந்துகொண்டான். அப்புவின் கல்யாணத்துக்குக்கூட அவன் தந்தையும் சிற்றன்னையும் வரவில்லை.

* * *

ஒரு நாள் ஜகன்னாதன் திடீரென்று காலமாகி விட்டார் என்று தந்தி கிடைத்தது அப்புசாமிக்கு. கும்பகோணம் சென்றான். பதினைந்து வருஷங்களாகப் பார்க்காத தந்தையை இறுதியில் பிணக் கோலத்தில் காண முடிந்த தன் துர்ப்பாக்கியத்தைக் குறித்துக் கதறினான்.

பதின்மூன்று தினங்களும் அங்கேயே இருந்து தந்தையின் கர்ம காரியங்களைச் செய்தான் அப்பு. பழைய நாட்களைப் போல் அவனிடம் வெறுப்பையோ, அதிகாரத்தையோ துவேஷத்தையோ காட்டவில்லை ராஜேஸ்வரி. முன்போல் அவள் கையை எதிர்பார்த்துக் கொண்டு ஏங்கி நடுங்கி நின்ற சிறுவன் அப்புவா அவன்! அந்தஸ்தும் கௌரவமுமுள்ள அட்வகேட் அல்லவா!

பதின்மூன்றும் நாளிரவே அப்புசாமி சென்னைக்குக் கிளம்பத் திட்டமிட்டிருந்தான். அன்றுமாலை ராஜேஸ்வரி அவனிடம் வந்தாள். "இன்றைக்கே கிளம்பணுமா அப்பு! இரண்டு நாள் இருந்து விட்டுப் போகக் கூடாதா!" என்று உபசரித்தாள்!

"இருப்பதற்கில்லை. ஏகப்பட்ட வேலையிருக்கிறது" என்று அவளை நிமிர்ந்து பார்க்கக்கூட மனமின்றி எங்கோ கூரையைப் பார்த்த வண்ணம் பதிலளித்தான் அப்பு.

"கடைசி வரை உங்கப்பாவுக்கு உன் மீதிருந்த கோபம் குறையவே இல்லை" என்று பரிதாபப் படுகிறாப் போல் முகத்தை வைத்துக் கொண்டு அவள் ஆரம்பித்தாள். பின்னால் வரப்போகும் ஏதோ பெரிய—முக்கியமான— விஷயத்துக்கு இது பூர்வ பீடிகை என்பதை ஊகித்துக் கொண்டான் அப்பு. "என்ன செய்வது! என் பாக்கியம் அவ்வளவுதான்" என்றான் அவன்.

"'நான் செத்தால்கூட அந்தப் பயல் எனக்குக் கர்மம் பண்ண வேண்டியதில்லை' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருப்பார்."

"உம்!"

"எனக்குத் தாங்க முடியாத தலை குனிவை உண்டாக்கிவிட்ட அந்தப் பயல் ஏழேழு ஜன்மத்துக்கும் என் சத்துரு. இங்கே சோற்றுக்குப் பஞ்சமா; துணிக்குப் பஞ்சமா! எதற்காக இன்னொருவன் வீட்டில் வயிறு வளர்க்க வேண்டும்! ஊரார் நம்மை எவ்வளவு கேவலமாகப் பேசுகிறார்கள்!' என்று அடிக்கொரு தடவை வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்."

"அதுவுந்தவிர 'அந்தப் பயலுக்கு என் சொத்தில் பைசாக்கூடக் கொடுக்கப் போவதில்லை. எல்லா சொத்தும் என் சுயார்ஜிதம். அவன் கோர்ட்டுக்குப் போனால் கூடச் செல்லாது' என்று வேறு சொல்லுவார். ஏதோ கோபத்தில் சொல்லுகிறார், நாளாவட்டத்தில் எல்லாம் சரியாகிவிடும், சமாதானமடைந்து விடுவார் என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன். 'திடு திப்'பென்று ஒரு நாள் என்ன பண்ணினார் தெரியுமா!"

"நான் இன்னும் ஜோஸ்யம் ஆருடம் ஒன்றும் கற்றுக் கொள்ளவில்லை" என்றான்.

"ஒரு உயில் எழுதிக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார். அவருடைய சொத்து முழுதும் இரண்டாந்தாரத்தின் குமாரர்களாகிய பாலுவையும் ரகுவையும் சேர வேண்டியது என்றும், மூத்த தாரத்தின் பிள்ளையாகிய அப்பு அவருடைய வெறுப்புக்கும் அதிருப்திக்கும் ஆளாகி விட்டமையால் அவனுக்குத் தம்முடைய சுயார்ஜித சொத்தில் பங்களிக்கச் சம்மதிக்கவில்லையென்றும் கண்டிருந்தது. எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. விளையாட்டெனவே எண்ணிக் கொண்டிருந்தது வினையாகி விட்டதே என்று கலங்கித் துடித்தேன். உனக்குத் துரோகம் செய்யக் கூடாது, அது தர்மமில்லையென்று கண்ணீருடன் அவரை வேண்டிக் கொண்டேன்."

வந்த சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான் அப்பு. ராஜேஸ்வரி தொடர்ந்தாள்: "என் வேண்டுகோள் பயனளிக்கவில்லை. உன் அப்பா ஒரே மூர்க்கமாயிருந்தார். 'மீண்டும் ஒரு தரம் அந்தத் துரோகியின் பேச்சை யெடுத்தால் இந்த வீட்டை விட்டு நீ வெளியேறி விட வேண்டியது தான்' என்று என்னைக் கடுமையாக எச்சரித்தார். அடிக்கக் கூட வந்து விட்டார். அவரை மீறி நான் என்ன செய்ய முடியும் அப்பு!"

"வாஸ்தவம்! என்ன செய்ய முடியும்!"

"இப்போது அவர் போய் விட்டாரே, உன் பங்கை யளித்து விடலாம் என்று கூட எண்ணினேன். என் மனப்பூர்வமான அபிப்பிராயமும் அதுவே. இருந்தாலும் இறந்தவரின் இஷ்டத்துக்கு விரோதமாகச் செய்யத் தயக்கமாயிருக்கிறது. அப்படிச் செய்தால் அவர் ஆத்மா சாந்தியடையுமா! புருஷனைத் தெய்வமாகப் போற்றும் எனக்கு அவருக்குத் துரோகம் செய்யத் துணிவு உண்டாகுமா!"

"உண்டாகாது. அப்படி உங்களுக்குத் துணிவுண்டாகி விட்டாலும் தந்தையின் அபிப்பிராயத்துக்கு மாறாக நடக்க எனக்கு மனம் வராது. அவர் இஷ்டப்படியே இருக்கட்டும். அச்சொத்து எனக்கு வேண்டாம்" என்று கூறி விட்டான்.

சந்துஷ்டியும் திருப்தியும் கலந்த பெருமூச்சு ஒன்று ராஜேஸ்வரியிடமிருந்து வெளி வந்தது. "அந்த உயில் கூட இருக்கிறது பார்க்கிறாயா!"



ஒரு குரல் (தனியாகச் செல்லும் வழிப் போக்கனிடம்):—ஐயா, தயவு செய்து, வேலையில்லாமல் தவிக்கும் ஒரு ஏழைக்கு ஏதேனும் உதவி செய்ய மாட்டீர்களா? என்னிடம் இந்தக் கூர்மையான கத்தியைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது!

"அவசியமில்லை. புருஷனைத் தெய்வமெனப் போற்றும் நீங்கள் கூடவா பொய் சொல்லப் போகிறீர்கள் !'' என்றான்.

ஒரு கணம் அப்புவைப் பற்றி நல்லபிப்பிராயம் ராஜேஸ்வரிக்குக் கூட உண்டாயிற்று !

அன்றிரவு சென்னை சென்று விட்டான் அப்பு. மூன்று வருடங்கள் ஓடி விட்டன. பிறகு இன்று தந்தி கிடைத்ததும் கும்பகோணத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

கூடத்தில் முடங்கிக் கொண்டு கிடந்த ராஜேஸ்வரியின் அப்போதைய தோற்றத்தைக் கண்டு அப்பு அப்படியே ஸ்தம்பமாய் நின்று விட்டான். உலர்ந்து வற்றி, கண்கள் குழி விழுந்து, முகம் ஒளி குன்றி வெறும் எலும்புக்கூடாக இப்படி அப்படி அசையவும் சக்தியற்றுக் காலனை எதிர்நோக்கிக் கொண்டு கிடந்த அந்த உருவம் தான் சில வருஷங்களுக்கு முன் ஒப்பற்ற எழிலும் கட்டுமஸ்தான உடலும் கொண்டு ஜகன்னாதனை இஷ்டப்படி ஆட்டி வைத்து அக் குடும்பத்தின் சர்வாதிகாரிணியாக விளங்கி வந்த கர்வம் மிகுந்த ராஜேஸ்வரி என்பதை அவனால் நம்ப முடியவில்லை. அவளுடைய அந்த நிலை அவள் அவனுக்கு இழைத்திருந்த சொல்லொணாக் கொடுமைகளையும் மீறி அவன் கண்களில் நீர் துளிக்கச் செய்து விட்டது.

"அம்மா ! அப்பு அண்ணா வந்திருக்கிறான் பார்'' என்று ரகுவும் பாலுவும் ஏக காலத்தில் கூறினார்கள், பரிதாபத்தோடு கண்ணீரையடக்கிக் கொண்டு. "வந்து விட்டானா !'' அக் குரலில்தான் எவ்வளவு ஆர்வம்! மகிழ்ச்சி! முகத்தில் ஓர் நிமிஷப் பிரகாசம் தோன்ற, எங்கோ பார்த்துக் கொண்டிருந்த ராஜேஸ்வரி அப்பு பக்கம் திரும்பினாள்.

"குழந்தாய் ! இப்படி வா ! பக்கத்தில் வந்து உட்கார் !'' என்றாள் அன்புடன்.

"குழந்தாய்'' என்று அப்புவை அவள் கூப்பிட்டது அதுதான் முதல்தடவை. ஈனசுரத்தில் இணறிக்கொண்டே வெளி வந்த அக் கட்டளையை அப்புவால் மீற முடியவில்லை. பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, "சித்தி ! உடம்பை என்ன செய்கிறது !'' என்று கனிவுடன் கேட்டான்.

உலர்ந்த அவள் உதடுகளில் ஓர் விரக்திப் புன்னகை தோன்றிற்று.

"உடம்பா ! ஒன்றுமில்லை. யமனிடமிருந்து ஓலை வந்திருக்கிறது. அதற்குள் உன்னைப் பார்த்து விடவேணும் என்றுதான் உனக்குத் தந்தி கொடுக்கச் சொன்னேன்.''

"யமனாவது. மெனாவது சித்தி ! வீணாக அலட்டிக் கொள்ளாதீர்கள் ! இன்னும் நெடுங்காலம் உயிரோடிருக்கப் போகிறீர்கள்.''


"நான் குழந்தையல்ல, அப்பு ! இப்படி யெல்லாம் தைரியம் கூறுவதால் நான் பிழைத்துவிடவும் போவதில்லை. சாகப் போவதைப் பற்றிக் கவலையுமில்லை எனக்கு. அதற்குள் உன் மன்னிப்பைப் பெற்றுவிட வேண்டுமே யென்று ஏங்கிக் கொண்டிருந்தேன். நீ வராமலிருந்து விடுவாயோ எனத் தவித்துக் கொண்டிருந்தேன். உத்தமன் நீ ; வந்து விட்டாய் ; நான் பாக்கியசாலி ! நான் மன்னிக்கப்படுவேன். நீ என்னை மன்னிப்பாய் என்ற உறுதி எனக்குண்டாகிவிட்டது...'' ஓரேயடியாய் இரைக்க வாரம்பிக்கவே சிரமம் தாங்காமற் சற்று நிறுத்தினாள் அவள்.

"என்ன சித்தி இது ! மன்னிப்பாவது, கின்னிப்பாவது ! யார், யாரை மன்னிப்பது ! வீணாக அலட்டிக் கொள்ளாதீர்கள் ! இந்தப் பேச்செல்லாம் இப்பொழுது வேண்டாம்.''

"குழந்தாய் அப்பு ! என்றுமே உனக்குப் பெருங் குணம் ; பெருந்தன்மையே உருவான உன் பேச்சும், பெரும் பேச்சாக வருகிறது. ஆச்சரியமில்லை. நான் உனக்குச் செய்த கொடுமை கொஞ்சமா நஞ்சமா !'' மேலே அவளைப் பேச விடாமல் அடிவயிற்றிலிருந்து சீறிக் கொண்டு வந்த பயங்கரமான இருமல் ஒன்று இடைமறித்தது.

அவள் இருமி ஓய்ந்ததும் "சித்தி ! இந்த நிலைமையில் அதிகம் பேசாமலிருப்பது நலம். பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றான் அப்பு.





# பாய்வதற்கு முன் பார்த்துச்செய்

டிராம்பேயில் எமது ரிஃபைனரி அமைக்கும் வேலையின் இரண்டாவது பகுதி இப்போது பூர்த்தியடைந்து விட்டது. நவீன சாதனங்களையும் நுணுக்க முறைகளையும் வைத்துக்கொண்டு எமது கண்ட்ராக்டர்கள் பூமிக்கடியில் அடி மண்தளத்தையும் அதற்கடியில் உள்ள பாறை நிலைகளையும் கடந்துருவித்துளைத்து விடுகிறார்கள். இதிலிருந்து நாங்கள் பல விஷயங்கள் தெரிந்து கொள்கிறோம். பாறை அமைப்புகளின் சாம்பிள்கள் அவ்வப்போது பூமி மட்டத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன. அவற்றிலுள்ள தண்ணீர் நஷ்டமாகாதிருப்பதற்காக அவை மெழுகினுள் தோய்த்துக் கொண்டுவரப்பட்டு விமானமூலம் ஆராய்ச்சிக்காக லாபரேட்டரிகளுக்கு அனுப்பப்படுகின்றன. நிபுணர்கள் அதன் பேரில் ஆராய்ச்சி நடத்தி எந்தெந்த பாகங்கள் கனமான கட்டிடஅமைப்புகளைத் தாங்கக் கூடியவையாக இருக்கின்றன என்பதை எடுத்துக் கூறுகிறார்கள். மேலும் எமது ரிஃபைனரி யூனிட்டுகளுக்கு எவ்வளவு ஆழமாக அஸ்திவாரங்கள் போடவேண்டும் என்பது பற்றியும் அவர்கள் யோசனை கூறுகிறார்கள். உதாரணமாக கடினமான நிலபாளம் உள்ள இடம் வரையில் தோண்டி விட்டால் சரியான, பத்திரமான இடம் கிடைத்துவிட்டது என்று நாம் கருதுகிறோம். இத்தகைய பாறைஅமைப்பு தேடுங்காலம் தாங்கக்கூடியதாகவும், அபரிமிதமான பளுவுள்ளதாகவும், எப்பேர்ப்பட்ட கனமான கட்டுக் கோப்பையும் தாங்கி நிற்கக் கூடியதாகவும் இருக்கிறது. அஸ்திவாரம் கட்ட வேண்டும் என்கிற அவசியமில்லை. நிர்வாக இலாகா கட்டிடம் மற்றும் சிலகட்டிடங்கள் இந்த இனத்தில் சேரும்.

டிராம்பேயில் நடைபெறும் இந் நிகழ்ச்சிகளெல்லாம் புதிய பர்மா-ஷெல் ரிஃபைனரியானது மிகவும் வலுவான அஸ்திவாரத்தின்பேரில் கட்டப்பட்டு வருகிறது என்பதை ஸ்திரப்படுத்துகின்றன. அந்த ஸ்தலத்தை நீண்டகாலம் நாங்கள் உபயோகிக்கப் போகிறோம். எனவே இந்த முக்கியமான கட்டிடத்தின் பெருவான சிரத்தை எடுத்துக்கொள்வது நல்லதுதான அல்லவா?

**பர்மா-ஷெல்... பாரத நாட்டின் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறது**

**BURMAH-SHELL... IN INDIA'S LIFE AND PART OF IT**

"ஓய்வு! நிரந்தரமான, எல்லையற்ற ஓய்வு என்னை ஆட்கொள்ள விரைந்து வந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு மணியோ, அரை மணியோ தான் பாக்கி! பிறகு ஒரே ஓய்வுதான். ஆனந்தந்தான், நிம்மதிதான். யாரும் என்னைப் பின்தொடர்ந்து வந்து என் அமைதியை—ஆனந்தத்தைக் கலைக்க முடியாது. அதற்குள் நான் கூறவேண்டியதை யெல்லாம் கூறிவிடவேண்டும்; கூறத்தான் போகிறேன். தயவுசெய்து இடை மறிக்காமல் கேள்!" மீண்டும் இருமல்.

ராஜேஸ்வரி தொடர்ந்தாள் "அப்பு! நான் பாவி, வஞ்சகி துரோகி ராட்சஸி! பெண்ணுருவில் வந்த பேய்! உன்னை எப்படி யெல்லாம் வதைத்தேன்!" அவள் குரல் தழு தழுத்தது. கண்கள் நீரைப் பொழிந்தன. அப்புவின் கரங்களை யெடுத்துத் தன் கரங்களில் வைத்துக் கொண்டாள்.

"குழந்தாய்! என் ஹிம்சை தாங்காமல்தானே நீ வீட்டை விட்டு ஓடினாய்! உன்னை வதைத்ததின் பலனை அனுபவிக்கிறேன். இரண்டு வருஷங்களாக இந்த க்ஷயரோகத்துக்கு இரையாகி நான் படும்பாடு ஆண்டவனுக்குத் தெரியும். உன் அப்பாவின் கடைசிக் காலத்தில் அவருடைய கடும் வெறுப்புக்கும் ஆளாகி விட்டேன். என்னால்தான் நீ வீட்டை விட்டு ஓடினாய் என்பதை அவர் உணர்வார். ஆயினும் அப்போது என் மீதிருந்த மோகத்தினால் என்னை ஏதும் கண்டிக்கவில்லை. உன்மீது அவருக்கு அசாத்திய பாசம். ஆயினும் எனக்குப் பயந்து வெளிக் காட்டாமலிருந்தார். உன் கல்யாணத்துக்கு வரவேண்டும் என்று அவருக்கு ரொம்ப ஆவல். அதையும் நான்தான் தடை செய்தேன். அன்று முதல் என்னைப் பூரணமாக வெறுக்க ஆரம்பித்தார் அவர். போன தடவை நீ வந்திருந்த போது உயில் சமாசாரம் சொன்னேனே, அதுவும் என்னுடைய நிர்ப்பந்தம் தாளாமல் அவர் எழுதியதுதான். அதை எழுதிக் கொடுக்க—உனக்குத் துரோகம் செய்ய—ரொம்பவும் தயங்கத்தான் செய்தார். ஆயினும், கிணற்றில் விழுந்து விடுவதாகக் கூறி நான் மிரட்டி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணவே மானத்துக்கு அஞ்சி வேண்டாவெறுப்பாக அதை எழுதிக் கொடுத்தார்.

"அன்று முதல் என்னை வெறுக்க வாரம்பித்தார். பேசுவதும் கிடையாது. நாளாக ஆக என்னுடைய இழி குணத்தைக் கண்டும், உனக்குச் செய்து விட்ட வஞ்சனையை எண்ணியும் மனமுடைந்து, தேகம் மெலிந்து ஒரு நாள் உயிரையும் விட்டு விட்டார். அவர் இறந்ததைக் குறித்துக் கூட நான் வருத்தமடையவில்லை; சிறிது மகிழ்ச்சி கூட அடைந்தேன்! அவர் உயிரோடிருந்தால் முதலில் எனக்கு எழுதிக் கொடுத்த உயிலை ரத்து செய்து, தன் சொத்துக்களெல்லாம் மீண்டும் உன்னையே வாரிசாக்கி வேறு உயில் எழுதி விடக் கூடு

## கோட்டையூர்த் திருமணம்

சென்ற மே மாதம் 19உ செட்டி நாட்டில் ஓர் அற்புதத் திருமணம் நடந்தது. கோட்டையூர் ஸ்ரீ K. V. AL. RM. ராமநாதன் செட்டியார் அவர்கள் செல்வக் குமாரத்தி வசந்தாவுக்கும் கொத்தமங்கலம் ஸ்ரீ சின்னக் கருப்பனுக்கும் நடந்த கோலாகலமான திருமண வைபவத்தைத்தான் குறிப்பிடுகிறோம்.



மேற்படி திருமணத்துக்குப் போட்டிருந்த கொட்டகைக்குக் கொட்டகையாக மேகக் கூட்டங்கள் திரண்டு வந்து கொட்டகை போட்டு அன்று முழுவதும் கோட்டையூரைக் குளுமைமயமாக்கின.


கல்யாணத்தன்று சுமார் பதினாயிரம் ஏழைமக்களுக்கு அறுசுவையுடன் கூடிய அன்னதானம் வழங்கப்பட்டது.

வந்திருந்த பிரமுகர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொண்டார்கள். நண்பர்கள் அவரவர்கள்வீட்டுக்கல்யாணமாகப் பாவித்து வந்தவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தார்கள்.

துங்கபத்திரா மந்திராலயத்தின் அதிபர் ஸ்ரீலஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்தார்.

இதை யெல்லாம் பார்த்தபோது ஒரு ஆங்கில அறிஞர் சொன்ன வாக்கு ஒன்று ஞாபகத்துக்கு வந்தது. "உலகம் மூன்று பொருள்களால் இயங்குகிறது. ஒன்று மின்சாரம், இரண்டு வெப்பம், மூன்று அன்பு" என்று சொன்னார்.

கோட்டையூர் ஸ்ரீ ராமநாதன் செட்டியார் அவர்களின் அன்பின் சக்தியால் மேற்படி திருமணம் அவ்வளவு சிறப்பாக நடந்தது. வாழ்க மணமக்கள்! வாழ்க பல்லாண்டு!



# பாதி விலை

ஸ்விட்ஜர்லாந்திலிருந்து ஏராளமாகத் தருவிக்கப்பட்ட கடிகாரங்களில் பாதிக்குமேல் விற்பனையாகி விட்டன. இப் பாதி விலை சலுகை இன்னும் இரண்டு வாரங்களுக்கு மேல் நீடிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு 15, 17 ஜுவல் கடிகாரமும் 8 வருஷமும் மற்றவை ஒரு வருஷமும் உத்தரவாதம் கொண்டவை. ஒவ்வொரு கடிகாரத்துடனும், ஒரு காரண்டி சர்டிபிகேட்டும், ஒரு நேர்த்தியான ஸ்ட்ராப், ஒரு வெல்வெட் பெட்டியும் இனாமாகக் கொடுக்கப்படும். பாக்கிங், விற்பனை வரி, தபால் செலவு இலவசம். ஆர்டர்கள் வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.

## இலவசம்

புது வருஷ காலண்டரும், மடக்கக் கூடிய ஜிப்பும் இணைக்கப்பட்ட தையல் இல்லாத அமெரிக்கன் பிளாஸ்டிக் மணிபர்ஸ் ஒன்றும் ஒவ்வொரு கடிகாரத்துடனும் இலவசமாக அனுப்பப்படும்

குறைந்த விலைகளின் விவரம் கீழ்க்காணுமாறு:



**வாட்டர் ப்ரூப், ரேடியம் சைஸ் 10½**

| நெ. | | ரூ. |
|---|---|---|
| 1 | க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் | 49/- |
| 2 | ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் | 51/- |
| 15 | க்ரோம் ஸ்டீல்பேக் 17 ஜுவல்ஸ் | 59/- |
| 16 | ரோ.கோ. ஸ்டீல்பேக் 17 ஜுவல்ஸ் | 61/- |



**சிறிய ரவுண்டு சைஸ் 6¾**

| நெ. | | ரூ. |
|---|---|---|
| 21 | பிளேட் க்ரோம் கேஸ் 4 ஜுவல்ஸ் | 22/- |
| 22 | பிளேட் க்ரோம் கேஸ் 7 ஜுவல்ஸ் | 29/- |
| 3 | க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் | 39/- |
| 4 | ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் | 41/- |



**சென்டர் செகண்ட் சைஸ் 9¾**

23 பிளேட் க்ரோம் கேஸ் 7 ஜுவல்ஸ் 30/-
5 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 39/-
6 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 41/-



**வளைவு சைஸ் 7¾**

24 ரோ.கோ. ஸ்டீல்பேக் 5 ஜுவல்ஸ் 30/-
7 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 39/-
8 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 41/-



**டன்ரோ சைஸ் 6¾**

9 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 39/-
10 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 41/-



**லேடீஸ் சைஸ் 5¼**

11 ரோ.கோ. ஸ்டீல்பேக், ஸில்க் ஸ்ட்ராப், பென்ஸில் டைப் 15 ஜுவல்ஸ் 50/-



**லேடீஸ் சைஸ் 5¼**

25 ரோல்டு கோல்டு ஸ்டீல்பேக் ஸில்க் கார்டுடன் 15 ஜுவல்ஸ் 50/-



**ரவுண்டு சைஸ் 8¾**

26 பிளேட் க்ரோம் கேஸ், ஜேடி பிரிண்ட் ரேடியம் டயல் 22/-

**PEARL WATCH CO., FORJETT STREET, BOMBAY-26**



இன்ஸ்பெக்டர் (குற்றவாளியைப் பார்த்து):—முன்பு ஒரு சமயம், மறுபடியும் உன்னை நான் இங்கே பார்க்கக் கூடாது என்று சொல்லவில்லையா?

குற்றவாளி:—ஆமாம், அது உண்மை தாநுங்க! ஐயா முன்னே சொன்னதை இந்தப் போலீஸ்கார ஐயா கிட்டே எவ்வளவோ தடவை சொன்னேன். அவரு நம்பவில்லேங்க!

மல்லவா! உன் தந்தை இறந்த மறு வருஷம் இக் கொடிய நோய் என்னைப் பிடித்தது. எவ்வளவோ வைத்தியம் செய்து கொண்டும் குணமாகவில்லை. நாளுக்கு நாள் முற்றிக் கொண்டு வந்தது.

"ஆறு மாதங்களுக்கு முன் ஒரு நாள் உன் அப்பாவின் புஸ்தக அலமாரியைத் தூசி தட்டிப் புஸ்தகங்களை அடுக்கி வைக்கச் சொன்னேன் வேலைக்காரியை. அலமாரியில் புஸ்தகங்களை அடுக்கி வைக்கையில் ஓர் புஸ்தகத்துக்குள்ளிருந்து விழுந்ததாக காகிதமொன்றைக் கொண்டு வந்தாள் அவள். பிரித்துப் படித்தேன் அதை. அது ஓர் உயில்! பழைய உயிலை ரத்து செய்து சொத்து அனைத்துக்கும் உன்னை ஏகபோக வாரிசாக்கி உன் அப்பா எழுதி வைத்திருந்த உயில்! அவர் இறப்பதற்கு முதல் நாள் தேதி போட்டிருந்தது அதில். அவ்வுயிலை உனக்குச் சென்னைக்கு அனுப்பத் திட்டமிட்டிருந்தார் என்பதையும், அதற்குள் காலன் அவர் உயிரைப் பறித்துக் கொண்டு போய் விட்டான் என்பதையும் ஊகித்துக் கொண்டேன்.

"எப்படி யிருக்கு மெனக்கு! உன் தந்தை மீதும் உன் மீதும் ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. என் உணர்ச்சிகளை வெளிக் காட்டாமல் அடக்கிக் கொண்டு வேலைக்காரியிடம் அது ஏதோ உபயோக மற்ற காகிதம் என்று புளுகி விட்டேன்.

"அவ்வுயிலைக் கிழித்துப் போட்டுவிட வேண்டுமென்ற துர்எண்ணந்தான் முதலில் உண்டாயிற்று எனக்கு. ஆயினும் அதற்குத் துணிவு ஏற்படவில்லை. ஏனெனில் கொடும் நோயினால் நான் அநுபவித்துக் கொண்டிருந்த துன்பம் என் மனப் போக்கில் ஒரு மாறுதலை ஏற்படுத்த ஆரம்பித்திருந்தது. நான் செய்திருந்த பாபங்களின் விளைவுதான் இக் கொடிய நோய் என்ற உண்மை என் மனத்தின் ஒரு மூலையில் துளைக்க ஆரம்பித்திருந்தது. எனவே இன்னொரு தீச்செயலை புரிந்து என் பாபச் சுமையை அதிகரித்துக் கொள்ள எனக்குத் தயக்க மேற்பட்டு விட்டது. 'போகப் போகப் பார்த்துக் கொள்ளலாம்' என்று அந்த உயிலை எடுத்துப் பத்திரப் படுத்தினேன்.

"என் நோய் முற்ற முற்ற என் மனோதைரியமும் வலுவடைந்து கொண்டே வந்தது. நான் பிழைக்க மாட்டேன் என்ற நிச்சயமான எண்ணம் நேற்றுக் காலையே எனக்கு உண்டாகி விட்டது. உன்னைப் பார்த்துக் கதறி என் குற்றங்களை ஒப்புக்கொண்டு உன் மன்னிப்பைப் பெறாவிட்டால் அடுத்த ஜன்மத்திலும் எனக்கு நிம்மதியும் சாந்தியும் கிட்டாது என்று உறுதியாகத் தோன்றி விட்டது. அதனால் தான் உன்னைத் தருவிக்கச் சொன்னேன். குழந்தாய்! என்னை மன்னித்தேன் என்று சொல்! உனக்குச் சேரவேண்டிய உயில் இதோ இருக்கிறது; பெற்றுக்கொள்" என்று தன் மெலிந்த கரங்களினால் தலையணையின் கீழிருந்த அவ்வுயிலை எடுத்து அப்புவின் கரங்களில் வைத்தாள்.

அவள் கூறிய வரலாற்றைக் கேட்டு வியப்பும் திகைப்புமுற்று எதுவும் சொல்லக்கூட வாயெழாத நிலையிலிருந்தனர் அப்புவும், அவளுடைய குமாரர்களும்.

"அப்பு! உன்னுடைய உடைமையை உன்னிடம் ஒப்புவித்து விட்டேன். அதோடு உன் தம்பிகளிருவரையும் உன்னிடம் ஒப்புவிக்கிறேன். அவர்கள் சிறுவர்கள். உலகமறியாதவர்கள். தாய் தந்தையற்ற அநாதைகள். அவர்களிருவரையும் முன்னுக்குக் கொண்டு வரவேண்டியது உன் பொறுப்பு; உன் கடமை என்றாள்."

அவளுடைய குமாரர்களிருவரும் கேவிக் கேவி அழவாரம்பித்து விட்டார்கள். அப்புவின் கண்களிலும் நீர் வழிந்தோடிற்று. "சித்தி! உங்கள் கட்டளையை நிறைவேற்றுவேன்; இது சத்தியம்! என் தம்பிகளை முன்னுக்குக் கொண்டு வருவேன். நிச்சயமாய் நம்புங்கள். அது மாத்திரமன்று. அப்பாவின் சொத்து முழுமையும் அவர்களை அடையும்படி செய்வேன்! ஆண்டவன் அருளால் எனக்குச் சமாரான வரும்படி வந்து கொண்டிருக்கிறது. என் மாமாவின் சொத்தும் எனக்குத் தான். இந்தச் சொத்து எனக்கெதற்கு சித்தி! நீங்கள் வாய் நிறையக் 'குழந்தாய்!' என்றழைத்தீர்களே, அது ஒன்றே போதும் எனக்கு. அன்னையின் பரிவான சொற்கள்—இல்லை, ஓரே ஒரு சொல்லாவது—என்னை அழைக்குமா, என் காதுகளையும் இதயத்தையும் குளிரச் செய்யுமா, உடலைப் புளகாங்கித மடையச் செய்யுமா என்று எவ்வளவு தாகத்துடனிருந்தேன் தெரியுமா? சித்தி, அப்பேறு எனக்குக் கிட்டிவிட்டது! நான் தன்யனானேன். அதைவிட அப்பாவின் சொத்தா பெரிது! நான் சொல்லுவது உறுதி என்பதை இதோ நிரூபிக்கிறேன்" எனக்கூறிய அப்பு, சித்தி கொடுத்த உயிலைச் சுக்குச் சுக்காகக் கிழித்தெறிந்தான்! "இனி இருப்பது ஓரே உயில்தான் சித்தி! அதன்படி சொத்தனைத்துக்கும் பாலுவும் ரகுவுந்தான் வாரிசுகள்!" என்றான்.

திடுக்கிட்ட ராஜேஸ்வரியின் கண்களில் நன்றியும், மகிழ்ச்சியும் கலந்து ஒளியுண்டாக்கின. "அப்பு! நீ தெய்வம். நீ உத்தமன்; மனிதர்களிடையே உயர்ந்தவன்" என்று அப்புவின் கரங்களை யெடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். ஒரு பெரிய இருமல்; அதுதான் இப்பூவுலகில் அவள் கடைசியாகச் செய்த காரியம்.

அவள் உடலில் உயிரில்லை யெனினும் அபார மனத் திருப்தியுடன்தான் அவள் உயிரை விட்டாள் என்பது மலர்ந்து விளங்கிய அவள் முகத்திலிருந்து நன்றாகத் தெரிந்தது.

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras







# நீங்கள் எங்கிருந்தாலும்...

# ஹிமாலயா புக்கே ஸ்நோ

## உபயோகியுங்கள்.

ஏனென்றால் இது பிரத்தியேகமாக இந்தியாவின்
சீதோஷ்ணத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டது

சீதோஷ்ண நிலை எப்படி இருந்தாலும்—இந்தியாவில் நீங்கள் எங்கிருந்தாலும், ஹிமாலயா புக்கே ஸ்நோ உங்கள் சருமத்தை அதிக மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்கிறது. இதன் நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்.

இன்னுமொரு நேர்த்தியான இராஸ்மிக் தயாரிப்பு

HBS. 7-X30 TM

இராஸ்மிக் லிமிடெட், லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.

REGD. No. M 4392
*Registered as a newspaper in Ceylon*

